விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

32°c - 25°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 100 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 22, சனிக்கிழமை 05.03.2016

## மே 16 ஆம் திகதி தமிழகத் தேர்தல்

சென்னை, மார்ச் 5
தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் எதிர்வரும் மே 16 ஆம் திகதி இடம்பெறுமென இந்தியத் தேர்தல் ஆணையகம் அறிவித்துள் ளது.
இதன்படி, தமிழகத்தின் பக். 24

## தேசியக் கொடி ஏற்றினார் விக்கி

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில்



யாழ்ப்பாணம், மார்ச் 5
வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றியதைத் தொடர்ந்து. பக். 25

## பலாலி விமானத்தள விஸ்தரிப்புக்காக
# மக்களின் காணிகள் பறிக்கப்படமாட்டா

### யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் மீள்குடியேற்ற அமைச்சர்

யாழ்ப்பாணம், மார்ச் 5
இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையில் விமானப் போக்குவரத்தை மேற்கொள்ளும் பிராந்திய விமான நிலையமாகவே பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்படும். சர்வதேச விமான நிலையமாக ஒருபோதும் அமைக்கப்படாது. பிராந்திய விமான நிலைய விஸ்தரிப்புக்கும் மக்களின் காணிகள் எடுக்கப்படமாட்டாது.
இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.
வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தின் முன்னோடி மாதிரி வீடு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உரும்பிராயில் 21 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வீடு பக். 23



21 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள வீட்டின் தோற்றம்

## சித்திரைப் புதுவருடத்துக்கு முன் சொந்த இடம் செல்லவேண்டும்

### வலியுறுத்தி வலி.வடக்கு மக்கள் நேற்று உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5
வலி.வடக்கு மக்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு கோரி நேற்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
சித்திரைப் புதுவருடத்துக்கு முன்பதாகத்தமது காணிகளில் பக். 06



முச்சந்தி முரளி



அப்ப ... இனி ஈழப் பிரச்சினை ஓங்கி ஒலிக்கும் பாருங்கோ

## யாழ். ஊடகங்கள் மீது சுவாமிநாதன் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், மார்ச் 5
யாழ்ப்பாணத்தில் அமைக்கப் படும் பொருத்தும் வீட்டுக்கு (பிற் றிங்) எதிராக ஊடகங்கள் செயற்படுகின்றன என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் குற்றம் சுமத்தினார்.
அத்துடன், இங்கு மேற்கொள் ளப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கு ஊடகங்களே எதிர்ப்பாக இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.
வடக்கு - கிழக்கில் அமைக்கப்படும் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தின் முன்னோடி மாதிரி வீட்டை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் பக். 23

## மன்னார் புதைகுழி வழக்கில் சி.ஐ.டியினர் அசமந்தப் போக்கு

### அரச சட்டவாதியை நியமிக்க கட்டளையிட்டது நீதிமன்று

யாழ்ப்பாணம், மார்ச் 5
மன்னார்-திருக்கேதீஸ்வரம் புதைகுழி வழக்கில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் அசமந்தப் போக்கில் இருப்பதால், அந்த வழக்கைச் சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்று அரச சட்டவாதியை நியமித்து நெறிப்படுத்துமாறு பக். 06

## 14 கைதிகளினதும் உடல் நிலை மோசம்

கொழும்பு, மார்ச் 5
நீண்டகாலமாக விசாரணைகளின்றித் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தம்மை விடுவிக்க அரசு உடன்நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக்கோரி கொழும்பு, மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நிலை ஆபத்தான நிலையில் உள்ளது என்று அவர்களின் உறவுகள் நேற்றுத் தெரிவித்தனர்.
உண்ணாவிரதக் கைதிகளின் உடல்நிலை கவலைக்கிடமாக பக். 23

## காதலை ஏற்க மறுத்தமையால் வித்தியா திட்டமிட்டுக் கொலை

### இப்படிச் சொல்கிறது பொலிஸ்; அது பொய் என்கிறது குடும்பம்

புங்குடுதீவு, மார்ச் 5
புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுக்கொலை செய்யப்பட்டமைக்குக் காதல் விவகாரமே காரணம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.
இந்தக் கொலையின் சூத்திரதாரி எனப் பொலிஸார் கூறும் சிவதேவன் துஷாந்தனின் காதல் கோரிக்கையை நிராகரித்த வித்தியா, அவரைச் செருப்பால் தாக்கியதன் காரணமாகவே, சந்தேகநபர்கள் திட்டமிட்டு அவரைக் கொலை செய்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தக் கொலையில் சந்தேக நபர்களாகக் கைது செய்யப்பட்டுள்ள 5 பேர் இந்த விவகாரத்தில் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தனர் என்றும் ஏனையவர்களில் சிலருக்கு கொலைக்கு முன்பே அது தெரிந்திருந்தது என்றும் சிலருக்கு கொலை நிகழ்ந்த பின்னர் அது பற்றித் தெரிந்திருந்தது என் றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
துஷாந்தனின் காதலை நிராகரித்தமை காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவிப்பதை வித்தியாவின் குடும்பத்தினர் மறுக்கின்றனர். தமக்குத் தெரியாமல் அப்படி ஒரு காதல் சம்பவம் இடம்பெற்றிருக்க வாய்ப்பே இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.
வித்தியா படுகொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கூட்டுக் கொள்ளைப் பிரிவின் பொறுப்பதிகாரி நிசாந்த சில்வா விசாரணை அறிக்கையைச் சிங்களத்தில் முன்வைத்தார்.
(முழுமையான செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## தொடர் படுகொலைகளால் தெற்கில் பெரும் பதற்றம்

### நேற்றும் ஒருவர் சுட்டுக்கொலை

| | |
|---|---|
| ஜனவரி 02 | - அகுனுகொலபெலஸ்ஸவில் இருவர் படுகொலை |
| ஜனவரி 10 | - அம்பலன்தொட பகுதியில் ஒருவர் படுகொலை |
| பெப்ரவரி 07 | - அக்குரஸ்சையில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் காயம் |
| பெப்ரவரி 16 | - பலப்பிட்டிய நீதிமன்ற வளாகத்தில் ஒருவர் சுட்டுக் கொலை |
| பெப்ரவரி 28 | - வீரகெடியவில் ஒருவர் சுட்டுக்கொலை; இருவர் காயம் |
| மார்ச் 02 | - தெமட்டகொடை சமிந்த மீது சூடு |
| மார்ச் 03 | - கம்புறுப்பிட்டிய ஹர்ஷ சுட்டுக் கொலை |
| மார்ச் 04 | - கொச்சிக்கடையில் ஒருவர் சுட்டுக்கொலை |

கொழும்பு, மார்ச் 5
தென்னிலங்கையில் பாதாளக் குழுக்களினதும், சட்டவிரோத ஆயுதக்குழுக்களினதும் அடாவடி நடவடிக்கைகள் மீண்டும் பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலை ஏற்க மறுத்தமையால் வித்தியா திட்டமிட்டுக் கொலை

## இப்படிச் சொல்கிறது பொலிஸ்; அது பொய் என்கிறது குடும்பம்

புங்குடுதீவு, மார்ச். 5

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டமைக்குக் காதல் விவகாரமே காரணம் என்று பொலிஸார் கூறுகின்றனர். இந்தக் கொலையின் சூத்திரதாரி எனப் பொலிஸார் கூறும் சிவதேவன் துஷாந்தனின் காதல் கோரிக்கையை நிராகரித்த வித்தியா அவரைச் செருப்பால் தாக்கியதன் காரணமாகவே சந்தேகநபர்கள் திட்டமிட்டு அவரைக் கொலை செய்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலையில் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டுள்ள 5 பேர் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தனர் என்றும் ஏனையவர்களில் சிலருக்கு கொலைக்கு முன்பே அது தெரிந்திருந்தது என்றும் சிலருக்கு கொலை நிகழ்ந்த பின்னர் அது பற்றித் தெரிந்திருந்தது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

துஷாந்தனின் காதலை நிராகரித்தமை காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவிப்பதை வித்தியாவின் குடும்பத்தினர் மறுக்கின்றனர். தமக்குத் தெரியாமல் அப்படி ஒரு காதல் சம்பவம் இடம்பெற்றிருக்க வாய்ப்பே இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

வித்தியா படுகொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கூட்டுக் கொள்ளைப் பிரிவின் பொறுப்பதிகாரி நிசாந்த சில்வா விசாரணை அறிக்கையை சிங்களத்தில் முன்வைத்தார்.

சந்தேகநபர்களில் 4 பேருக்குப் பிணை வழங்கும்படி அவர்களின் சட்டத்தரணிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. குற்றச்சாட்டுக்கள் இன்றி அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சட்டத்தரணிகள் முன்வைத்த வாதத்தை பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகி இருந்த சட்டத்தரணிகள் நிராகரித்தனர். விசாரணைகள் முழுமையாக முடிவடையும் வரையில் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க்கூடாது என்று அவர்கள் வலியுறுத்தினர். அதைத் தொடர்ந்து விசாரணையை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான் சந்தேகநபர்களின் விளக்கமறியலையும் அத்தினம் வரை நீடித்தார்.

விசாரணைகள் தொடர்பான முதற்கட்ட அறிக்கை நீதிமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் வித்தியா கொலை தொடர்பாகப் பொலிஸார் தெரிவித்ததாவது:

காதல் விவகாரமே இந்தக் கொலைக்கு அடிப்படை. புங்குடுதீவைச் சேர்ந்தவரும் பிரதேச சபையில் பணியாற்றுபவருமான சிவதேவன் துஷாந்தனே வன்புணர்வு மற்றும் கொலைகளின் சூத்திரதாரி. அவர் வித்தியாவைக் காதலித்தார். அதனை வித்தியாவிடம் கூறியபோது, அதனை ஏற்பதற்கு வித்தியா மறுத்துவிட்டார். அதன் பின்னரும் விடாமல் வற்புறுத்தியதைத் தொடர்ந்து ஒரு கட்டத்தில் வித்தியா தனது செருப்பைக் கழற்றி, துஷாந்தனை அடித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த துஷாந்தன், வித்தியாவைக் கடத்தி வன்புணர்வதற்குத் திட்டமிட்டார். அதனைச் செயல்வடிவத்துக்குக் கொண்டுவர அவர் ஏனைய சந்தேகநபர்களைத் துணைக்கு அழைத்துள்ளார். தான் இவ்வாறு செய்யப்போகிறார் என்று சுவிஸ் குமார் எனப்படும் மகாலிங்கம் சசிக்குமாருக்கு அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

மாணவியைக் கடத்துவது உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களும் சுவிஸ் குமாருக்கு முன்னரே தெரியும். அவரின் முழு ஆசீர்வாதத்துடன் தான் இந்தக் குற்றம் புரியப்பட்டது. நீ என்ன வேண்டும் என்றாலும் செய். நான் பார்த்துக் கொள்கிறேன் என்று துஷாந்தன் உள்ளிட்டவர்களுக்கு சுவிஸ் குமாரே ஊக்கமளித்துள்ளார்.

திட்டமிட்டபடி மே மாதம் 13ஆம் திகதி வித்தியாவைக் கடத்தியுள்ளனர். அந்த நேரம் மழை பெய்து கொண்டிருந்தது. வித்தியாவின் சைக்கிளில் குடை இருந்துள்ளது. அவர் வழமையாகச் சென்று வரும் பாதையூடாகவே அவர் அன்றைய தினமும் சென்றிருந்தார். அவர் செல்லும் பாதையில் ஓரிடத்தில், பாதையை மூடி வெள்ளம் நின்றுள்ளது. அதனைக் கடினப்பட்டே கடக்க வேண்டும். அவ்வாறு கடினப்பட்டுக் கடந்து சில அடிதூரம் சென்றதும் வித்தியா வழிமறிக்கப்பட்டார். தடுத்து நிறுத்தப்பட்டார். பின்னர் அவர் சைக்கிளுடன் அருகில் இருந்த பற்றை மறைவுக்குள் இழுத்துச் செல்லப்பட்டார்.

வித்தியாவை இழுத்துச் சென்றவர்கள் சந்தேகநபர்களான பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் ஆகியோரே. அவர்கள் இருவரும் சகோதரர்கள். இந்த இருவருமே சம்பவத்தை ஆரம்பித்து வைத்தவர்கள். இறுதியில் வித்தியாவைக் கொலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தியவர்களும் இந்த இருவர்தான்.

சகோதரர்கள் இருவரும் வித்தியாவை பற்றை மறைவுக்கு இழுத்துச் சென்றதும் மேலும் மூன்று பேர் அங்கு வந்தனர். துஷாந்தன், தில்லைநாதன் சந்திரகாசன் ஆகியோர் அவர்களில் இருவர். இவர்களுடன் இருந்த மூன்றாவது சந்தேகநபர் நேற்றுமுன்தினம்தான் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த 5 பேருமே வித்தியாவை வன்புணர்ந்த பின்னர் கொன்றார்கள்.

அவர்கள் ஐவரும் முதலிலேயே மது அருந்தியிருந்தனர். போதையில் இருந்தனர். நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேகநபரே அவர்களுக்கு கஞ்சா போதைப் பொருளை அங்கு கொண்டு வந்து கொடுத்துள்ளார். போதைப் பொருள் விற்பனைக்காக ஏற்கனவே நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட குற்றவாளி அவர். கஞ்சாவையும் அருந்தியதாலேயே அவர்கள் மிகக் கொடூரமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கொலையைக் கடற்படையினரே செய்தார்கள் என்று கதையைப் பரப்புவதற்கும் இவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். சந்தேகநபர்களாக உள்ள சகோதரர்களில் ஒருவர் ஏற்கனவே நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஏனைய சந்தேகநபர்களான பூபாலசிங்கம் இந்திரகுமார், மகாலிங்கம் சசீந்திரன், பரநிருபசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகுலன் ஆகியோருக்கு வித்தியா கொலை தொடர்பில் தகவல்கள் தெரிந்திருந்தும், அது பற்றி அவர்கள் வாயே திறக்கவில்லை. ஏதோ ஒருவகையில் குற்றம் நடக்கவுள்ளமை பற்றியும் நடந்தமை பற்றியும் தெரிந்திருந்தும் அது பற்றிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்காது மறைத்து, இந்தக் கொலைக்கு உடந்தையாக இருந்துள்ளனர். பியவர்த்தன ராஜ்குமார் மீதான விசாரணை இன்னும் தொடர்கிறது.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும 12ஆவது நபரைக் கைது செய்யவேண்டியிருக்கிறது - என்கிறார்கள் பொலிஸார்.

காதல் விவகாரம்தான் இந்தக் கொலைக்கு மூல காரணம் என்று பொலிஸார் கூறுவதை வித்தியாவின் குடும்பத்தினர் அடியோடு மறுக்கிறார்கள். அப்படி யாராவது தன்னைக் காதலிப்பதாகச் சொல்லியிருந்தால்கூட அதனைத் தங்களிடம் கூறியிருப்பார் வித்தியா என்று அவர்கள் அடித்துக் கூறுகின்றனர். அந்தளவுக்கு குடும்பத்தினருடன் அன்னியோன்னியமான உறவை வித்தியா கொண்டிருந்தார் என்றும், பொலிஸார் கூறுகின்ற இந்த கதை பொய்யானது என்றும் அவர்கள் ஆணித்தரமாக நம்புகிறார்கள்.

இந்த வழக்கில் மரபணுச் சோதனை அறிக்கை நீதிமன்றில் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. முதலில் கைது செய்யப்பட்டவர்களின் ஆடைகளிலிருந்து இரத்த மாதிரியும் வித்தியாவின் உடலிலிருந்த இரத்த மாதிரியும் ஒன்றுடனொன்று ஒத்துப் போகின்றதா என்பது பற்றிய அறிக்கை, வித்தியாவின் கண் இமையிலிருந்து எடுக்கப்பட்ட விந்தணுவும் சந்தேக நபர்களின் விந்தணுவும் ஒத்துப் போகின்றதா என்பது பற்றிய அறிக்கை, வித்தியாவின் உடலிலிருந்து மீட்கப்பட்ட சந்தேக நபர்களினது என்று நம்பப்படும் உரோமம் என்பது பற்றிய அறிக்கை உள்ளிட்ட எந்தவொரு அறிக்கையும் நீதிமன்றில் முன்வைக்கப்படவில்லை. அவற்றைச் சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் கோருகின்றபோதும் இன்னும் அது நடக்கவில்லை.

விசாரணை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். அதற்கு ஒத்துழைக்கும் வகையில் ஏதாவது தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர். 0778 50 3002 அல்லது 0773 291500 என்ற இலக்கத்துக்கு அறியத்தருமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தபோது, இந்தச் சம்பவம் ஏற்றுக் கோள்ளமுடியாத செயல், கடவுளின் ஆசியுடன் இதற்கு நீதி கிடைக்கும் என்று நம்புகிறேன் என்று நீதிவான் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நேற்று சட்டத்தரணிகளான கே.சுகாஷ் மற்றும் அ.றஞ்சித்குமார் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். எதிரிகளில் 10 ஆவது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி ஜோய்மகிழ் மகாதேவாவும் ஏனையவர்களில் 3 எதிரிகள் சார்பில் தென்பகுதியைச் சேர்ந்த சட்டத்தரணியும் முன்னிலையாகியிருந்தனர். (உ-4)

# தீர்வுத் திட்டத்தை ஏற்காமைக்கு மனம் வருந்தினாராம் பிரபாகரன்

## இப்போது சொல்கிறார் சந்திரிகா

தாம் வழங்கிய அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாமைக்காக, தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வருந்தினார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தாம் ஜனாதிபதியாக ஆட்சி வகித்த காலத்தில், அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்ததாகவும் அதனை பிரபாகரன் நிராகரித்திருந்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

எம்மால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாமைக்காக, பிரபாகரன் பின்னர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

லண்டனில் பணியாற்றும் அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று வரும் நபர் ஒருவரிடம் பிர்பாகரன், இவ்வாறு அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என வருத்தம் தெரிவித்துள்ளார்.

குறித்த தீர்வுத் திட்டத்தில், சிங்களத் தலைவர் ஒருவரினால் வழங்கப்படக் கூடிய அதிகபட்சமான விடயங்களை நாம் வழங்கியிருந்தோம். மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இனவாதத்தூண்டுதல்கள் அதிகரித்துள்ளதனால், தற்போதைய தலைமைகளுக்கு, தமிழர்களுக்கு நாம் வழங்கிய அளவிற்கு அதிகாரங்களை வழங்க முடியாது - என்றார். (த-வ-சி)

# மகா சிவராத்திரிக்கு விசேட பஸ் சேவைகள்

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் திங்கட்கிழமை விசேட பஸ் சேவைகளை நடத்தவுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் காலை 7 மணி முதல் பருத்தித்துறையிலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கான விசேட பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான ஆசனப் பதிவுகளை பருத்தித்துறைசாலையில் மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஜ-422)

# மகா சிவராத்தி விழா

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தின் மகா சிவராத்திரி விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

நான்கு கால சாமப் பூஜையுடன், கலை நிகழ்வுகளாக கஜமுகாசூரன் வதம் நாடகமும், சத்தியவான் சாவித்திரி வில்லிசையும், மற்றும் பல கலை நிகழ்ச் சிகளும் நடைபெறவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (த-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் சான்றிதழ் பெற சம்மதித்த குடும்பங்களுக்கு வீடுகள்

சாவகச்சேரி,மார்ச் 5

தென்மராட்சிப் பிரதேசத்தில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளின்போது சான்றிதழ் பெறச் சம்மதம் தெரிவித்த குடும்பங்களில், வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் குணபால பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார்.

சான்றிதழ் பெற விண்ணப்பிக்கும் குடும்பங்களுக்கு அதற்கான இழப்பீட்டை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், இந்தக் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவிகளையும் சுய தொழில் முயற்சி உதவிகளையும் வழங்குமாறும் அவர் அறிவித்துள்ளதுடன், வீடில்லாத குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கூறியுள்ளார்.

கடந்த வாரம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் காணாமற்போனோர் விசாரணை ஆணைக்குழுவின் அமர்வுகள் இரு நாள்கள் இடம்பெற்றன.

ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் 4 ஆணையாளர்கள், சட்டமா அதிபர் அலுவலகத்தைச் சேர்ந்த சட்ட உதவியாளர் போன்றோர் விசாரணைகளை நடத்தினர். விசாரணைக்கு தென்மராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இரு தினங்களும் விசாரணையில் கலந்துகொள்ள 347 பேருக்கு அழைப்புகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுப்பட்ட போதிலும் 273 பேரே கலந்து கொண்டு சாட்சியமளித்தனர்.

அந்தவேளையில் 50 இற்கும் மேற்பட்ட மக்கள் சான்றிதழ் பெற விருப்பம் தெரிவித்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

இதன் பிரகாரம் சான்றிதழ் பெற விருப்பம் தெரிவித்த குடும்பங்களுக்கு உடனடியாகக் குடும்ப நிலைக்கேற்ப இழப்பீடு வழங்கவும், அந்தக் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் மற்றும் சுய தொழில் முயற்சி உதவிகள் வழங்குமாறும் ஆணைக்குழுவின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் சான்றிதழ் பெறுவதற்குச் சம்மதம் தெரிவித்த வீடில்லாத குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்குமாறும் ஆணைக் குழுவின் செயலாளர் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார்.

(த-ஜ-9)

# கைதிகள் விடுதலை வேண்டி சிவ மந்திரத்தை எழுதுங்கள்

## வாசுதேவக் குருக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 5

அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டியும், விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு மக்கள் விரைவில் குடியமரவும், மீனவ மக்களது வாழ்வாதாரப் பிரச்சினை தீரவும் பாதிக்கப்பட்ட மக்கள் இயன்றவரை ஐந்தெழுத்து மந்திரத்தை ஆயிரக் கணக்கில் எழுதுங்கள் என வீணாகான குருபீட குருமார் சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ. சபா. வாசுதேவக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நமசிவாய ஐந்தெழுத்தை மக்கள் அனைவரும் இயன்றவரை எழுதியும், ஓதியும் வாழ்வில் ஏற்படும் தீர்க்கமுடியாத பிரச்சினைகளைகளில் இருந்து விடுதலை பெறுங்கள்.

எமது பிரதேசத்தில் கல்வி, ஒழுக்கம்மேலோங்கவும் இளைஞர், யுவதிகள் வாழ்வு உயர்வடையவும், அமைதியும், ஆனந்தமும் கிடைத்திட சிவனை எண்ணிப் பிரார்த்தியுங்கள்.

சிவனின் ஐந்தெழுத்து மந் திரத்தை எழுதி ஒரு வார காலத்துக்குள் வீணாகான குருபீடத் தில் சமர்ப்பியுங்கள். அவை அனைத்தும் பங்குனிமாத சிவ விரத நன்னாளில் இந்து சமுத்திரத்தில் பெருவிழாவாகச் சமர்ப்பணம் செய்யப்படும்-என்றார்.

(த-ஐ-ரி)

# போரினால் வெளிநாடு சென்ற 279 குடும்பங்கள் மீள்குடியமர்வு

## கிளிநொச்சி மாவட்டத்தில்

கடந்த காலப் போர் காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இந்தியா உட்பட வெளிநாடுகளுக்குச் சென்ற மக்களில் இதுவரை 279 குடும்பங்கள் மீள்குடிமர்ந்துள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்திலேயே குறித்த விடயம் தெரிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்ற மக்களில் 265 குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் குடிமர்ந்துள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 127 குடும்பங்களைச் சேர்ந்த 594 பேரும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 84 பேரும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 147 பேரும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 26 குடும்பங்களை சேர்ந்த 65 பேரும் என மொத்தமாக 279 குடும்பங்களைச் சேர்ந்த 890 பேர் மீளக்குடியமர்ந்துள்ளதாக அந்தப் புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-ஜ-21-ரி3)

**தாதியர் ஒன்று கூடல் நிகழ்வு**

**இடம்:** யாழ் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி.

காலம் : 05.03.2016

நேரம்: மாலை 5 மணி

மேற்படி நிகழ்வில் எமது வைத்தியசாலையில் பணிபுரிந்து ஓய்வில் சென்ற/ மாற்றலாகிச் சென்ற சகல அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(c 29743)
(12.18.20)

**தாதிய உத்தியோகஸ்தர்**
**நலன்புரி கூட். சங்கம்**
**போதனா வைத்தியசாலை , யாழ்ப்பாணம்.**

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 04.03.2016 | 1950 | சிவப்பு |

துலாம்

வெற்றி இலக்கங்கள்

25 30 31 48

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி

ரூ. 2,458,060/-

Tel: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

2016-03-06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.

நியத்த ஜய

வெற்றி வாரம் : 442
திகதி : 04.03.2016
வர்ணம் : நீலம்

வாசி தஹச

விஷேட வெற்றி இலக்கம்

2286

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை

ரூ 13,134,080/-

வெற்றி இலக்கங்கள்

01 10 45 54

ஆங்கில எழுத்து

F

Tel: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ
1919
Tel: 08 4 824 824

08.03.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.

**Study in Latvia ( Europe)**
**Schengen Visa( Valid for 25 Countries)**



**Why Study In Latvia?**

* Bachelors / Master / Doctoral level
* Government Approved University
* English Medium
* IELTS Not Required
* Easy Visa procedures
* Very low course fee
* Low cost of living
* 20 Hours part time Allowed

Admission open for Sep- 2016
Spot Admission April-2016

iCS Study Overseas

Admission Help line
076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06

**வளர்ப்பு கலர் மீன்கள் விற்பனைக்கு**

அனைத்து விதமான வளர்ப்புக் கலர் மீன்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புக்கு : மல்ரி பாம் பெட்பரடைஸ்
941, K.K.S வீதி, தட்டாதெருச்சந்தி
யாழ்ப்பாணம்.
021 2217600, 075 9880000

**வான் வாடகைக்கு தேவை**

ஐந்து வருடங்களுக்குள் பதிவுசெய்யப்பட்ட ஆறு இருக்கைகளும் குளிரூட்டி வசதிகளும் உடைய வான் 6 மாதங்களுக்கு வாடகைக்கு தேவை.
வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்க.

தொடர்புகளுக்கு :
021 2226239, 077 3151500

**நிர்வாக உதவியாளர்**

30வயதுக்குட்பட்ட சிறந்த ஆங்கில புலமையுள்ள கணினி பிரயோகத்தில் உயர்தகைமையுடையவர்கள் சுய விவரகோவையுடன் சான்றிதழ் பிரதிகளை இணைத்து கீழேயுள்ள முகவரிக்கு உடன் அனுப்பவும்.

இல-154, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்

**மாபெரும் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி 60km**

யாழ்ப்பாணம் கொட்டடி கற்குளம்
**ஸ்ரார் சனசமூக நிலையம்**
42 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தும்
**60km துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி**



காலம்
**19.03.2016 சனிக்கிழமை**
**காலை 6 மணி**

விண்ணப்பம்
500/-

தலைவர்: 0770191062
ஸ்ரார் சனசமூக நிலையம்
கற்குளம் ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணம்.

(69832)(10.17)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 09.03.2016
Batch 2 : 12.03.2016
Batch 3 : 14.03.2016
Batch 4 : 16.03.2016

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
0770 365 728
0777585913, 0777222422, 071429935

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Vacancy

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நட்சத்திர அந்தஸ்துடைய ஹோட்டல் ஒன்றுக்குப் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

STAFF REQUIRED FOR AN UPCOMING STAR CLASS HOTEL IN JAFFNA)

* FRONT OFFICE / RECEPTION - FEMALES ARE ENCOURAGED TO APPLY
* CASHIERS
* ACCOUNTANTS
* QUEST RELATION OFFICER - FEMALE (Age Below 35 Yrs)
* FOOD & BEVERAGE STAFF
* KITCHEN STAFF
* HOUSE KEEPING STAFF
* GARDENERS
* STEWARDS / HELPERS
* POOL ATTENDANT

Requirements - English Knowledge, Computer Skills & Pleasant Looking, Forward your CV'S To- infor@thethinnai.com Before 12th March

மேலதிக விபரங்களுக்கு: 076 752 8628



## மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்றுநோ கருச்சிதைவு மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைகளுக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இன விருத்திக்கான சிகிச்சைகளும் IVF, ICSI யும் கொடை முட்டை Donor (Egg) விந்து நன்கொடை Donor Sperm போன்ற சிகிச்சைகளையும் ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்திய சாலையில் அளித்து வருகின்றார். இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக்குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்புகளுக்கு : திருமதி கௌரி
இல : 077 343 9988
021 221 9988, 021 221 9977 , 021 222 2263



## பொதுக்கூட்ட அறிவித்தல் - 2016

மு.குமுழமுனை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமானது நாளை 06.03.2016 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைத்துப் பழைய மாணவர் களையும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு வித்தியாலயத் தின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 330 1428 ( செயலாளர் O.S.A)
பழைய மாணவர்சங்கம்,
மு/குமுழமுனை மகாவித்தியாலயம்.
(A/29605)(1,18,20)



## தேவை

☼ யாழ் நகரில் இயங்கி வருகின்ற பிரபல நட்சத்திர ஹோட்டலிற்கு யாழ்ப்பாண பாரம்பரிய முறையில் சமைக்கக் கூடிய சமையல் கலை தெரிந்த முப்பது வயதிற்கு மேற்பட்ட பணிப் "பெண்" தேவை.

(காலை 9மணி முதல் 2மணி வரை)

☼ சுத்திகரிப்புப் பணியாளர் " ஆண்" உடன் தேவை.

(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்) (69799) (14,18)

தொடர்புகளுக்கு: 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2829, 077 221 5167



## Jaffna College Institute of Technology Vaddukoddai

Established in 1974 under the management council of the Board of Directors of Jaffna College

*Courses Commence in 2nd Week of March 2016*

***Diploma Course**
**Civil Draughtsmanship** *(full time) - 1 year*
(Building Construction, Construction Materials, Sanitary, Draughtsmanship Drawing, Surveying, AutoCad, English, Maths & Quantity Srveying)

***Foundation in Information Technology (FIT)** *(Full time) - 6 Months*
Pre degree Course leads to Bachelor's of Information Tech nology (BIT)

Certification offered by University of Colombo School of Computing (UCSC), Sri Lanka.

A training institute registered with the Tertiary and Vocational Educational Commission (TVEC) under P25/0014.
(A/29544)(1,18,20)

**More information, Director, Jaffna College Institute of Technology - Vaddukoddai.**
021 321 3139
021 225 0978
Email: ejcit@sltnet.lk


# 19 கிராம சேவகர் தேவை இருப்பவர்களோ 12 பேர்

## புதுக்குடியிருப்பு மக்கள் சிரமம்

முல்லைத்தீவு,மார்ச் 5
முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 19 கிராம சேவகர்களின் தேவை இருக்கும்போது, தற்பொழுது 12 கிராம சேவகர்கள் மட்டுமே கடமையில் உள்ளதாகவும், இதனால் அத்தியாவசியமான அன்றாடத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற முடியாமல் திண்டாடுவதாகவும் மக்கள் தெரிவித்தனர். எனவே புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குக் மேலதிக கிராம உத்தியோகத்தர்களை நியமிக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போர் காரணமாகச் சகல சொத்துக்களையும், இழந்த நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் வெறும் கைகளுடன் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

ஆரம்பத்தில் 19 கிராம உத்தியோகத்தர்கள் கடமையாற்றிய இந்தப் பிரதேசத்தில் நாளடைவில் படிப்படியாகக் குறைந்து தற்பொழுது 12 கிராம உத்தியோகத்தர்கள் மட்டும் கடமையாற்றி வருகின்றனர். இதனால் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் தங்கள் அன்றாட தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள்.

கிராம சேவகர்களின் வெற்றிடங்களைச் சமாளிக்கும் வகையில் ஒரு கிராம உத்தியோகத்தர், இரு கிராமங்களைச் சமாளிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இந்த நிலை பல மாதங்களாகத் தொடர்வதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பி மக்களின் தேவைகளை விரைவாகச் செய்து முடிப்பதற்கு உதவுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

மக்களுடைய கோரிக்கை தொடர்பாகப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கிராமசேவகர்களைநியமிக்கும் அதிகாரம் பிதேச செயலருக்கோ, மாவட்டச் செயலருக்கோ இல்லை. நாங்கள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு மாவட்டச் செயலர் ஊடாக எத்தனை பேர் தேவை என்பதை அறிவித்திருக்கிறோம்.

தற்போது கிராம சேவையாளர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த நியமனங்கள் கிடைத்தவுடன் இவைகள் நிரப்பப்படும். ஒரு கிராம சேவையாளர் இரண்டு இடங்களைப் பார்க்கும்போது பிரச்சினை என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஏனென்றால் எங்கள் பகுதியில் சனத்தொகை குறைவாகவே காணப்படுகின்றது. அதனால் பெரிதாகப் பிரச்சினை இருக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. குறைபாடுகள் இருக்கலாம். சனத்தொகை குறைவு என்பதால் சேவையாற்றுவது கடினமன்று. புதிதாகக் கிராம சேவகர்கள் கிடைக்கும்போது அனைத்துப் பகுதிகளுக்கும் நியமிக்கப்படுவர் என நம்புகிறோம்-என்றார். (த-ஐ-21-10)

# மின்சாரம் தடைப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 5
ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக குறிப்பிட்ட தினங்களில் மின்சாரம் தடைப்படும்.

இன்று சனிக்கிழமையும், எதிர் வரும் 9 ஆம் திகதி புதன்கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5. 30 மணி வரை பாரதிபுரம், மலையாளபுரம், அம்பாள்குளம் ஆகிய இடங்களில் மின்சாரம் இடை நிறுத்தப்படும்.

இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் மாங்குளம் நகரம், டொன் பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், பாண்டியன்குளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத் திட்டம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக் குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், 66 ஆம் பிரிவு இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் இடை நிறுத்தப் படும்.

நாளை ஞாயிற்றுக்கிழமையும், எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் கிருஷ்ணபுரம், அம்பாள்குளம், விநாயகபுரம், பாரதிபுரம், விவேகானந்தநகர் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வட மாகாண மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (த-ஐ-ரி)


## சிவராத்திரி உற்சவம்

நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் 07.03.2016 திங்கள் கிழமை பிற்பகல் 4 சாம பூசைகளும், முதல் சாமம் 1008 சங்காபிஷேகம் தொடர்ந்து 3 சாமங்களிலும் 108 சங்காபிஷேகமும் நிகழும். 2ஆவது கால, லிங்கோற்ப காலத்தில் உற்சவம் நடைபெறும். 06.03.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு லச்சார்ச்சனைப் பூர்த்தியும் விஷேட ஹோமமும் நடைபெறும்.

"அனைவரும் வருக சிவனருள் பெறுக"

பிரதமகுரு
பிரம்மஸ்ரீ -
தானு வாசுதேவ சிவாச்சாரியார்

தேவஸ்தானம்,
ஆலய அபிவிருத்திச் செயலகம்.
(69824)(1,17,18)



## வயாவிளான் மக்களிற்கான அறிவித்தல்

26 ஆண்டுகளின் பின் வயாவிளான் மானம்பிராய் பிள்ளையார் ஆலயத்திற்கு நாளை ஞாயிற்றுக்கிழமை (06 ஆம் திகதி) சென்று பூஜை வழிபாடு செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் **அங்கஜன் இராமநாதன்** அனுமதி பெற்றுத் தந்துள்ளார். அனைத்து மக்களையும் நாளை காலை 8 மணியளவில் தமது அடையாள அட்டைகளுடன் வயாவிளான் பாடசாலைக்கு முன் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளிற்கு - 077 854 3782 - யோ.ரஜீவ்
077 [illegible] 1404 - சபேசன்
077 [illegible] 3442 - கணேசகுமாரன்


## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 5
கலைஞர் வேல் ஆனந்தனின் 'ஆடல் உலகில் எனது சுவடுகள்' எனும் நூல் வெளியீட்டு விழா, நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தவத்திரு தமிழ்நேசன் அடிகளாரும், கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கி வவுனியா பிரதேச முகாமையாளர் பொன் பாலகுமாரன், வவுனியா கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் திருமதி கிருபாகரி யோகராசா, கலாசார உத்தி யோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகி யோரும் கலந்து கொள்வர். இதன் போது வவுனியா மாவட்ட ஆடல் அணியின் ஆடலரங்கு அளிக்கையும் இடம்பெறும். (த-ஐ-7)

## திருவள்ளுவர் குருபூசை தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 5
இந்து சமய கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை விழி சிட்டி ஞான வைரவர் ஆலய சனசமூக நிலையத்தில் திருவள்ளுவர் குருபூசைத் தினம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது என யாழ். குருகுல அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செந்தூரன் தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி)

++++++ +++++++

யாழ்ப்பாணம்,மார்ச் 5
இந்து சமய கலாசார திணைக்களம் நடத்தும் திருவள்ளுவர் குருபூசைத் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாரந்தனை ஸ்ரீ தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை இந்து கலாசார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெயந்திரகுமார் உதயகலா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக வேம்படி உயர்தர பாடசாலை பிரதி அதிபர் செல்வி மேனகா கிஸ்ணபிள்ளையும், கௌர விருந்தினராக ஓய்வு பெற்ற கிராமசேவையாளர் க. சகாதேவனும் கலந்து கொள்வர். (த-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் பிரச்சினை; இலங்கை அரசுடன் பேசினேன்

## சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5
இந்திய மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, இலங்கை அரசின் தலைமைகளுடன் கலந்துரையாடியுள்ளதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.
இந்திய செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
இரு நாட்டு மீன்பிடித்துறை அமைச்சர்களும், எதிர்வரும் மே மாதம் சந்தித்து, இந்தப் பிரச்சினைக்கான தீர்வுப் பொறிமுறையை மேற்கொள்வார்கள்.
தமிழக மற்றும் புதுச்சேரி மீனவர்கள், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வேண்டுமெனக் கோரிமேற்கொண்ட பணிப்புறக்கணிப்பைத் தற்போது விலக்கிக் கொண்டுள்ள இந்த நிலையிலேயே சுஷ்மா



மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார். (த-ஐ-5)

# 12 குரு முதல்வர்களின் குருபூசைகளை நாடு முழுவதும் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 5
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்து சமய விவகாரப் பிரிவும், இந்து சமய அறநெறிக் கல்விப் பிரிவும் இணைந்து இந்த ஆண்டு 12 குருமுதல்வர்களதும் குருபூசைத் தினங்களை நாடு முழுவதிலும் உள்ள இந்து சமய அறநெறிப் பாடசாலைகளிலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
ஒவ்வொரு குரு முதல்வர்களுக்கும் உரிய குருபூசைத் தினங்களையொட்டித் தனித்தனியாக வழிபாடு இயற்றப்படும். அகில இலங்கை முழுவதிலும் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறநெறிப்பாடசாலைகளில்இவற்றை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
முதற்கட்டமாக திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை அனைத்து இந்து அறநெறிப் பாடசாலைகளிலும், திருவள்ளுவர் குருபூசை வழிபாடுகள் நடைபெற வுள்ளன.
இந்த நிகழ்வில் திருக்குறள் மனனம், திருவள்ளுவர், திருக்குறள் தொடர்பான பேச்சு ஆகியன நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் பங்குபற்றும் மாணவர்களுக்கு இந்து சமய கலாசாரத் திணைக்களத்தினால் பாராட்டுச் சான்றிதழ்களும், வழங்கப்படும்.
இந்த ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட 12 குருமுதல்வர்களில் ஒருவரான ஆறுமுகநாவலருக்கு, அவரது குருபூசையைச் சிறப்பிக்கும் வகையில் யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாடு நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி)

# உலக கலாசார விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 5
வாழும் கலை மனித நேயத்துக்கான சேவையின் 35 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உலக கலாசார விழா இந்தியாவின் புதுடில்லியில் எதிர்வரும் 11, 12, 13 ஆம் திகதிகளில் ஸ்ரீ ரவிசங்கர் தலைமையில் கொண்டாடவுள்ளதாக யாழ். வாழும் கலை அமைப்பின் பிராந்தியச் செயலாளர் செ. நாச்சியார் தெரிவித்துள்ளார்.
பிரதமர் நரேந்திரமோடி இந்தக் கலாசார விழாவை ஆரம்பித்து வைப்பார். இதன் போது உலகின் பல பாகங்களிலிமுள்ள உயரிய பாரம்பரியங்களைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற நாட்டிய இசை, கலை மற்றும் யோகா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.
ஆன்மிக மற்றும் சமயத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சமாதானத்தூதுவர்கள் மற்றும் கலைஞர்கள் போன்றோருக்கு விசேட வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். 3.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்த விழாவில் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-ஐ-ரி)

# ஆன்மிக விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,மார்ச் 5
ஆன்மிகப் பெருவிழா நிகழ்வும், கலாபூசணம் தம்பு துரைராசாவின் "வாழ்க்கைச் சுவடுகள்" நூல் வெளியீடும் திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையின் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன.
திருப்பணி தவமணி சி.தியாகராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன், இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் ஆகியோர் கலந்து கொள்வர். (த-ஐ-ரி5)

# விவசாயிகளுடனான கலந்துரையாடல்

வரணி, மார்ச் 5
வரணி வடக்கு விவசாயிகளுடனான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு வடவரணி விநாயகர் சனசமூக நிலையத்தில் இடம்பெற உள்ளதாக வரணி வடக்கு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் க.தியாகராசா அறிவித்துள்ளார்.
இதில் சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியை திருமதி ம.ஜெகசுதா கலந்து கொள்ள உள்ளதாகவும், பிரதேச விவசாயிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (த-ஐ-122)

# இந்தியர்கள் அறுவர் கொழும்பில் கைது

கொழும்பு, மார்ச் 5
சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைக்காக வந்து கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில்தங்கியிருந்ததாகச் சந்தேகிக்கப்படும் இந்தியர்கள் அறுவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.
வெள்ளவத்தை நகரிலுள்ள 7 மாடிக் குடியிருப்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.
எவ்வாறாயினும் இவர்கள் சிறு நீரக மாற்றுச் சத்திர சிகிச்சைக்காகவே இலங்கைக்கு வந்திருப்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.
கைது செய்யப்பட்ட இந்தியர்கள் அறுவரது வயிற்றுப் பகுதியில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இவர்களை இலங்கைக்கு அழைத்து வந்தவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.
இதேவேளை இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சிலரை அழைத்து வந்து, கொழும்பிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகளில் சட்டவிரோதமான முறையில் சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை வியாபாரம் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்ற சம்பவங்கள் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.
இந்த விசாரணைகளை இரகசியப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
மேலும் இந்த விவகாரத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படுகின்ற இலங்கையைச் சேர்ந்த 6 மருத்துவர்களுக்கு எதிராக இந்திய பொலிஸாரினால் அந்த நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இதனைத் தொடர்ந்து வெளிநாட்டவர்களுக்கான சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைகளை உள்நாட்டில் மேற்கொள்வதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

**தேவை**
யாழில் ஆஸ்பத்திரி வீதியில்
அமைந்துள்ள மருந்தகம் ஒன்றுக்கு
மருந்தாளர்(Pharmasite)
உடனடியாகத் தேவை. (66533)(12.19.20)
077 730 1455

**Group / Personal - Classes**
Eng /Tamil - Medium
Accounting - O/L, A/L
English - Any Grade
Arts Subjects - up to A/L
(69820)(11.17.18)
077 331 6402

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பம், பூரம்
3ஆம் பாதம், கிரகபாவம் 15½, 4இல்
செவ்வாய், வயது - 33, அரச வங்கி
முகாமையாளருக்கு மணமகள் தேவை
021 225 6070, 077 314 8249

**வேலையாள்கள் தேவை**
யாழ் நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு
★ முகாமையாளர்
★ காசாளர்
★ கொத்துரொட்டி போடுபவர்
★ அப்பம் போடுபவர்
★ பரிமாறுபவர்
போன்ற வேலையாள்கள் தேவை. 2 வருட முன் அனுபவம் உடையவர்கள் தொடர்பு கொள்ளவும்
077 078 2375 (66533)(12.19.20)
(காலை 07.00 மாலை 7.00
மணிவரை தொடர்பு கொள்ளவும்.

**மணமகள்கள் தேவை**
- 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய Phd விரிவுரையாளருக்கு B.Sc இற்கு மேல் படித்த மணமகள் தேவை.
- 87 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 18¼ பாவமுடைய Bsc முடித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த 23½ பாவமுடைய மிருகவைத்தியர் Rc மணமகனுக்கு படித்த Rc மணமகள் தேவை.
- 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 30 பாவமுடைய IT பட்டம் முடித்து லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 19 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 71 இல் பிறந்த 7இல் செவ்வாய் 42¾ பாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்கு ஆசிரியை மணமகள் தேவை.
- 88 இல் பிறந்த 7இல் செவ்வாய் 54 பாவமுடைய சொவ்வெயர் இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 74 இல் பிறந்த 1இல் சூரியனும் செவ்வாயும் 85பாவமுடைய பட்டதாரி மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 85 இல் பிறந்த 6இல் சூரியனும் செவ்வாயும் 26பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு : கமலக்கண்ணன் திருமண சேவை
[illegible]
077 607 0862

**நாய்க்குட்டி விற்பனைக்கு**
Lion German Shaperd இன 42 நாள் கொண்ட
ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
உண்டு. (60781)(14,18,)
தொடர்பு: 075 626 8997 (சாவகச்சேரி)

**வேலையாள்கள் தேவை**
மீசாலை, புத்தூர்ச் சந்தியில் இயங்கி
வரும் நிமல் வெல்டிங் கடைக்கு
வெல்டிங் வேலை தெரிந்தவர்கள்
உடனடியாகத் தேவை.
(தங்குமிட வசதிகள் கொடுக்கப்படும்)
077 345 6552, 077 279 2811

**விற்பனைக்குண்டு**
தீட்டல் பச்சை அரிசி 1kg- 55/=
V.K.T அரிசி ஆலை
நீர்வேலி சந்தி (66533)(12.19.20)
077 396 2602

**வேலை ஆள் தேவை**
கொழும்பில் உள்ள வியாபார
நிறுவனம் ஒன்றிற்கு
விற்பனை உதவியாளர் ஒருவர்
தேவை.
தொடர்புகளுக்கு :
54, பலாலி வீதி,
திருநெல்வேலி. 077 342 7132

**முக்கிய அறிவித்தல்**
எமது சங்கத்தினால் இன்று பார்க்கப்படவிருந்த
**அதிஷ்டலாப சீட்டிழுப்பு** நிகழ்வானது தவிர்க்க
முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது
என்பதனை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
தலைவரி
வடமாகாண ஊழியர் நலன்புரி
மற்றும் விளையாட்டுச் சங்கம்
இலங்கை மின்சார சபை ,யாழ்ப்பாணம்.
(68647)(12.19.20)

**Vacancy**
**For Sales Representative**
**(விற்பனைப் பிரதிநிதி)**
As a part of our Expansion plan, Mofen Traders require Presentable and energetic Customer Sales Representative for distributing our new Detergentproducts. Females & Males are encouraged to Apply.
வியாபார பெயர்: Mofen Traders
பதவி நிலை : விற்பனைப் பிரதிநிதி (நேரடி விற்பனை)
வயது எல்லை : 18 வயதுக்கு மேல் (ஆண், பெண் இருபாலாரும்)
சம்பளம் : திறமைக்கு ஏற்றவாறு மாதாந்தம் 25000 - 30000 வருமானமாக ஈட்டலாம்.
கல்வித் தகைமை - குறைந்த கல்வி தகைமை O/L / A/L
மேலதிக தகைமை - தொடர்பாடல் திறமை, மேலதிக அனுகூலமாக கொள்ளப்படும்.
நேர்முக தேர்வு 7ஆம்,8ஆம் திகதிகளில் 03/2016
At-10 Am
நேர்முக தேர்வின் போது பின்வரும் ஆவணங்களைக் கொண்டு வரவும். கிராமசேவையாளர் நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்வி, சான்றிதழ்கள் மற்றும் தொடர்பான ஆவணங்களும்.
077 468 6274
இல.100,3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**இராசேந்திரம் கருணாகரர்**

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவன், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், மாவட்டச் செயலகம், வவுனியா

தோற்றம் 18.05.1982
மறைவு 05.03.2008

ஆண்டுகள் பல ஓடினாலும் உங்கள் நினைவுகள்
மாறாது மகனே!இறுதிவரை துணையிருப்பாய்என்று
எண்ணி இருந்தோம்.எங்களைப் பாதியில்
பரிதவிக்கவிட்டு ஓடி மறைந்ததால் வாடுகின்றோம்
அன்பான உன் வார்த்தை அயராது எங்கள்
செவியில் ஒலிக்கிறது மகனே.

உன் பிரிவால் வாடும்
**பெற்றோர்.**

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

## இனிய நினைவுகளுடன் 16 ஆம் ஆண்டு நிறைவு

அமரர் **முருகேசு நடராஜலிங்கம்**

(ஓய்வுபெற்ற இ.மி.ச. உத்தியோகத்தரும், இந்திரதீபம் உரிமையாளரும்)



மண்ணோடு: 19.12.1944
விண்ணோடு 01.03.2000
(திதி:தேய்பிறை ஏகாதசி)

கண்ணின் மணிபோல எமைக்காத்து
மண்ணில் வளமோடு வாழவைத்த தெய்வமே!!
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள் வானுலகம் சென்றாலும்
மனம்விட்டு மறையாமல் எந்நாளும் இருப்பீர்கள்...
**இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்திபெற**
**இறைவனை வேண்டுகின்றோம்**

நீலர் வளவு,
தம்பளை,
பருத்தித்துறை.

என்றும் அன்புடன்
தி.பிருந்தயன்
தி.கபிசாயினி
தி.டினோத்யன்

அணையா நினைவுகளுடன்
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(69787)(11.118)

## 28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 . 10 . 1937
மறைவு 13 . 02 . 1988

அமரர் **தி.சி.சண்முகலிங்கம்** (இணுவில் கிழக்கு)

திதி: அபரபக்க ஏகாதசி 05.03.2016

வளஞ்சேர் இணுவையம் பதியில் உதித்த உத்தமமே!
இளஞ்சேர் சமூகப்பரிசாய் லிங்கங்களுள்ளே திகழ்ந்த வித்துவமே!
நலஞ்சேர் சமய நெறிதனில் மகிழ்ந்து சிறந்த மகோன்னதமே!
உளஞ்சேர் குடும்பத் தலைமை தன் நிகர் தனித்துவமே!

அலையொன்று கணநேரத்துள் மோதி - இன்ப
மலையொன்று சாய்ந்ததுவோ - உம் பிரிவால்
நிலை தளர்ந்து போனோம் அப்பா! ஆயினும்
கலையாது உம் கனவென தடம் பதித்தோம் - கல்வியில் !

நன்மை புரிதலே வாழ்வின் உயர் பேறாய்க் கொண்டு
இன்னமுதாய் இனிமை பலவுடைத்து நன்றே - நாளும்
முன்னின்றீர் சமூக, சமய தொண்டு புரிதலில் - ஆதலினால்
பின்னை வரும் உம் சந்ததியும் பேறு பெற்று உய்ந்திட்டு!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவகாமியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்...**

சுகத்தம்
இணுவில் கிழக்கு, இணுவில்.

அன்பான மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன், பேர்த்திகள்,
சுற்றத்தார்.

(69787)(11.18)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**இரத்தினம் கந்தவனம்**

மலர்வு 17.06.1942
உதிர்வு 05.03.2010


அன்பும் ஆதரவும் நல்கி எம்மை
அறிவுடனே வழிநடத்திய தந்தையே!
ஆறு ஆண்டென்ன ஆண்டுகள் பலகோடி கடந்தாலும்
என்றும் உங்களை மறவோம்.

65, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(29611) (12.13.18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**முருகேசு அப்புத்துரை**
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் PWD)

தோற்றம் 04.10.1939
மறைவு 04.02.2016

கடந்த 04.02.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் முருகேசு அப்புத்துரை அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (05.03.2016) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதே வேளை நாளை (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எம் அன்புத் தெய்வத்தின் மறைவின் போது உதவி ஒத்தாசை வழங்கியோருக்கும் மரணச்சடங்கில் நேரில் கலந்தும் வேறு வழிகளில் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் ஆகியோருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
021 225 5155

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 16 . 02 . 1932
மறைவு 04 . 02 . 2016

கடந்த 04.02.2016 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

அமரர் **கதிராசிப்பிள்ளை சுப்பிரமணியம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(05.03.2016) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

[illegible] வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

(69806) (14,18)

குடும்பத்தினர்.

## சித்திரை

மீள்குடியமர்த்தவேண்டும். இல்லாவிடின் தாம் காணிகளுக்குள் புகுவோம் என்றும் வலியுறுத்தி அவர்கள் இந்தப் போராட்டத்தை நேற்று நடத்தினார்கள்.

வலி.வடக்கு நலன்புரி நிலையப் பொது அமைப்பின் ஏற்பாட்டில், சபாபதிப்பிள்ளை மற்றும் கண்ணகி நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர். காலை 9 மணி தொடக்கம் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பலாலி விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக விஸ்தரிப்புச் செய்யவேண்டாம். எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் நலன்புரிநிலைய மக்களுக்கான வாழ்வாதாரங்களை வழங்குதல் வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 6 மாதத்துக்குள் வலி.வடக்கில் மீள்குடியேற்றம் இடம்பெறும் என யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவித்திருந்தார். அத்துடன், வலி.வடக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு தருவேன் என்று கூறினார்.

ஆனால், பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலையமாகப் புனரமைப்புச் செய்வதற்கு வலி.வடக்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுமென்றும், அதை யார் எதிர்த்தாலும், விஸ்தரிப்புச் செய்யப்படுமென்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தினால் நாம் ஜனாதிபதியின் கருத்தில் நம்பிக்கை இழந்துவிட்டோம்.

தற்போது வசிக்கும் நலன்புரி நிலையங்களில் பல்வேறு பிரச்சினைகளை நாம் எதிர்கொண்டிருக்கின்றோம். தொழில் வாய்ப்பு பெறுவதே பெரும் சவாலாக இருக்கின்றது.

கடந்த 26 வருடங்களாக அவல வாழ்க்கை வாழ்ந்து வரும் எம் மீது கருணை கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எமது காணிகளை விடுவிக்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். சித்திரைப் புதுவருடத்துக்கு முன்னர் மீள்குடியேற்றம் செய்யத் தவறின், எம்மைச் சுட்டுக் கொன்றாலும் அத்துமீறி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைவோம் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.
(வ-5-106)

## மன்னார்

மன்னார் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதிமன்ற நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, மன்னார்-திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட 78 மனித எலும்புக்கூட்டு எச்சங்களும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று கோரப்பட்டது.

மீட்கப்பட்ட எச்சங்களை இலங்கையில் ஆய்வு செய்யக்கூடிய வசதிகள் இல்லை. அதனால் மாதிரிக் கூற்று பரிசோதனையை மேற்கொள்ள பெரு, ஆர்ஜென்ரீனா, குவாட்டமாலா ஆகிய நாடுகளிடம் அனுப்ப வேண்டும். குறித்த நாடுகளின் தூதரகங்கள் இலங்கையில் இல்லை. அதனால் அந்த நாடுகளிடம் மின்அஞ்சல் மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் பதில் கிடைக்கவில்லை என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் மன்றில் தெரிவித்தனர்.

இந்தக் கூற்றை ஏற்றுக்கொள்ள மறுத்த பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், குறித்த ஆய்வு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுவதற்காக மன்றினால் கால அவகாசம் வழங்கப்பட்டபோதும், குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினர் அசமந்தப்போக்கும், காலதாமதமும் ஏற்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டை நீதிமன்றில் முன்வைத்தனர்.

இந்த நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அரச சட்டவாதியை இந்த வழக்குக்காக நியமிக்கும்படியும், அவர் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு குறித்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி உரிய தரப்பினருக்கு நீதிமன்று கட்டளையிட்டது.

அத்துடன், குறித்த வழக்கை விளக்கத்துக்காக, மீண்டும் எதிர்வரும் 4 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படுமென நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா அறிவித்தார்.
(து-வ-4-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான கடவைகள் அமைக்க தொடர்ந்து பின்னடிக்கிறது ரயில்வே

## யாழ். அரச அதிபர் வேதநாயகன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 5

ரயில் கடவைகள் இல்லாத இடங்களில் ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்ட பின்னர்தான் அதனைப் பற்றிப் பேசுகின்றோம். இதனைத் தடுப்பதற்கு பாதுகாப்புக் கடவைகள் அமைக்குமாறு ரயில்வேத் திணைக்களத்துக்குப் பலமுறை தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது ரயில்வேத் திணைக்களம் தொடர்பான விடயம் ஆராயப்படுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அருகில் உள்ள ரயில் கடவையில் விபத்து ஏற்பட்டு ஒருவர் உயிரிழந்திருந்தார். இதன் பின்னர் அந்தப் பாதுகாப்புக் கடவையில், பாதுகாப்பு வேலி அமைக்குமாறு ரயில் வேத் திணைக் களத்தைக் கோரியிருந்தோம். அதிகளவானவர்கள் பயன் படுத்தும் கச்சேரி – நல்லூர் வீதியில் அமைந்திருக்கும் குறித்த ரயில் கடவைக்குப் பாதுகாப்பு வேலி அவசியம் என்பதை வலியுறுத்தியிருந்தோம். ஆனால் இதுவரையில் அது அமைக்கப்படவில்லை.

ஏதாவது விபத்துக்கள் ஏற்படும் போது தான் அதனைப் பற்றிப் பேசுகின்றோம். பின்னர் அதனைப் பற்றி நாம் அக்கறை கொள்வதில்லை என்று குறிப்பிட்டார்.

> "அதிகளவானவர்கள் பயன்படுத்தும் கச்சேரி – நல்லூர் வீதியில் அமைந்திருக்கும் குறித்த ரயில் கடவைக்குப் பாதுகாப்பு வேலி அவசியம் என்பதை வலியுறுத்தியிருந்தோம். ஆனால் இதுவரையில் அது அமைக்கப்படவில்லை."

ரயில்வேத் திணைக்கள அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு வேலி அமைக்கும் கடவைகள் மாத்திரம்தான் பாதுகாப்பான ரயில் கடவை என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒலி எழுப்பும் சாதனம் உள்ள கடவைகளும் பாதுகாப்பான ரயில் கடவைகள்தான்.

மக்கள் நெருக்கத்தைப் பொறுத்து, ஒலி எழுப்பும் கருவிதனித்துப்பொருத்துவதும், அல்லது ஒலி எழுப்பும் கருவியுடன் பாதுகாப்பு வேலியும் அமைப் பதும் அமையும். அத்துடன் எமக்கு இங்கு பணியாளர்கள் மிகக் குறைவு. இதனை அதிகரித்துத் தருமாறு பலமுறை கோரியுள்ளோம் – என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கில் உள்ள ரயில் நிலையங்களில் எத்தனை தமிழர்கள் பணியாற்றுகின்றார்கள் ? எத்தனை பேர் வேறு இனத்தவர்கள் பணியாற்றுகின்றார்கள் என்ற விவரத்தைக் கோரினார். இன்றைய தினம் அந்த விவரங்கள் தெரியாவிட்டாலும் அடுத்த முறை அதனைத் தெரிவிக்குமாறும் அவர் கோரினார். (த-ஐ-5)

# வணிகப் பொருள் காட்சிப்படுத்தல் தென்மராட்சி வலயத்தில் ஆரம்பம்

சாவகச்சேரி,மார்ச் 5

தென்மராட்சி கல்வி வலயத்தின் "தென்னருவி 2016" வணிகப் பொருள்களின் காட்சிப்படுத்தலும், ஆலோசனை வழங்கலும் நிகழ்வுகள் நேற்றுச் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளாகத்தில் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், கௌரவ விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் கலந்து கொண்டனர்.



நிகழ்வில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்துச் சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவும், மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கற்றல் தொடர்பான அறிவையும், வழிகாட்டல் ஆலோசனைகளையும், உயர்கல்வி வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ளும்முகமாகவும்பலகாட்சிப் படுத்தல் கூடங்களும், ஆலோசனை வழிகாட்டல் நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் வங்கிகள் சிறு முதலீட்டு அங்காடிகள் போன்றவையும் அமைக்கப்பட்டிருந்தன.

விருந்தினர்கள் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டப முன்றலிலிருந்து பாடசாலைகளின் பாண்ட் வாத்திய சகிதம் ஏ 9 வீதியூடாக அழைத்து வரப்பட்டு, கல்லூரி வாசலில் வைத்து உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் தமிழ் மரபு கூறும் இன்னியம் வாத்தியங்கள் மூலம்விழாமண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தல்கள் ஓரிடத்தில் இயங்க, கல்லூரி மண்டபத்தில் பாடசாலை மாணவர்களின் ஆற்றுகைகள் இடம் பெற்றன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் நாடகம், வரணி மத்திய கல்லூரி மாணவர்களின் இசை நாடகம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் கலைக் கதம்பம், நாவற்குளி மகா வித்தியாலய மாணவர்களின் மாயா ஜாலம் போன்றவை தொடராக அரங்கேற்றப்பட்டன.

நேற்றைய நிகழ்வை தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்கள் பார்வையிட்டனர். இன்று பொதுமக்கள் பார்வையிட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (த-ஐ-9)

## விபத்தில் தம்பதியர் காயம்

சாவகச்சேரி,மார்ச் 5

வீதியில் சென்ற பட்டா வடி வாகனம்திரும்புவதற்கான சமிக்ஞையின்றி வீதியின் மறுபக் கத்தில் காணப்பட்ட எரி பொருள் நிலையத்துக்குத் திரும்பிய போது, பின் தொடர்ந்து சென்ற மோட்டார் சைக்கிள், வாகனத் துடன் மோதியதில் அதில் பய ணித்த மண்டைதீவைச் சேர்ந் தவருக்கு கை முறிந்தது. அத்துடன் அவரது கர்ப்பிணியான மனைவிக்கும் காயம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நுணாவில் மேற்கு ஏ-9 வீதியில் இடம் பெற்றது.

புதுக்குடியிருப்புக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து தமது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்புகையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (த-ஐ-9)

## விசேட மீள் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 1ஆம், 2 ஆம் பருவகால மற்றும் ஆண்டிறுதி விசேட மீள் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது என உதவிப் பதிவாளர் யோ. ரிசாந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தங்களது பரீட்சைக்கான அனுமதி அட்டைகளையும் மற்றும் பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்களையும் பெற்றுக் கொள்வதற்காகத் தம்மைத் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி)

# மாவிலித் துறைமுகத்தை மீட்கக் கடற்படையுடன் பேச்சு

## மாவை எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 5

நெடுந்தீவு மாவிலித்துறைமுகப் பகுதியை கடற்படையினரிடமிருந்து விடுவிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

மாவிலித்துறைமுகப்பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதால் தமது படகுகளை பாதுகாப்பாக நிறுத்த முடியாதிருப்பதாக நெடுந்தீவுக் கடற்றொழில் சமாசத்தினர் நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தனர். துறைமுகத்தில் தமது படகுகளை நிறுத்த அல்லது பாதுகாப்பான துறை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மாவிலித்துறைமுகம் நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கான பாரம்பரிய துறைமுகம். அத்துடன் மீனவர்கள் தமது படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்தும் இடமும் கூட இப்போது கடற்படையினர் வசம் அது உள்ள தால் மக்கள் மற்றும் மீனவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்தத் துறைமுகம் மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். கடற்படையினர் வேறு ஓர் இடத்தில் தமது படகுகளை நிறுத்தக் கூடியதாக நடவடிக்கை எடுப்பது அவசியம் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கடற்படை உத்தியோகத்தரிடம் கேட்டபோது, மீனவர்கள் தமது படகுகளை துறைமுகத்தில் நிறுத்துவது தடை செய்யப்படவில்லை எனவும், அவர்கள் அங்கு தமது படகுகளை நிறுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார்.

எனினும் துறைமுகப்பகுதியைக் கடற்படையினரிடமிருந்து திரும்பப் பெற ஒருங்கிணைப்புக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்ததையடுத்து, இது தொடர்பாக உரிய பேச்சுக்களை முன்னெடுப்பது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (த-ஐ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## தீ விபத்தினால் நாசமான குடிசை

வவுனியா,மார்ச் 5

சமையலறையில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக வவுனியா நெளுக்குளம் பகுதியில் உள்ள குடிசை ஒன்று தீப் பற்றி முற்றாகச் சாம்பலாகியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நெளுக்குளம் மயான வீதியில் உள்ள குறித்த குடிசையின் சமையலறை அடுப்பிலிருந்து நெருப்புத் தணல் பக்கத்துப் பத்தியில் பட்டுத் தீப்பிடித்தமையாலேயே குடிசை முற்றாக எரிந்துள்ளதாகப் பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

குடிசையின் உரிமையாளர் இந்த நேரத்தில் அருகிலிருக்கும் கடைக்கு சென்றுள்ளார். இதனால் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால் குடிசை முற்றாக எரிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சமையலறைப் பொருள்கள், உடைமைகள் என சுமார் ஒருலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளதாகவும், பணமாக 7 ஆயிரம் ரூபாவும் வீட்டுக்குள் இருந்துள்ளதாகவும் வீட்டின் உரிமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(து-ஜ-21)

# காணிகள் அபகரிப்புக் குறித்து நல்லாட்சி அரசும் மௌனம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி குற்றச்சாட்டு

முல்லைத்தீவு,மார்ச் 5

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற காணிகள் ஆக்கிரமிக்கப்படும் செயற்பாடுகளைக் கடந்த அரசைப்போல, இந்த அரசும் ஆமோதிக்கின்றதா என நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களுடைய பூர்வீகக் காணிகளை ஆக்கிரமித்து அங்கிருந்து அவர்களை வெளியேற்றி நிர்க்கதி நிலைக்குள்ளாக்கிவிட்டு, புத்தரை குடியமர்த்தவேண்டிய அவசியம் என்ன எனவும் அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மக்களுடைய பல காணிகள் தற்போதும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை விடுவிக்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினரால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

மீள்குடியேற்றத்தின் பின்னரான காலப்பகுதிகளில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற காணிகளை இராணுவத்தினர் அபகரித்து இராணுவ முகாம்களை நிறுவி ஆக்கிரமித்து வருகின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அதிகளவான மக்களின் காணிகள் இவ்வாறாக ஆக்கிரமிக்கப்பட்டு உயர்பாதுகாப்பு வலயங்கள் என அடையாளப்படுத்திச் சிங்கள மக்களைக் குடியமர்த்தியும், புத்த விகாரைகளைக் கட்டியும் எமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தடையேற்படுத்தி வருகின்றனர்.

இதற்கெதிராகக் கடந்த காலங்களில் அரசுக்கு பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்தபோதும் அப்போதைய அரசும் அதனை உதாசீனம் செய்தே வந்தது.

> “தமிழ் மக்களின் நில ஆக்கிரமிப்புக்களுக்கெதிராக எமது மக்களின் போராட்டங்களை இந்த அரசும் பாராமுகமாக இருப்பின் அவை பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.”

இவ்வாறான நிலையில் மக்கள் மீதான நில ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் தற்போதைய அரசாலும் மறைமுகமாக ஊக்குவிக்கப்பட்டு வருகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் பகுதியில் கடற்படையினரால் ஆக்கிரமிப்புக்குள்ளான மக்களின் காணிகள் இன்றுவரை விடுவிக்கப்படாதுள்ளதுடன், கேப்பாப்பிலவு மக்கள் தமது சொந்த நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு மாதிரிக் கிராமங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி முல்லைத்தீவு நாயாறு கிராமத்தில் அத்துமீறி மீன்பிடியிலீடுபட்டுள்ள பெரும்பான்மையின மக்கள் கடற்கரைகளில் குடியமர்ந்துள்ளனர்.

இவை போரின் பின்னரான காலப்பகுதியில் எமது மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் பெரிய தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் கொக்கிளாய்ப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புத்த கோவில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கையே.

தமிழ் மக்களினுடைய பூர்வீகக் காணிகளை ஆக்கிரமித்து அங்கிருந்து அவர்களை வெளியேற்றி நிர்க்கதி நிலைக்குள்ளாக்கி விட்டு புத்தரைக் குடியமர்த்த வேண்டிய அவசியம் என்ன? பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரையைக் கட்டுவதன் நோக்கம் என்ன? வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் இடங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இலங்கை அரசால் காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஆக்கிரமிப்பு செயற்பாடுகளையே வெளிப்படுத்தி நிற்பதுடன், இந்த அரசும் இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தாது எமது மக்களை தொடர்ந்தும் புறக் கணித்து வருகின்றது.

தமிழ் மக்களின் நில ஆக்கிரமிப்புக்களுக்கெதிராக எமது மக்களின் போராட்டங்கள் குறித்து இந்த அரசும் பாராமுகமாக இருப்பின் அவை பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

எமது மக்கள் தமது சொந்த நிலங்களைக் கோரியே போராடுகின்றனர். எனவே இவ்வாறான நிலையில் இந்த அரசை உருவாக்கியதில் எமது மக்களுக்கும் உயரிய பங்குள்ளது என்பதனை நினைவிற்கொண்டு, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் இடங்களை விரைவில் விடுவித்து எமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் அவர்களின் பொருளாதார மீள் கட்டுமானத்துக்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(து-ஜ-21-ரி7)



## மன்னார் நகர சபைக்கு புதிய மாடிக் கட்டடம்

### நடப்பட்டது அடிக்கல்

மன்னார்,மார்ச் 5

மன்னார் நகர சபையின் புதிய அலுவலக மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் நகர சபையின் செயலாளர் லெனால்ட் லெம்பேட் தலைமையில் இடம்பெற்றது.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள மன்னார் நகர சபையின் புதிய அலுவலக மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.துரம் வைபவ ரீதியாக நட்டு வைத்தார்.

இதன் போது சர்வமதத் தலைவர்கள், மன்னார் நகர சபையின் பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

(து-ஜ-56)

## வவுனியா உணவக ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை கட்டாயம்

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவிப்பு

வவுனியா,மார்ச் 5

வவுனியாவில் இயங்கும் அனைத்து உணவகங்களிலும் பணியாளர்களாகக் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள உணவகங்களில் வவுனியா மாவட்ட பொதுச் சுகாதார பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்டு வரும் திடீர் சோதனை நடவடிக்கையில் சுகாதாரமற்ற முறையில் உணவு கையாளும் இடங்களில் ஊழியர்கள் பணிபுரிவது கண்டறியப்பட்டது.

இதனை அடுத்தே வவுனியா மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக உணவு கையாளும் நிலையங்களின் ஊழியர்களாகப் பணிபுரிபவர்கள் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தமது மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழ்களைப் பெற்ற பின்னரே உணவு கையாளும் நிலையங்களில் பணிக்கு அமர்த்தப்படவேணடும்.

> “மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழ்களைப்பெற்ற பின்னரே உணவு கையாளும் நிலையங்களில் பணிக்கு அமர்த்தப்படவேண்டும்.”

அதற்கு உணவு நிலையங்களின் உரிமையாளர்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். ஊழியர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தமது மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் வவுனியா மாவட்ட பொதுசுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார்.

(து-ஜ-21-402)

## 20 வருடங்களாக படை வசமிருந்த நெற்களஞ்சியம் அரச அதிபரிடம்

வவுனியா,மார்ச் 5

வவுனியா மாவட்டத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் படையினர் வசம் இருந்த 3 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யக்கூடிய நெற்களஞ்சியசாலை வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் காமினி வித்தியாலயம் முன்பாக உள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான நெற் களஞ்சியக் கட்டடம், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக விசேட அதிரடிப் படையினர் வசம் இருந்தது.

இதனால் மாவட்டத்தில் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகள் தங்களுடைய நெல்லைச் சந்தைப்படுத்த முற்படும் போது, அதற்கான களஞ்சிய வசதிகள் இல்லை எனக்கூறி நெல் சந்தைப்படுத்தும் சபையினர் நெல் கொள்வனவைத்தவிர்த் தனர். இதனால் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தனர்.

கடந்த காலபோகத்தின்போது கூட, வவுனியா மாவட்ட விவசாயிகள் தமது நெல்லை, நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்யவில்லை என்றும், உடனடியாகக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் நெல் சந்தைப்படுத்தும் சபையினரோ தங்களிடம் கொள்வனவுக்கான களஞ்சியசாலை வசதிகள் இல்லை என்று தெரிவித்து விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்வதைத் தவிர்த்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த 20 வருங்களாக நெல் சந்தைப்படுத்தும் சபையினருக்குச் சொந்தமான களஞ்சியசாலை ஒன்று படையினர் வசம் இருப்பதாகவும், அவற்றை மீட்டு தங்களுடைய நெல்லைக் கொள்வனவு செய்யுமாறும் விவசாயிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் கடந்த மாதங்களில் இடம்பெற்ற வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஆராய்ந்து இராணுவத்தை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து அங்குள்ள இரு களஞ்சியசாலைகளில், ஒரு களஞ்சிய சாலையை படையினர் மாவட்ட அரச அதிபரிடம் கையளித்துள்ளனர்.

(து-ஜ-21,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு அபிவிருத்தியில் அதிக கரிசனையைச் செலுத்துங்கள்

## ஜப்பானிடம் கோரியது தமிழ்க் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

உதவி வழங்கும் மாநாட்டில் வடக்கு-கிழக்கின் அபிவிருத்தி தொடர்பில் அதிக கரிசனை செலுத்துமாறு, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவரிடம், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்துள்ள, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசாவை மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இதன்போதே மாவை. சேனாதிராசா மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற போர் காரணமாகச் சுமார் 80 ஆயிரம் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே கொண்டு செல்கின்றனர். போரின் தாக்கத்தால் இன்றுவரை போதிய அபிவிருத்தி வடக்கு - கிழக்கில் இல்லை. இதனால் இளைஞர், யுவதிகளுக்குப் போதிய வேலை வாய்ப்புக்கள் இல்லை.

> வடக்கு – கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற போர் காரணமாகச் சுமார் 80 ஆயிரம் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே கொண்டு செல்கின்றனர்.

சிறையில் வாடும் உறவுகள் இன்று வரைக்கும் விடுவிக்கப்படவில்லை. இதனால் அவர்களின் உறவுகள் விடுதலை வேண்டி அலைவதால் அந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரம் கூடக் கேள்விக்குறியாகவே உள்ளது.

அதேபோல் இடம்பெயர்ந்தவர்கள் மீள் குடியேற்றப்படுவர் என்று வாக்குறுதிகள் மட்டும் வழங்கப்படுகின்ற போதிலும், இதுவரை மீள் குடியேற்றப்படவில்லை. அதிலும் குறிப்பாக மீனவ மக்களைக் கொண்டு வந்து அரசு கடலே இல்லாத பகுதியில் விட்டுள்ளமையால் அவர்கள் தினக் கூலிக்கு வேலைதேடி அலையும் நிலையை உருவாக்கியுள்ளது.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு விசேட நிதி அரசால் ஒதுக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் ஒதுக்கப்படவில்லை. இது தொடர்பில் நாம் இலங்கைப் பிரதமருடன் பேசினோம். இதன் போது அவர், இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான திட்டங்களைச் சமர்ப்பித்து நிதி உதவி பெற்றுத் தருவதாக வாக்குறுதி வழங்கியிருந்தார். எனவே, இந்த உதவி வழங்கும் மாநாட்டில் வடக்கு - கிழக்குக்கு அதிக உதவி வழங்கக் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். (த-ஐ-5-101)

# சட்டத்தின் ஆட்சி வலுப் பெற்றுள்ளது

## அமைச்சர் மகிந்த சமரசிங்க யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு






யாழ்ப்பாணம்,மார்.05

தற்போது நாட்டில் சட்டத்தின் ஆட்சி வலுவடைந்திருக்கிறது. அனைத்து மக்களுக்கும் சரியான தீர்வை வழங்கக்கூடிய அரசமைப்பை உருவாக்குவதில் முனைப்புடன்செயற்பட்டுவருகிறோம். நாங்கள் ஒரு முக்கியமான காலகட்டத்துக் குள் வாழ்ந்து வருகிறோம். அந்த வகையில் எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ் வதை உறுதி செய்ய வேண்டும் - எனத் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஜேர்மன் சமஷ்டி அமைச்சின் சார்பில் புதுப்பிக்கப்பட்டுப் புதிய உபகரணங்களுடன் நவீன மயப்படுத்தப்பட்டுள்ள கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தின் அங்குராார்ப்பண நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2015 ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதியும் பிரதமரும் நல்லாட்சி அரசை முன்னகர்த்திக் கொண்டு செல்கின்றனர். மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தும் விடயங்களில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றனர்.பொதுமக்களுடைய மனக் குறைகளைச் சரியான முறைகளில் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவது தொடர்பிலும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பாக ஜனாதிபதிஜேர்மன்நாட்டுக்குச்சென்றிருந்த போது உயர் வரவேற்பளிக்கப்பட்டிருந்தது. இந்தப் பயணத்தின்போது தொழிற்பயிற்சி தொடர்பான கோரிக்கைகள் மாத்திரமன்றி ஜி.எஸ்.பி. வரிச்சலுகை தொடர்பிலும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பிலும் சில விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

ஜேர்மனியைப் பொறுத்தவரை, ஜெனிவா மனித உரிமைகள் சபையில் சந்தித்த போதும் ஏனைய சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்களை மேற்கொண்டபோதும் அவர்கள் இலங்கை தொடர்பில் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்தாலும்கூட, வலியுறுத்திக் கூறிய விடயம் போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் நிலைபேறான அபிவிருத்தியை முன்னெடுக்கவேண்டும் என்பதுதான். நாங்கள் போரை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம்.

இலங்கையில் உள்ள அனைவருக்கும் முன்பாக உள்ள சவால் சமாதானத்தை ஏற்படுத்துவதுதான். அதாவது இலங்கையில் நிலையான சமாதானம் ஏற்படவேண்டுமென்றால் மக்கள் மத்தியில் நல்லிணக்கம், ஐக்கியம் ஏற்படவேண்டும் என்பதனை ஜேர்மனிய அரசு நன்கு புரிந்து கொண்டுள்ளது.

போர் முடிவடைந்ததும் ஜேர்மன் அரசு இலங்கை அரசிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தது. வடபகுதி இளைஞர், யுவதிகள் ஒளிமயமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எங்கள் அரசால் என்ன செய்யமுடியும் எனக் கேட்டார்கள். நாங்கள் உயர்தரம் வாய்ந்த தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை வட பகுதியிலே அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டோம். தொழிற் பயிற்சிகளை அவர்களுக்கு வழங்கு[illegible] நோக்கிய [illegible]தலாம் என்பதனை நாங்கள் உணர்ந்து கொண்டோம்.அதி உயர் தரத் திலே சிறந்த தொழிற்பயிற்சியை வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்.

இளைஞர், யுவதிகளுக்கு அதிகளவான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படும். அதனடிப்படையிலே இந்தக் கட்டடத் தொகுதிக்கான பணத்தைக் கடனாக அன்றி நன்கொடையாக ஜேர்மன் அரசு வழங்கியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திலும் தொழிற்பயிற்சி நிலையத்தை அமைப்பதற்கும் நிதி உதவியை வழங்கியுள்ளது. இவ்வாண்டு ஜூலை மாதம் அந்தத் தொழிற் பயிற்சி நிலையம் திறக்கப்படவிருக்கின்றது. அந்த அங்குரார்ப்பண நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொள்வார்.

இங்கு வழங்கப்படவிருக்கின்ற உள்வாங்கல் கல்வியிலே எல்லா இனங்களைச் சேர்ந்த மாணவர்களும் உள்ளீர்க்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் தனியார் துறைகளில்தான் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதுடன் அந்த வெற்றிடங்களுக்கு உள்ளீர்க்கப்படுவர். அத்துடன் எதிர்காலத்தில் தற்போதுள்ள ஓய்வூதிய நடைமுறையும் நீக்கப்படவுள்ளது. வேலையை விடுகின்ற காலத்திலே ஒரு குறித்த தொகை சேவையின் அடிப்படையிலே வழங்கப்படும். ஆகவே இங்கு வழங்கப்படுகின்ற தொழிற் பயிற்சிகள் தனியார் துறையில் உள்ள தொழிற் சந்தைக் கேள்விகளை மீள் நிரப்பக்கூடிய வகையிலே தரமானதாக வழங்கப்படவேண்டும். வழங்கப்படும் என்றார்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வுகளில் விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, இலங்கைக்கான ஜேர்மன் தூதரகத்தின் பிரதித் தூதுவர் கலாநிதி மைக்கல் டோமன், தொழிற் பயிற்சி அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல்காமினிஹெட்டியாராச்சி, இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான ஜி.ஐ.இசற் பணிப்பாளர் திருமதி ரண்டா கொரா ரணரிவெலோ, தொழிற் பயிற்சி நிலையம் சார்பான ஜி.ஐ.சற் கருத்திட்டத்தின் சிரேஷ்ட ஆலோசகர் திருமதி குமுதினி ரோசா,யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிக்கு பயணம் மேற்கொண்ட அமைச்சர், அங்கு விரிவுரையாளர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்போது மாணவர்கள் தமது தேவைகள் தொடர்பிலும், அங்கு நிலவி வருகின்ற குறைபாடுகள் தொடர்பிலும் மனுக்களையும் வாய்மொழிமூல முறைப்பாடுகளையும் நேரில் தெரிவித்தனர்.

இவற்றை செவிமடுத்த அமைச்சர் நாட்டில் உள்ள எந்தவொரு தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் இல்லாத அளவுக்கு இங்கே பிரச்சினைகள் இருப்பது மனவருத்தமளிக்கிறது என்பதைப் பகிரங்கமாக அவை முன்பாக வெளிப்படுத்தியதுடன், இந்த விடயங்கள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுத்து தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார். (த-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சியில் பதுக்கிய பணத்தை கண்டறிவதற்கு அமெரிக்காவின் உதவி

## ஜோன் கெரியிடம் கோரியுள்ளது இலங்கை

கொழும்பு,மார்ச் 5
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பில்லியன் கணக்கான பணம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள அமெரிக்காவின் உதவியை அரசு நாடியுள்ளது.

வங்கிக் கணக்குகளுடன் தொடர்புடைய விவரங்களை இலங்கையிடம் வழங்குமாறு சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச வர்த்தகத்துறை இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே இராஜாங்க அமைச்சர் சுஜீவ இந்தத் தகவலை வெளியிட்டார்.

டுபாய் உள்ளிட்ட வெளிநாட்டு வங்கிகளில் மகிந்த ராஜபக்ச அரசால் பெருந்தொகையான பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. இது தொடர்பில் அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க, கடந்த அரசின் ஆட்சியில் டுபாய் உள்ளிட்ட வெளிநாடுகளின் வங்கிகளில் பெருந்தொகையான பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான முழுமையான தகவல்கள் இருந்தால் தான்நாம்நடவடிக்கை எடுக்க முடியும்.

> ❝ தமது நாட்டு வங்கிகளிலுள்ள கணக்குகள் தொடர்பாக இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குத் தகவல் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நாடுகள் உடன்படவில்லை. எனவே, அமெரிக்கா போன்ற பலம்மிக்க நாடுகளின் அழுத்தம் இந்த விடயத்தில் தேவை ❞

தமது நாட்டு வங்கிகளிலுள்ள கணக்குகள் தொடர்பாக இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குத் தகவல் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நாடுகள் உடன்படவில்லை. எனவே, அமெரிக்கா போன்ற பலம்மிக்க நாடுகளின் அழுத்தம் இந்த விடயத்தில் தேவை.

வங்கிக் கணக்குகள் தொடர்பான விவரங்களை வழங்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும். அப்படியான அழுத்தம் கொடுக்கப் பட்டால் வங்கிக் கணக்குகள் தொடர்பான விவரங்களை அந்த நாடுகள் எமக்கும் வழங்கும் - என்றார்.

வங்கிக் கணக்குகளுடன் சம்பந்தப்பட்ட நாடுகள் இலங்கைக்குத் தகவல்களை வழங்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அமெரிக்காவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளதா? என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியிடம் இதற் கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தற்போது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (த-ஐ-5-சி)

## அமெ. - இலங்கை உறவை மேலும் பலமாக்கப் பேச்சு

கொழும்பு, மார்ச் 5
அமெரிக்க - இலங்கை உறவுகளை முன்னேற்றுவது தொடர்பாகவும், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும், பிரதமர் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகளுடன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கீழ்நிலைச் செயலர் பற்றிக் கென்னடி பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இலங்கைக்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான கீழ்நிலைச் செயலரான பற்றிக் கென்னடி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களில், அமெரிக்க - இலங்கை உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்க - இலங்கை இடையிலான இருதரப்பு உறவுகளின் முன்னேற்றம் தொடர்பாக அமைச்சர்கள், அதிகாரிகளுடன், பற்றிக் கென்னடி பேச்சு நடத்தியுள்ளார்.

துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். (த-ஐ-5)




செலிங்கோ லை.'ப் விற்பனை ஆலோசகருக்கு கிடைக்கும் சிறந்த வருமானம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள், அறிவு, அனுபவம் மற்றும் ஏனைய நலன்கள் மிக விஷேடமானவை. எனவே வாழ்க்கையில் வெற்றி பெற செலிங்கோ லை.'ப் உடன் இணைந்து கொள்ளுங்கள். இது தொழிலுக்கும் மேலான ஒரு உன்னத காரியம்.

தகைமைகள்
- க.பொ.த (உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி இருத்தல் வேண்டும். (விஞ்ஞானம், வணிகம் அல்லது கணிதப் பிரிவு எனின் 2 சித்திகள் போதுமானது)
  அல்லது
  க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி இருத்தல் வேண்டும். அவற்றுள் இரண்டிற்கு திறமைச் சித்தி காணப்படுவதுடன்
  1 வருட தொழில் அனுபவமும் இருத்தல் வேண்டும்.
- பாடசாலை கல்விக்குப் புறம்பாக வேறு துறைகளில் திறமையை வெளிப்படுத்தியவராக இருத்தல் வேண்டும்.
- உறவினர், நண்பர், அயலவர் மற்றும் சமூகத்திலுள்ள வெவ்வேறு நபர்களுடன் சிறந்த பொதுசனத் தொடர்பு இருத்தல் வேண்டும்.
- விற்பனைத் துறையில் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- ரூ. 10,000 (3 மாதங்களுக்கு) ஊக்குவிப்பு தொகையாக வழங்கப்படும்.
- பயிற்சி மற்றும் தொழில்துறையில் விருத்தி

உங்கள் சுயவிரக்கோவையை பின்வரும் முகவரியில் அல்லது அருகிலுள்ள செலிங்கோ லை.'ப் கிளையில் ஒப்படையுங்கள். இல்லையெனில் jobs@ceylife.lk இற்கு ஈ-மெயில் மூலம் அனுப்பவும் முடியும்.

சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் - விற்பனை நிர்வாகம்,
செலிங்கோ லை.'ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விற்பனை ஆலோசகர் பதவி" எனக் குறிப்பிடவும். (ஈ-மெயிலிலும் இவ்வாறு குறிப்பிடுக)

வாழ்க்கை, பாசம், பாதுகாப்பு.

செலிங்கோ லை.'.ப்

## வேறு கட்சியை அமைப்போர் சு.க.விலிருந்து வெளியேறட்டும்

### துமிந்த திஸாநாயக்க கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 5
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்துகொண்டு வேறொரு கட்சி அமைக்கப் போவதாகக் கூறுபவர்கள் கட்சியால் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் தாமாகவேவெளியேறவேண்டும், என்று கட்சியின் பொதுச் செயலாளரான விவசாயத் துறை அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற அமைச்சரவைத் தீர் மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பொதுச்செயலாளர் பதவி உள்ளிட்ட சில பதவிகள் வெற்றிடமாக உள்ளன. இவற்றை நிரப்புவதற்கு கட்சியால் கலந்தாலோசிக்கப்படும்.

இதேவேளை, புதிய கட்சியொன்றை உருவாக்கவுள்ளதாகவும், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டால் அது தொடர்பாக அறிவிக்கப்படும் என்றும் எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம வெளிப்படையாகக் கூறியுள்ளார். அவர் கட்சியால் வெளியேற்றப்படுவதைவிடத்தானாகவே வெளியேற வேண்டும். சுதந்திரக் கட்சியில் வழங்கப்பட்டுள்ளஜனநாயகஉரிமையை அனைவரும் சரியாகப் பயன்படுத்தவேண்டும். நாம் தனிநபரை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுப்பதில்லை. கட்சியின் நலன் கருதியே தீர்மானம் எடுப்போம் - எனவும் குறிப்பிட்டார். (த-ஐ-5)

## நாடாளுமன்றப் பணியாளர்களுக்கு கொழுப்பு

கொழும்பு, மார்ச் 5
நாடாளுமன்றத்தில் பணியாற்றுபவர்களில் 95 சதவீதமானவர்களின் உடல்களில் கொழுப்பு அதிகமாக உள்ளமை (கொலஸ்ரோல்) கண்டறியப் பட்டுள்ளது.

நாடாளுமன்றப் பணியாளர்களுக்கு கடந்த புதன்கிழமை இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. ஒவ்வொருவருக்கும் 17 ஆயிரம் ரூபா செலவிலான மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இதில், சபாநாயகர் கரு ஜயசூரியா மற்றும் பிரதிச் சபாநாயகர் திலங்க ஆகியோரும் பங்கெடுத்திருந்தனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 298 பேருக்கு உடல்களில் அளவுக்கு அதிகமாகக் கொழுப்புப் படிந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. நாடாளுமன்றப் பணியாளர்கள், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் உள்ள உணவகத்தையே அதிகம் பயன்படுத்துகின்றனர். அங்கு 5 நட்சத்திர விடுதியின் தரத்துக்கு அமைவாகவே உணவுகள் பரிமாறப்படுகின்றன. அத்துடன் மிகக் குறைந்த விலையிலேயே உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

இதன் காரணமாகவும், இவர்களுக்கு உடலில் அளவுக்கு அதிகமான கொழுப்பு சேர்ந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறது சீனா



கொழும்பு, மார்ச் 5
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீனாவுக்கான பயணத்தை அந்த நாட்டுத் தலைவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக, சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர்கள் மலிக் சமரவிக்கிரம மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மலிக் சமரவிக்கிரம மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரைக் கடந்த முதலாம் திகதி சந்தித்த சீனாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் லியூ சென்மின், பிரதமர் ரணிலின் பீஜிங் பயணத்தின் போது முக்கியமான விளைவுகளை எதிர்பார்க்க முடியும் என்றும் உறுதியளித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே 2003 ஆம் ஆண்டில் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இரண்டாவது தடவையாக அடுத்த மாதம் பீஜிங் செல்லவுள்ள ரணில் விக்கிரமசிங்கவை, சீனப் பிரதமர் லீ கெகியாங் வரவேற்று உபசரிப்பார். இந்தப் பயணத்தின் போது சீன அதிபர் ஜி ஜின் பிங்கையும் பிரதமர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இரு தரப்புப் பேச்சுக்களின் முடிவில் கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூட்டறிக்கையில், சீனாவின் உதவிகள் தொடர்பான ஒத்துழைப்புகள் பற்றியும், சீனாவின் கடல் வழிப்பாதைத் திட்டம் தொடர்பான வாக்குறுதியும் உள்ளடக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை சீன உதவி வெளிவிவகார அமைச்சருடன் நடத்திய சந்திப்பின் போது, சீனாவினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் புதிதான நேரடி முதலீடுகள் குறித்தும் அமைச்சர்கள் பேச்சு நடத்தியுள்ளனர்.

குறிப்பாக தென் மாகாணத்தில் சீனாவின் முதலீடுகளை அதிகரிப்பது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (த-ஐ-5)

# உரிய முறையில் நீதியை நிலை நாட்டாவிட்டால் அராஜகம் நோக்கி நாடு

## எச்சரிக்கிறார் அமைச்சர் விஜயதாஸ



கொழும்பு, மார்ச் 5
நீதி உரிய முறையில் நிலை நாட்டப்படாதவிட்டால் நாடு அராஜகத்தை நோக்கித் தள்ளப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ வலியுறுத்தியுள்ளார்.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ, அம்பாறை நீதிமன்றத்தைப் பார்வையிடுவதற்கான பயணம் ஒன்றை நேற்றுமுன்தினம் மேற்கொண்டிருந்தார். அங்கு ஊடகவியலாளர்கள் மத்தியில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ கருத்து வெளியிடுகையில்,

நீதிமன்றங்கள் உரிய முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தி நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கும் விதத்தில் செயற்பட வேண்டும். இல்லாவிடில் பொது மக்கள் சட்டத்தைக் கையில் எடுத்துச் செயற்படும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள். அதன் மூலம் நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டு விடுமெனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்படும் ஒரு நிலை ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் சுதந்திரமான நீதித்துறை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவது அரசின் பொறுப்பும் கடமையுமாகும் என்றும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ மேலும் தெரிவித்துள்ளார். (த-ஐ-5)

# புதிதாகத் தெரிவான எம்.பிக்களுக்கு வரியற்ற வாகன அனுமதிப் பத்திரம்

கொழும்பு,மார்ச் 5
நாடாளுமன்றத்துக்குப் புதிதாகத் தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதால், வாகன விற்பனையாளர்கள் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பின்னால் திரிவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வாகன அனுமதிப்பத்திரங்கள் ரூபா 275 லட்சம் வரை விற்பனையாகி வருவதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இதேவேளை, இந்தத் தொகை போதுமானதாக இல்லையெனச் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே தமது வாகன அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.(த-ஐ-22)


# மரண அறிவித்தல்

## திருமதி நாகரட்ணம் கதிரித்தம்பி (பெரியம்மா)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும், தற்போது நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கில் வசித்தவருமாகிய திருமதி நாகரட்ணம் கதிரித்தம்பி 01.03.2016 செவ்வாய்க்கிழமை 105 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் செல்லப்பா(ஸ்தாபகரும் தலைமை ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி) - நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற விநாசித்தம்பி கதிரித்தம்பியின் (லிகிதர் - யாழ். போதனா வைத்தியாசலை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், ஞானம்மா, ஞானசுந்தரி ஆகியோரின் அன்பு சகோதரியும், மகாலட்சுமி (கனடா), சாந்தா (கனடா), யோகேஸ்வரி (பட்டு-கொக்குவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான பொன்னம்மா அம்மாக்குட்டி விநாசித்தம்பி ஆகியோரின் மைத்துனியும், சுரஞ்சன் (சிங்கப்பூர்), சுஞ்சுளா (கனடா), லக்ஸ்மன் (USA), கிரிசாந்தி (கனடா), சயந்தன் (கனடா), குலவீரசிங்கம் (கனடா), மேளிஷா (சிங்கப்பூர்),சண்முகேஷன் (கனடா), கார்த்திகா (USA) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, தங்கம்மா, கனகரட்ணம், இராசநாயகம் மற்றும் புஸ்பரட்ணம் (UK), தங்கரட்ணம் (கொழும்பு), பவளரட்ணம் (கொழும்பு), சரஸ்வதிதேவி (UK), இராஜேந்திரன் (கனடா), இந்திராதேவி (சாவகச்சேரி), வனிதாதேவி (சாவகச்சேரி), ஞானராஜன் (ஜேர்மனி), ஞானச்சந்திரன் (கருணாலயம்), ஞானறஞ்சினி (ஜேர்மனி), ஞானேஸ்வரி (கொழும்பு), ஞானசீலன் (சுவிஸ்), ஞானபூபதி (பாரதி இன்டஸ்றீஸ் - கொக்குவில்), சொர்ணராஜா (லண்டன்) ஆகியோரின் பெரிய தாயாரும், புவனேஸ்வரன் (லண்டன்), றஜனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கணார், ட்ரு, மார்க்ஸ் (சிங்கப்பூர்), அக்ஷயா, ஜெய்ஷன் (USA), அருண் (USA), அபிஷன், றோஷினி (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
க.ஞானச்சந்திரன் (ஞானி),
கருணாலயம்.
021 222 3108, 077 773 2364

(69813)
(11,17,18,19)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழரை ஏய்க்காட்டும் போக்கு தொடராது இருக்க வழி பிறக்குமா..?

நல்லிணக்கத்தின் ஆரம்பம் தென்னிலங்கையில் இருந்தே உருவாக வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு வாழ் மக்களின், மனக் காயங்கள் ஆற்றப்பட வேண்டும்.

தென்னிலங்கை வாழ் மக்களின் மனநிலையை மாற்றுவது அவசியமாகும். குறிப்பாக, வளர்ந்த மக்களிடம் நல்லிணக்கம் விதைக்கப்பட வேண்டிய தேவை உண்டு. இளம் தலைமுறையினரிடம் நல்லிணக்கத்துக்குச் சாதகமான மனநிலையே மேலோங்கி உள்ளது.

மேற்போந்த கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார்; சுட்டிக்காட்டி உள்ளார், நாட்டின் தலைவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அனைத்துலக செம்பிறைச் சங்கம் ஆகிய இரண்டினதும் செயலாளர் எல்ஹாஜ் அஸ்ஸியிடம், மேற்கண்ட கருத்துக்களை அவர் நேரில் தெரிவித்துள்ளார்.

நோய் நாடி, நோய் முதனாடி, அது தணிக்கும் வாய் நாடி, வாய்ப்பச் செயல்--என்பதனை, இரண்டாயிரத்து நாற்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர், தமிழில் கூறி வைத்தவர் வள்ளுவப் பெருமான்.

அதனை அடியொற்றியதாக, தென்னிலங்கை மக்களிடம் இருந்தே நல்லிணக்கம் ஆரம்பிக்க வேண்டும் என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கனதியான கருத்து ஒன்றை வெளிப்படுத்தி உள்ளார். அது கவனத்துக்கு உரியதாகும்.

சிங்களப் பெரும்பான்மை இனமக்களின் அரசியல் தலைவர்கள், தமது சகோதர இனத்தவரான தமிழ் மக்களுக்கு உண்டாக்கிய இனவாதக் காயங்கள் ஆறிக் குணமாவதற்கு, மிக நீண்ட காலம் எடுக்கும் என்பதனைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

அத்தோடு, அதீத கவனமும், மனதார்ந்த கரிசனையும், நல்ல மனமும் அதற்கு இன்றி அமையாதவை. மூன்று தசாப்த காலப் போர்ச் சூழ்நிலையால், குறிப்பாக இறுதிப்போரின்போது, பற்பல வகைகளிலும் பாதிப்புற்று அல்லாடும் தமிழ் மக்களை ஆசுவாசப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு--

அவர்களின் வாக்குகளால் பதவிக்கு வந்த ஜனாதிபதிக்கு உண்டு. அதனை அவர் தட்டிக்கழிக்க முயன்றால் பெரும்பாவம் வந்து சேரும். அவர் அந்த வழி நடக்கமாட்டார் என்று எதிர் பார்க்கலாம்.

அதன் பிரகாரம், ஆழமான மனக்காயங்களுக்கு ஆட்பட்டு உள்ள, தமிழ் மக்களுக்கு விரைந்து விடிவு கிடைப்பதற்கு மைத்திரியும் அவரது அரசும் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும். வெறும், வாய்ச்சொல்லில் வீரரடி என்ற கெட்டித்தனத்தைக் காட்டுவதற்கு, கிஞ்சித்தும் நினைக்கக் கூடாது.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டு தொடக்கம், இதுவரை கொழும்பு அரசுகள் தட்டிப்பறித்த தமிழ் மக்களது உரிமைகளை அவர்களுக்கு வழங்குவதற்கு, துணிச்சலுடன், இடறல், ஏய்க்காட்டல் போன்ற எதிர்மறை விளைவுகளை உண்டாக்கும் அரசியல் பாதையில் கால் பதிப்பதற்கு இம்மியளவும் மனம் கொள்ளக்கூடாது. வெறும் அரசியல் புலுமாசுகள் தூக்கி வீசப்பட வேண்டியவை.

தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளலாமா? வெறும் வார்த்தைகளும், அறிவிப்புக்களும், பாதிப்புற்ற தமிழ் மக்களை ஏய்க்காட்டும் போக்கும் தொடராமல் இருக்கப் பார்த்துக் கொள்ளுமா ஆட்சியில் உள்ள அரசு...?

# விவசாய அமைச்சில் தவறு நடைபெறுகையில் மாகாண உறுப்பினர்கள் எங்கே இருந்தார்கள்?

## உடனுக்குடன் ஏன் தட்டிக்கேட்கவில்லை?

ம.கணபதிப்பிள்ளை

தமிழர்வாழ்வுநெறிதொன்மைக்குத் தொன்மையானது. மொழிகள் எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்னரே செம்மையான வாழ்வு நெறியைக் கொண்டவர்களாக அவர்கள் இருந்துள்ளனர் என்பதை காது வழியாக வந்த செய்திகள் தெரிவிக்கின்றன. பின்னை நாளில், அந்தச் செய்திகள் எல்லாம் புராணங்களாக, இதிகாசங்களாக, சாத்திர தோத் திரங்களாக, திருமுறைகளாக வெளி வந்திருப்பதைப் படித்து அறிந்து உள்ளூர உணர்ந்து கொள்கிறோம்.

வடக்கு, கிழக்கு, எமது தாயக பூமி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் மன்னாரில் உள்ள கேதீச்சரம் பற்றியும், திரு கோணமலையில் உள்ள கோணேஸ்வர நாதர் பற்றியும் சிந்தை குளிரப் பாடிய பாக்களைத் திருமுறைகளில் பார்க்கிறோம். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தர மூர்த்தி நாயனார், கேதீச்சரம் பற்றிச் சிந்தை மகிழ்ந்து பாடிய பாக்களையும் திருமுறைகளில் பார்க்கிறோம். இவர்கள் இருவரும் அந்தணர் குலத்தில் பிறந்தவர்கள். அவர்கள் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதுடன், தமிழ் அன்னையாலும் ஆட்கொள்ளப் பட்டவர்கள் என்பதைத் தெரிந்து கொள்மின்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலே வாழ்ந்த அருணகிரிநாதர் தென்னிலங்கையிலே குடிகொண்ட கதிர்காமத்தைப் பற்றித் தாம் பாடிய சந்தமிகு திருப்புகழிலே பாடிய பாக்கள் எமது உள்ளத்தையெல்லாம் கிள்ளுகிறதே!

இதற்குமுன் இதிகாசங்களில் இலங்கையைப் பற்றிய பல செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பாக மலையகத்தில் சீதைக்குக் கோயில் கட்டப்பட்டு வழிபட்டு வருவதையும், இன்று நேற்றல்ல அந்தக் கோயில், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே கட்டப் பட்டது என்ற செய்தியையும் நாம் அறிகிறோம். சங்க காலத்திலே பூதத்தேவனார் என்ற புலவர் வாழ்ந்தார் எனவும், அந்தக் காலகட்டத்தில் இலங்கை சிவ பூமியாகக் கருதப்பட்டதையும் நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

எங்கள் சமயத்தில் கூறப்படுகின்ற அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான ஏரம்பமூர்த்தி நாயனார், எமது நாட்டைச் சேர்ந்தவரே என்று கருதப்படுவதையும் நாம் அறிந்திருக்கிறோம்.

இவற்றைவிட, இன்னும் குறிப்பிடவேண்டிய செய்திகள் பல இருக்கின்றன. அவையெல்லாம் இங்கு குறிப்பிடப்படவில்லை.

இவற்றையெல்லாம் உற்று நோக்கும்போது, இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்களே என்பது வெளிப்படையாகிறது. இதைச் சிங்கள வரலாற்றாசிரியர்களுள் சிலரும்கூட ஒப்புக் கொள்கிறார்கள். இதற்குக் கல்வெட்டுக்களும் சான்றாக இருக்கின்றன.


இவையெல்லாம் இருக்க, யாழ்ப்பாணத்துக்கென தனித்துவமான குணங்கள் பலவுண்டு. பதின்மூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழ் இராச்சியம் ஒன்று இருந்ததாக வரலாறு பதிகிறது. ஆரியச் சக்கரவர்த்தியே அதன் அதிபதியாக இருந்து கோலோச்சி வந்தார். அவர் அந்தக் காலத்தில் சிங்கள இராச்சியமான கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றப் பூநகரிப் பாதை ஊடாகத் தரைப்படை ஒன்றையும், புத்தளம் சிலாபம் ஊடாகக் கடற்படை ஒன்றையும் தெரிவு செய்து இரு முனைத் தாக்குதலை மேற்கொண்டார்! அந்தத் தாக்குதலை எதிர்கொண்ட சிங்களப் படைக்கு தளபதியாக இருந்தவர் சம்புமால் குமரையன் என்ற தமிழ் மகனே! ஆரியச் சக்கரவர்த்தியின் படையெடுப்பை முறியடித்த கோட்டை இராச்சிய மன்னனாய் அப்போதிருந்த மூன்றாம் பராக்கிரமபாகு, சந்ததியின்றி இறக்க, தளபதியாக இருந்த சம்புமால் குமரையன் கோட்டை இராச்சியத்துக்கு மன்னனாய் ஆனான். சிங்கள மக்களின் நல்ல மதிப்பையும் நம்பிக்கையையும் பெறும் பொருட்டுத்தனது பெயரை நாலாம் பராக்கிரமபாகு என்று மாற்றிக் கொண்டான். இந்தப் பராக்கிரமபாகுவே இடிபாட்டுக்குள்ளான நல்லூர்க் கோயிலைப் புதுக்கிச் சீரமைத்தான் என்பதும் ஒரு வரலாற்றுப் பதிவாகும். நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் வரை நீடித்தது.

> பெரும்பான்மைப் பலம் கொண்ட சிங்களத் தலைமைகளால் கருவறுக்கப்பட்டு வந்தும், சளைக் காமல் இன்று நாம் தலை நிமிர்ந்து நிற்கிறோம். அதற்கு அடையாளமாக யாழ். மாகாண ஆட்சி எமது கைக்குள் வந்தது. அந்த ஆட்சி வலுவடையத் தமிழ் மக்கள் ஒத்துழைப்புத் தந்தார்கள். ஆட்சியும் நல்லதாய் அமைந்தது.

யாழ்ப்பாணத்தைப் பற்றிய இன்னொரு செய்தியும் இருக்கின்றது. அது சிங்ககிரியைத் தலை நகராகக் கொண்ட இராச்சியம் பற்றிப் பேசுகிறது. இந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து யாழ். மீட்டி இசைபாட வல்லாரும், கண்பார்வை அற்றவருமான, வீரஇராகவன் என்பவர் இங்கு வந்தார். அவர் மன்னன் அவையில் இசைமழை பொழிந்தார். அந்தமழை மன்னன் உள்ளத்தைக் குளிர வைத்தது. மகிழ்ச்சி வெள்ளத்தில் திழைத்த மன்னன் மணல் திட்டியாய் இருந்த நிலப் பரப்பைக்காட்டி அதைப் பரிசாக அந்த இசை பாடிக்கு வழங்கினார். அந்த நிலப் பரப்பே யாழ்ப்பாணம் என்று காரணப் பெயரைப் பெற்றதாக அந்தச் செய்தி சொல்லுகிறது.

யாழ்ப்பாணம் உலகறிந்த பூமி. தமிழ் அன்னை கொலு விருந்து கோலோச்சும் பூமியிது. ஏட்டுருவில் வாழ்ந்த தமிழ் அன்னை, காலவெள்ளத்தால் அள்ளுண்டு போகாமல் அச்சுவாகனம் ஏற்றிய நாவலர் வாழ்ந்த பூமியிது. பாநடையிலே நடமாடிய தமிழன்னைக்கு அன்னநடை, அழகு நடை, வண்ணநடை, வசனநடை கற்றுக்கொடுத்த பூமியல்லவா யாழ்ப்பாணம்? கற்றறிந்த நல்லறிஞர்களும்; புலமைமிக்க புலவர்களும், இலக்கண வித்தகர்களும், சான்றாமை மிக்க பெரியோர்களும், சித்தர்களும், சிவஞானிகளும் வழிகாட்டிகளாய் நின்று நடமாடிய பூமியல்லவா இது?

தமிழர் தாயகமாம் தமிழ் நாட்டார் இந்தப் பூமி பற்றிக்கொண்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருத்தை யும் மதிப்பீட்டையும் நீவீர் அறிவீரோ, என்னவோ! கேள்மின்!
"நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல்' சொல்லு தமிழ் எங்கே, சுருதி எங்கே எல்லவரும் ஏற்றும் புராணங்கள் எங்கே, இதிகாசங்கள் எங்கே" என்று விதந்தோதி நின்றனரே!
அன்று கல்கிச் சஞ்சிகையின் ஆசிரியராய் இருந்த கிருஷ்ண மூர்த்தி 'யாழ்ப்பாணத்தில் எவ ரொருவராவது சறுக்கி விழுவார் களேயானால்; அவர் நிச்சயம் ஒரு பண்டிதர் மேல்தான் விழுவார்' என்று யாழ்ப்பாண மக்களின் கல்விப் பெருமையை விதந்துரைத்து நின்றாரே!
இன்று தமிழ் நாட்டார், யூத இனத் தைப் போல மதிநுட்பமுடைய, மண்டை வளமுடையவர்களாக யாழ்ப்பாணத்தாரான எம்மைக் கணிப்பதையும், மதிப்பதையும் கண்ணாரக்கண்டு காதாரக் கேட்கி றோமே!
அண்மையில் மறைந்து போனசிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ, எவரை ஏமாற்றினாலும் யாழ்ப்பாணத்தாரை ஏமாற்ற முடியாதென்று கூறிப்போந்தாரே!
இப்படியாகத் தொன்மையும், சிறப்பும், வரலாற்றுப் பெருமையும், அறம் திறம்பாத பண்புகளையும், கொண்ட இலங்கை வாழ் தமிழினம் இலங்கை சுதந்திரம் பெற்றநாள் முதலாகப்பெரும்பான்மைப் பலம் கொண்ட சிங்களத் தலைமைகளால்கருவறுக்கப்பட்டுவந்திருந்தும், சளைக்காமல் இன்று நாம் தலைநிமிர்ந்து நிற்கிறோம். அதற்கு அடையாளமாக யாழ். மாகாண ஆட்சி எமது கைக்குள் வந்தது. அந்த ஆட்சி வலுவடையத் தமிழ் மக்கள் ஒத்துழைப்புத் தந்தார்கள். ஆட்சியும் நல்லதாய் அமைந்தது.
காட்சிக்கு எளியனாய், கடும் சொல் இல்லாத அறநெறியே தன்நெறியாகக் கொண்ட தமிழின அடையாளங்களை வெளிப்படுத்தி நிற்கும் பெருமைமிக்க முதலமைச்சர், துறைசார்ந்த வல்லுநர்களைக் கொண்ட அமைச்சரவை, அநுபவமும் ஆளுமையும் நிரம்பிய அவைத் தலைவர் என்போரை மட்டுமன்றி அவையோ எனில் அறிவு, ஆற்றல், அனுபவமுள்ள கற்றோரையும் இளவல்களையும் கொண்டது. வடக்கு மாகாண சபை பற்றாக் குறையோடு கிடைத்த அதிகாரங்களைக் கொண்டு ஆட்சி நடத்துகிறது அது.
எதிர்க்கட்சி என்பதை ஆளும் கட்சியை நெறிப்படுத்தும் கடமையைச் செய்யும் அமைப்பாகவே கருதவேண்டும். காய்தல் உவத்தலை நடுநிலை நின்று ஆய்ந்து அரசைக் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்து, ஒத்துழைக்க வேண்டிய இடத்தில் ஒத்துழைக்கும் பணியைச் செய்ய வேண்டும். தாம் சார்ந்த கட்சியை எதற்கும் மேல்நிலைப்படுத்தும் உள் நோக்கைக் கொண்டதாக இருக்கக் கூடாது. இந்தச் செல்நெறியைக் கடைப்பிடிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் யாழ். மாகாண சபைக்குக் கிடைத்திருக்கின்றார். அதுவும் ஒரு பேறேயாகும்.
'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக் கப்படும்' நல்லாட்சியின் செம்மையை இந்தக் குறட்பா வெளிப்ப டுத்திக் காட்டுகிறது. முறை என்றால் நீதி. நீதி என்பது எப்படி அமைய வேண்டும்; நீதி என்றால் என்ன என்று எம் முன்னோர் செங்கோ லின் பாங்கைச் செயலிலே காட்டியதை உலகம் கண்டு வியக்கவில்லையா?
'ஆய்ந்தோய்ந்து பாராதான் வாழ்க்கை சாய்ந்துணையும் தீராத இடும்பை தரும்'
என்று எம்மை விழிப்படைய வைக்க ஒரு குறட்பா சொல்லுகிறது. சிந்தனையின் திறத்தையும் அதன் பெறுபேற்றையும் இந்தக் குறட்பா துல்லியமாக எடுத்து ரைக்கின்றது. தலைமைப் பொறுப்பில் உள் ளவர்க்கோர் கண்டிப்பான செய்தியிது.
முதலமைச்சர் பூத்தட்டைக் கையேந்தி புத்தபிரான் அடிதொழ நாகவிகாரை சென்றமையானது, சிந்தனையின் ஊற்றில் பிறந்த செயலேயாகும். சம்பந்தன் ஐயாவும், தம்பி சுமந்திரனும் சுதந்திர விழாக் காணச் சென்றமையும் சிந்தனையின் ஊற்றில் பிறந்த செயல் என்பதைப் புரியாதார் புரிந்து கொள்மின்!
வடமாகாண சபை ஒரு மேலவையாக விளங்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். தக்கார்களைக் கொண்ட அவை யாகவும், ஆளும் அவையாகவும் இருப்பதால் நிகழ்வுகள் செயற்பாடுகளில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து அதனது தரம், தகுதியில் பண்பாட்டின் விழுமியங்கள் துலங்க வேண்டும். அது விளங்கவேண்டும்; பளிச்சிட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே மேலவையாக விளங்க வேண்டும்என்றசொற்பதம்பிரயோகிக்கப்படுகிறது.
பேச்சிலே, கருத்திலே நடத்தையிலே எங்கள் பெருமைக்கும், சிறப்புக்கும் களங்கம் ஏற்படக் கூடாதென்பதும், மேன் மேலும் அவை தங்கிடவே செயல்கள் எல்லாம் அமைந்திட வேண்டும் என்பதுமே மக்களின் எதிர்பார்ப்பாய் அமைகிறது.
விரும்பத்தகாத சில நிகழ்வுகள் கடந்த காலகட்டங்களில் நடந்திருப்பதைக் கருத்தில் கொள்ளாமல், கிட்டவாய் நடந்த விவசாய அமைச்சின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்துக் கவலையோடு கண்டனம் செய்ய வேண்டியிருக்கிறது.
பெரும் குற்றச் செயல்களுக்கான விவசாய அமைச்சைக் குற்றம் குறைகள் இல்லா அமைச்சாகத் தூக்கி நிலைநிறுத்துவது எமது நோக்கமல்ல. குற்றமும் குறையும் எங்கே இருக்கிறதென்பதை ஆராய்வதே எமது நோக்கமாகும்.
விவசாய அமைச்சர்வேறுதுறைகளுக்கும் பொறுப்பாக இருப்பவர். 'சொல்கிறவர்களுக்கு வாய்ச்சொல், செய்கிறவர்களுக்கு தலைச்சுமை' என்பார்கள். இந்தக் கருத்தை மனதில் இருத்தி ஆய்வு தொடர்கிறது.
இந்த அவையிலே வீற்றிருக்கின்ற உறுப்பினர்களுடைய கடமைகள் பொறுப்புக்களைக் குறைவாக மதிப்பிட முடியாது. அவையின் நடவடிக்கை, செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனித்து பொறுப்புள்ளவர்களின் செயற்பாடுகளில் காணப்படுகின்ற குற்றம் குறைபாடுகளைக் களைய அவ்வப்போதே சுட்டிக்காட்டி அவையை நெறிப்படுத்தியிருந்தால், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டிய தேவை ஏற்பட்டிருக்க வாய்ப் பேயில்லை அல்லவா? இந்த அமைச்சு மீது பதினொரு குற்றச்சாட்டுக்களை அடுக்கடுக்காய் சுமத்தியிருக்கிறீர்களே! இந்தக் குற்றச்சாட்டுக்களைக் கண்டு பிடிக்க உங்களுக்கு இரண்டரை ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றதா? இந்தக் காலப்பகுதியில் எத்தனை அமர்வுகள் நடந்தன? நீங்கள் விழிப்பாய் இருந்திருந்தால், அசமந்தப் போக்கைத் தவிர்த்திருந்தால், உங்களது குற்றச்சாட்டுக்கள் தோன்ற வாய்ப்பு வந்திருக்காதே? இப்போது யார் குற்றவாளி? அமைச்சரா? அல்லது நீங்களா?
நீங்கள் எல்லோரும் ஓர் அணியினர். ஓர் அணியினர் என்றால் கூட்டுப் பொறுப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். அமைச்சின் செயற்பாடுகள் சீராய் அமைந்திட உங்களின் பங்களிப்பு அதற்கு இருக்கவேண்டும் அல்லவா? இவற்றையெல்லாம் உணர்ந்து கொள்ளாமல் எட்ட இருந்து அவரை விமர்சிப்பதால் மட்டும் பயன் கிட்டிவிடுமா?
பெரும்பாலும் நீங்கள் நடுவயதைக் கடந்தவர்கள். உங்கள் எண்ணத்திலே, பேச்சிலே, செயலிலே, தலைமைத்துவப் பண்பிலே, ஓர் உயர்வு காணப்பட வேண்டும். பேசுவதை அளந்து பேசவேண்டும்; அளவறிந்து பேசவேண்டும். பிறர் எம்மைப் பார்த்து ஆட்சியை நடத்தத் தெரியாதவர்கள்; அதைப் போட்டுடைக்கிறார்கள் என்று கருத இடந்தராமல், எமது வருங்கால சந்ததியினர்க்கு எடுத்துக் காட்டும் முன்னோடிகளாக நீங்கள் நடந்து கொள்ளவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

## பட்டதாரிகளின் போராட்டம்

வேலையில்லாத பட்டதாரிகள் தமக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்வரை தொடர் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.
இவர்களின் கோரிக்கை நியாயமானதுதான். எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் படித்துப் பட்டம் பெற்ற பின்னர் வேலை எதுவும் இல்லாமல் இருப்பதென்பது கவலை தருகின்ற விடயம் தான்.
முன்பெல்லாம் எமது நாட்டில் ஜீ.சி.ஈ.சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு அரச உத்தியோகம் பதிவு செய்யப்பட்டுவிடும். போட்டிப் பரீட்சைகள் ஒழுங்காக அன்று இடம்பெற்று நியமனங்களும் வழங்கப்பட்டன. ஆனால் அந்த நிலை இன்று காணப்படவில்லை. பட்டதாரிகளே வேலை கிடைக்காத நிலையில் போராட வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.
முன்னர் இந்தியாவில் இந்த நிலை காணப்பட்டது. எம்.ஏ படித்தவர்கள் கூட தேநீர்க் கடைகளில் பணியாற்றிய அவலமும் அங்கு நிகழ்ந்துள்ளது. மேலும் கல்வி கற்பதற்குரிய வாய்ப்பு அங்கு அதிகமாக இருந்ததால் பெருமளவு பட்டதாரிகளும் அங்கு உருவாகினர்.
இன்று இலங்கையிலும் அந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு எமது நாட்டின் கல்விக் கொள்கையே பிரதானமான காரணமாகும். நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் வகையிலான கல்விக் கொள்கை இன்னமும் இங்கு உருவாக்கப்படவில்லை. எந்தவிதமான நோக்கமும் இன்றி இவ்வாறு வெறுமனே பட்டங்களை வழங்குகின்ற பணிகளிலேயே இங்குள்ள உயர்கல்வி நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. மாணவர்களும் எந்த விதமான குறிக்கோளும் இன்றி இவ்வாறு இலகுவான பாடநெறிகளைத் தெரிவு செய்து பட்டங்களைப் பெறுவதிலேயே குறிப்பாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே பெருமளவு பட்டதாரிகள் தொழில் வாய்ப்பின்றி இருக்கின்றனர்.
ஆகவே உயர் கல்வி நிறுவனங்கள் வெறுமனே பட்டங்களை வழங்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்படாமல் பயனுள்ள வகையிலான பட்டதாரிகளை உருவாக்க வேண்டும். இவ்வாறானதொரு நிலை உருவாகுமானால் பட்டதாரிகள் போராட்டங்களில் ஈடுபட வேண்டிய தேவையே ஏற்படமாட்டாது.

பா.தர்மிலன்.கோப்பாய்

## மின்சாரசபை ஒப்பந்தகாரரின் நாசகார வேலையால் சிரமம்

இலங்கை மின்சார சபையின் மின்கம்பிகள் செல்லும்பாதையில் உள்ள தடைகளை அகற்றுவதற்கு மின்சாரசபையின் ஒப்பந்தகாரரை ஒழுங்கு செய்கின்றனர். இவர்களுக்கு, வேலியில் உள்ள கதியால், தென்னைமரத்தில் உள்ள தென்னோலை, மரக்கிளைகள் என்பவற்றை வெட்டி அகற்றுவதற்குப் பணம் ஒப்பந்த மூலம் மின்சார சபையால் வழங்கப்படுகின்றது.
மின்சாரசபையுடன் ஒப்பந்தம்செய்துகொள்ளும் கனவான்களின் கடமை உணர்ச்சிக்கு, பொன்னாடை போர்த்த வேண்டியுள்ளது. பணம் பெறுவது கதியாலை வெட்டி அகற்றுவதற்கு. ஆனால் அவர்கள் கதியால் அடியில் வெட்டாமல், நடுப்பகுதியில் வெட்டி, விழுத்தாமல் சாய்த்து விடுவார்கள். பாவனையாளர்கள் கூலியாள்களைப்பிடித்துத்திரும்பவும் கதியாலை அடிப் பாகத்தில் வெட்டித் துப் புரவு செய்ய வேண்டும். அவர்களின் செயலால் வீதியால் பயணிப் போர் காணிச் சொந்தக்காரரை வசைபாடுகின்றனர். கனவான் கள் தங்கள் வீட்டுவேலியென்றால் அரைகுறை வேலைசெய்வார்களா? ஒப்பந்தம் செய்வது மரங்களை, கதியாலை வெட்டி அகற் றவா அல்லது அரைகுறையாக வெட்டிச் சாய்க் கவா என்பதை மின்சார சபையினர்தான் தீர்மானிக்க வேண்டும்.

குழைக்காட்டான், தென்மராட்சி

## இவர்களும் தமிழர்கள்தானா?

2009ஆம் ஆண்டு எமது வீர மறவர்களின் ஆயுதங்கள் மௌனித்தது முதல் எமது தமிழ் மக்களின் வாழ்வு இருள் சூழ்ந்த காலமாகவே இருந்து வருகின்றது. போரில் வென்றவர்கள் வெற்றிக் கொண்டாட்டமும் பெருமிதமும் கொண்டாடும் இந்த நிலையில், எமது தமிழ் மக்கள் மீது அராஜகங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அவற்றில் கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகங்கள் என பல வடிவிலானவை எமது மக்களை சூழ்ந்துள்ள நிலை. இவற்றுக்கெல்லாம் யார் பாதுகாப்புத் தருவார்கள் என ஏங்கித்தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், கடந்த மாதம் வவுனியாவில் பாலியல் துஷ்பிரயோகத்தில் பலியான சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை இணங்காணுமாறும், இனியும் எங்கள் மண்ணில் இவ்வாறான செயல்கள் இடம்பெறாமல் இருக்க வேண்டுமெனவும் நாட்டின் மீது அக்கறை கொண்ட அமைப்புகளால் 24.02.2016 அன்று ஹர்த்தால் (கடையடைப்பு) ஒன்று மேற்கொள்ளப்பட்டு தமிழ் மக்களின் ஒன்றிணைந்த எதிர்ப்பு ஒலியை காட்ட, இதற்கு மாறாக தனியார் துறை ஊழியர்கள், சிலர், தமது நிறுவனங்களில் கடமையில் ஈடு பட்டதை அவதானிக்க முடிந்தது. எனவே ஒரு தமிழனுக்கு இடர் ஏற்படும் போது எல்லோரும் ஒருமித்து குரல் கொடுத்தால் மட்டுமே, எமது மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அராஜகம் நாட்டில் இல்லாது போகும். இதனை ஒருகணம் எமது மனதில் சிந்திப்போம். சிந்திக்காத விடத்து இவர்களும் தமிழர்கள்தானா? என்ற கேள்வியே உருவாகும்.

– வலிகாமத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## பரீட்சையில் மாணவர்களுக்கு உதவும் மணிக்கூட்டால் சர்ச்சை

வொசிங்டன், மார்ச் 5
பிரபல இணைய வர்த்தக நிறுவனமான அமேசன், மாணவர்களுக்குப் பரீட்சையில் உதவும் மணிக்கூட்டைப் பகிரங்கமாக விளம்பரப்படுத்தி விற்பனை செய்து வருகின்றது.
4 ஜிபி மெமரியைக் கொண்ட இந்த மணிக்கூடு 44.95 பவுன்ஸ் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. இது தகவல்களை இரகசியமாக வைத்திருப்பதற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஏமாற்றுவதற்காகவே விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள மென் பொருளைக் கொண்டுள்ளதால் 'சீட்டிங் வோச்சஸ்' என்று அழைக்



கப்படுகிறது. பாட அலகுப் பரப்பை இதில் முழுமையாக உள்ளடக்க முடியும். படங்கள், குறிப்புக்கள் அனைத்தையும் உள்ளடக்கி மணிக்கூடாகக் கட்டிக் கொள்ளலாம். இதனை இயக்குவதற்காக விசேட பொத்தான் உண்டு. அதனை அழுத்தியதுடன் பாட அலகுகளைப் பார்க்க முடியும். மற்றப்படி மணிக் கூடாகவே செயற்படும்.
பாடசாலை அதிபர்கள், பரீட்சை அதிகாரிகள் இந்தச் சாதனம் தொடர்பில் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். இதற்குப் பதில் அளித்த அமேசன் நிறுவன ஊடகப்பேச்சாளர், இதனை நாம் சீட்டிங் வோச்சஸ் என்று விளம்பரப்படுத்தவில்லை எனத் தெரிவித்தார். (த-ரி4)



# கொலரா நோயால் துவளும் ஹெய்ட்டி

### கடந்த ஆறு வருடங்களில் மட்டும் 7லட்சத்து 70 ஆயிரம் பேர் பாதிப்பு

போட் – அவு – பிரின்ஸ், மார்ச்.5
ஹெய்ட்டியில் கொலராவின் தாக்கம் அதிகரித்துள்ளமையால், அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட ஒவ்வொரு மாதமும் 37 பேர் கொலராவால் உயிரிழக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
2010 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் நில அதிர்வு தலைநகரான போட் – அவு – பிரின்ஸைத் தாக்கியது. இதன் பின்னர் கொலரா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை குறைந்தது 7லட்சத்து 70 ஆயிரம் பேர் நோய் தாக்கத்துக்கு ஆளாயினர் என்றும் 9 ஆயிரத்து 200 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கொலராவுக்கான தடுப்பு நடவடிக்கைகள் நில அதிர்வின் பின்னர் 10 ஆவது மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டன. ஹெய்ட்டியில் 150 வருடங்களில் இல்லாத அளவுக்கு நாடு தழுவிய நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டில் மட்டும் 6 ஆயிரம் பேர் நீர் மூலம் பரவும் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என அரசுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. கொலராவுக்கான பக்றீரியாக்கள் குழாய் நீர் மூலம் பரவுகின்றன. இதன் விளைவாக வாந்திபேதி ஏற்படுகின்றது. தகுந்த கவனிப்பின்மையால் சில மணி நேரங்களில் உயிரிழப்பு ஏற்பட்டு வருகிறது.
உலக சுகாதார நிறுவன ஊடகப் பேச்சாளர் கிரிகோரி ஹார்ட்ல் தெரிவிக்கையில், ஆண்டு முழுவதும் கொலரா நோய்த் தொற்றுள்ள நாடு ஹெய்ட்டி எனத் தெரிவித்துள்ளார்.
ஹெய்ட்டியில் 24 சதவீதத்தினரே மலசல கூடப் பாவனை உடையவர்களாவர் என்பதுடன், சுத்தமான நீரையும் பருகுகின்றனர். ஹெய்ட்டியில் சுகாதார அமைச்சை நோய்த் தொற்றுக்கு எதிராக வழிநடத்தும் ஜோசப் டொனாட் தெரிவிக்கையில், 2022 ஆம் ஆண்டளவில் நோயை முற்றாக நீங்கக் கூடிய வாய்ப்பிருப்பதாகத் தெரிவித்தார்.
இந்த நிலையைக் கட்டுக்குள் கொண்டு வர அயல் நாடுகளிடம் ஹெய்ட்டி அரசு உதவி கோரியது. இதன் மூலம் 307 மில்லியன் அமெரிக்க டொலர் உதவிப் பணம் கிடைத்தது. இது அவர்களின் நோய் ஒழிப்புத் திட்டத்துக்குப் போதவில்லை. இதனால் 200 சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடம் நிதி கோரப் பட்டும் சில நிறுவனங்கள் மாத்திரமே உதவின. இதனால் ஹெய்ட்டி அரசு கடும் நெருக்கடி நிலையை சந்தித்துள்ளது. (த-ரி4)

## சிறுவர்களைப் போராளிகளாக மாற்ற பயிற்சி வழங்கும் ஐ.எஸ்.

தமஸ்கு, மார்ச் 5
சிரியாவில் பெற்றோர்கள் கொல்லப்பட்டதால் காப்பகங்களில் பராமரிக்கப்பட்டு வரும் சிறுவர்களை அடுத்த தலைமுறைப் போராளிகளாக மாற்றும் முயற்சியில் ஐ.எஸ். ஈடுபட்டுள்ளது.
ஐ.எஸ். சமீபத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில் இது தொடர்பிலான காட்சிகள் வெளியிடப்பட்டுள்ளன.
3 நிமிடங்கள் செயற்படும் இந்த வீடியோவின், ஆரம்பத்தில் சிறுவர்கள் விளையாடுவது, உணவு உட்கொள்வது போன்ற காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. பின்னர் ஒரு குழுவாகச் சிறுவர்களை சதுக்கம் ஒன்றில் கூடச் வரச் செய்து, போராளிகளால் பயிற்சிகளுக்கு வற்புறுத்தப்படுகின்றனர்.
குறித்த எண்ணிக்கையில் உடற்பயிற்சிகள் முடிக்கப்படவேண்டும் என மூத்த போராளி இளைஞர் ஒருவரால் கட்டளையிடப்படுகிறது.
அத்துடன் சிரியாவில் ஐ.எஸ். கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள காப்பகங்களில் வளர்க்கப்பட்ட சிறுவர்கள் அத்தனை பேரும் ஐ.எஸ். நிலப்பரப்புக்கு அழைத்து வரப்படுவது படம் பிடிக்கப்பட்டுள்ளது. பின்னர் அவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள், உணவுகள் வழங்கப்படுகின்றன. பின்னர் ஐ.எஸ். அமைப்பின் முதியவர் ஒருவர் அவர்களுடன் அன்பாக உரையாடுவது காண்பிக்கப்படுகிறது. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்களாக துப்பாக்கி, ஏனைய ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன. பின்னர் அடுத்த காட்சியாகப் பாலைவனத்தில் ஐ.எஸ். சீருடையுடன் சிறுவர்கள் பயிற்சி எடுக்கும் காட்சி படமாக்கப்பட்டுள்ளது. இந்த வீடியோ சமூக ஆர்வலர்களிடம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த-ரி4)







# சிரியா முழுவதும் 3 நாள் மின்வெட்டு



தமஸ்கு, மார்ச் 5
சிரியாவில் நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டுள்ளது. பிரதான மின் நிலையத்தில் ஏற்பட்ட சேதத்தினால் தொடர்ந்து 3 நாள்கள் மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் இணையப் பாவனை, கைபேசி இணைய வசதிகள், வலையமைப்புகள் முடங்கியுள்ளன என மின்சார அமைச்சு தெரிவித்ததாக சிரிய தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.
2011 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரால், கட்டடங்கள் நொறுக்கப்பட்டு கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை சிரிய நாடாளுமன்றத்தில் மின்தடை தொடர்பான சிக்கலுக்குப் பதிலளிக்கும்படி மின்துறை அமைச்சர் இமாத் காமிஸ் அழைக்கப்பட்டிருந்தார். இந்தக் கலந்துரையாடலின் போது கடந்த 5 வருடங்களில் மின் துறைக்கு ஏற்பட்ட சேதம் 2.6 பில்லியன் பவுண்ஸ்கள் என்ற தகவல் முன் வைக்கப்பட்டது.
13 பிரதான மின் வழங்கும் நிலையங்களில் 5 சேதமடைந்துள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.
இதற்கிடையில் சிரியாவில் போர் நிறுத்தம் நடைமுறைப் படுத்தப்பட்டுவருகிறது. ஆனால் போர்நிறுத்தம் ஆரம்பித்து ஆறாவது நாள் அமெரிக்கா, ரஷ்யா என்பவை அதனை மீறின.
இருப்பினும் ஐ.நா. அவதானிப்பாளர் டி மிஸ்ரூரா தெரிவிக்கையில், சிரியாவில் வன்முறைச் சம்பவங்கள் பெருமளவில் குறைந்துள்ளன. சிரிய அரசு தரப்புக்கும் போராளிக்குழுவுக்களுக்கும் இடையே சமாதான பேச்சுக்கான சமிக்ஞை தென்படுவதாக அவர் தெரிவித்தார். 5 வருடங்கள் ஏற்பட்ட இழப்புகளுக்கும் வடுக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒப்பந்தமாக இதுஅமைந்துள்ளது என்றார். (த-ரி4)

# பொலிஸ் வாகனம் மீது சூடு நடத்திய பெண்கள்

### துருக்கி தலைநகரில் சம்பவம்

இஸ்தான்புல், மார்ச் 5
துருக்கி தலைநகர் இஸ்தான்புல் பிரதான வீதியில் இரு பெண்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், கிரனேட் வீச்சிலும் ஈடுபட்டனர்.
இந்தத் தாக்குதல் பொலிஸ் பேருந்தைக் குறிவைத்துநடத்தப்பட்டுள்ளது. இறுதியில் அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்ட இரு பெண்களும், படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்.
இந்தச் சம்பவம் பைரம்பாசா மாவட்டத்தின் நகரில் இடம்பெற்றது. இரு பெண்கள் பொலிஸாரின் பேருந்தை நோக்கி இயந்திரத் துப்பாக்கியால் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியமை கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.
பதிலுக்குப் பொலிஸாரும் தாக்கியதில் ஒரு போராளி காயமடைந்தார். அவ்விடத்தில் அமைந்துள்ள அரச அலுவலகத்தினுடாக வாகனம் ஒன்றில் இருவரும் தப்பித்தனர். ஆனால் பொலிஸார் அப்பகுதி மக்களை வீடுகளை விட்டு வெளியேறச் செய்து சுற்றிவளைப்பை நடத்தினர். அவர்களைக் கைது செய்வது அல்லது கொல்வது என்பதே பொலிஸாரின் குறிக்கோளாக இருந்தது. கண்காணிப்புக் கமராவில் பதிவான காட்சிகள் தொலைக் காட்சியில் வெளியிடப்பட்டன.
போராளிகள் இருவரும் கட்டடம் ஒன்றில் வைத்துச் சுற்றி வளைக்கப்பட்டார்கள். பொலிஸார் கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றைய போராளியைச் சரணடையும்படி பொலிஸார் கட்டளையிட்டனர். ஆனால் அவர் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவே, பொலிஸார் அவரையும் சுட்டுக் கொன்றனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் இஸ்தான்புல் கவர்னர் வஹிப் சஹின் தெரிவிக்கையில்,
2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர். தாக்குதலின்போது பேருந்துக்குச் சேதம் ஏற்பட்டது. தாக்குதல் நடத்திய அமைப்பினர், அதற்குத் துணையானவர்களை விரைவில் கைது செய்வோம் எனத் தெரிவித்தார்.
இதற்கிடையில் பாடசாலைகளுக்குச் சென்றிருந்தபிள்ளைகளைஅழைத்து கொள்ளபெற்றோர் முண்டியடித்தனர். தாக்குதல் நடத்திய பெண்கள் சிக்டெம் யக்சி மற்றும் பெர்னா யில் மாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் இடதுசாரிப் போராளிக் குழுவைச் சார்ந்தவர்கள் ஆவர்.
குறித்த அமைப்பினர் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளனர். அவர்கள் தாக்குதல் தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில், மக்களின் விடுதலைப் போரைத் தமது தோள்களில் சுமந்து இரு பெண் போராளிகள் தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இதற்கு முன்னரும் பொலிஸ் நிலையத்தில், இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பாதுகாப்பு அதிகாரிகள், ஏனைய படையினர் மீது தாக்குதலும், வன்முறைச் சம்பவங்களும் இஸ்தான்புல்லில் அதிகரித்துள்ளன.
குர்திஷ் போராளிகளுக்கும், படையினருக்கும் இடையில் போர் இடம்பெற்றது. பின்னர் போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தது. கடந்த வருடம் ஜூலை மாதம் ஒப்பந்தம் மீறப்பட்டது. 30 வருடங்களாக இந்த உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா சிறப்பிதழ்

06 - 03 - 2016



## முல்லை - கரைதுறைப்பற்று கோட்டக்கல்விப் பணிப்பாளர்

## கதிரவேலு சபாபதி பரமேஸ்வரன் (G.S.P)

மணிவிழா நாள் 06.03.2016

### சேவை விவரம்

| | |
|---|---|
| 01.11.1978 - 31.01.1983 உதவி ஆசிரியர் | கிளி / தருமபுரம் ம.வி |
| 01.02.1983 - 31.12.1984 பயிற்சி ஆசிரியர் | கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை. பாடம் - சமூகக்கல்வி |
| 01.01.1985 - 30.08.1985 பயிற்றப்பட்ட ஆசிரியர் | மட்/பெரியபுல்லுமலை றோ.க.த.க.பா. |
| 01.09.1985 - 14.01.1986 பயிற்றப்பட்ட ஆசிரியர் | மு/அம்பலவன் பொக்கணை ம.வி |
| 15.01.1986 - 30.04.1989 பயிற்றப்பட்ட ஆசிரியர் | மு/பாரதி வித்தியாலயம் |
| 01.05.1989 - 31.08.1989 கடமை நிறைவேற்றும் அதிபர் | மு/பாரதி வித்தியாலயம் |
| 01.09.1989 - 31.08.1992 நிரந்தர அதிபர் | மு/பாரதி வித்தியாலயம் |
| 01.09.1992 - 30.09.1994 அதிபர் | மு/விசுவமடு ம.வி |
| (01.06.1993 - அதிபர் மு/விசுவமடு ம.வி அதிபர் தரம் - 1) | |
| 01.10.1994 - 31.12.1995 அதிபர் | மு.மல்லாவி ம.வி |
| 01.01.1996 - 31.03.2000 அதிபர் | மு/உடையார் கட்டு ம.வி |
| 01.04.2000 - 31.12.2004 கோட்டக்கல்விப்பணிப்பாளர் | கரைதுறைப்பற்று கல்விக்கோட்டம் |
| 01.01.2005 - 31.01.2013 கோட்டக்கல்விப்பணிப்பாளர் | புதுக்குடியிருப்பு கல்விக்கோட்டம் |
| 01.02.2014 - 05.03.2016 இன்று வரை | கோட்டக்கல்விப்பணிப்பாளர் கரைதுறைப்பற்றுக் கோட்டம் |

### செயல் வல்லோன்

கரைதுறைப்பற்று புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி 2016.03.06 ஆம் திகதியுடன் ஓய்வுபெறும் திரு. கதிரவேலு சபாபதி பரமேஸ்வரன் அவர்கள் செயல்திறன் மிக்கவர். தான் நினைத்ததை தனது அணியினருடாக சாதிக்கும் ஆற்றல் அவரிடம் நிறைந்திருந்தது தனது கோட்டத்திற்குரிய அதிபர்கள் மீது அளப் பெரும் நேசம் கொண்ட இவர் அவர்களுடாக மாணவர்களின் விருத்தியை எவ்வாறு நாசூக்காக அதிகரிக்க முடியுமோ அவ்வாறு அதிகரிப்பதில் வல்லவர்.

இவர் காலத்தில் நடந்த கோட்டமட்ட நிகழ்வுகளில் எல்லா அதிபர்களையும் பங்கு கொள்ள வைப்பதில் வெற்றி கண்டவர்.

" இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்"

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப சகலரையும் ஒருநொடியில் அளவிட்டு பொறுபபுக்களை ஒப்படைத்து நிறைவேற்றுவதில் திறமை மிக்கவர்.

சிறந்த தலைமைத்துவப்பண்புகளும், தொடர்பாடல் திறனும், அனுபவ முதிர்ச்சியும் கொண்டவர். முப்பத்தியெட்டு வருடம கால கல்விப்புலச் சேவையை நிறைவு செய்து ஓய்வுபெறும் திரு.G.S பரமேஸ்வரன் அவர்களின் ஓய்வுக் காலம் சிறப்புடன் அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர் சங்கம்**
**முல்லைத்தீவு கல்வி வலயம்.**

### கல்விப்புலத்தில் வரலாறு படைத்தவர்



எமது கல்வி வலயத்தில் மிக நீண்ட காலம் கல்விப்பணிபுரிந்து 06.03.2016 ஆம் திகதியுடன் ஓய்வு பெறும் திரு G.S பரமேஸ்வரன் அவர்களின் சேவை அளப்பரியது. எமது கல்வி வலயத்தில் நீண்டகாலம் அதிபராகவும் பின்னர் கரைத் துறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய கோட்டங்களின் கோட்டக் கல்வி அதிகாரியாகவும் மிகத்திறம்பட பணிபுரிந்த இவரின் ஆளுமை வியக்கத்தக்கது. தனது சேவைக்காலத்தின் இறுதிப் பகுதியில் கரைதுறைப்பற்றுக் கோட்டக்கல்வி அதிகாரியாக கடமையாற்றிய போது நோய் காரணமாக உடல் தளர்ந்திருந் தாலும் உள்ளந் தளராது தனது கடமையை செவ்வனே செய்து முடித்தவர். இலக்குகளை நிர்ணயிப்பதிலும் அவற்றை தனது ஆளணியூடாக அடையச் செய்வதிலும் கைதேர்ந்தவர்.

தனது கல்விக் கோட்டத்தை தன்னுடையது என்ற உணர் வுடன் நாளும் பொழுதும் கட்டிக்காத்தவர். தனது கோட்டத் துக்குட்பட்ட பாடசாலைகளின் தேவைகளை நிறைவு செய்வதற் காக எவருடனும் பேரம் பேசி சாதித்தவர்.

உண்மையில் அனுபவமுதிர்ச்சியும், செயற்றிறனும் மிக்க ஒரு கோட்டக்கல்வியதிகாரி ஓய்வு பெறுவதென்பது முல்லைத்தீவு வலயத்திற்கு பேரிழப்பாகும். ஓய்வு காலத்திலும் அவரது அனுப வமும், ஆலோசனைகளும் எமது வலயத்தின் கல்விப்பணிக்கு உரம்சேர்க்க வேண்டும். அதற்காக இறைவன் அவருக்கு நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி உதயராணி - முனீஸ்வரன்**
**வலயக்கல்விப்பணிப்பாளர்,**
**முல்லைத்தீவு.**

### நவீன வள்ளல்



வாழ்வின் வசந்தங்களை அனுபவித்து இளைப்பாறுதல் அரச ஊழியர்களுக்கு கிடைக்கும் ஒரு வரப்பிரசாதம் என எண்ணுகிறேன். நானும் என்னோடு சேர்ந்த நண்பர்களும் இவ்வாறு அரச சேவையில் இணைந்து இளைப்பாற்றுக் காலத்தின் போது திருப்தியுற்றவர்களாக அதன் வாழ்வுக்குள் நுழைந்தோம். 1977 ஆண்டு காலப்பகுதியில் எனது ஆசிரிய சேவை ஒருவருடம்கூட நிறைவு பெறாத வேளை சபாபதி பரமேஸ்வரன் எனக்கூறி அறிமுகமாகியவர்தான் இவர்.

**தர்மபுரம் இல2 அ.த.க.பாடசாலையில்**
சமூகக்கல்வி பாட ஓர் உதவி ஆசிரியராக, துடிப்புள்ள இருபது வயது இளைஞனாக வந்து சேர்ந்தார். இளைஞனுக்கேற்ற பாணியில் தனது மூத்த சகோதரியின் வீட்டில் இருந்து தனது மைத்துனருக்கு ஒரு பெரும் விவசாய கரமாக. ஆசிரியப் பணி இல்லாத வேளை தன்னை அர்ப்பணித்தார். காலையில் பள்ளிக்கூடம் மாலையில் வெங்காயக்கூடம் என்றவாறு அதனோடு வாழைத்தோட்ட செய்கையுமாக அவரது இளமை வாழ்வு கடின உழைப்பாளியாக பிரயாசைமிக்க ஒருவராக திகழவைத்தது. தனது ஊர்ப்பள்ளியான புகழ்பெற்ற அத்தியார்இந்துக் கல்லூரியில் தான்பெற்ற இன்பத்தை தனது ஆசிரியப்பணி மூலம் சக மாணவர்களுக்கு வழங்கி துணிச்சலான கருமங்களை ஆற்றினார்.

தனது சொற்ப கால சேவையில் பாடசாலையில் விளையாட்டு நிகழ்வுகள் பள்ளியின் கணக்கேடுகளை பதிவுசெய்தல். சமயக்கழகப் பொறுப்புக்கள் ஆகியவற்றை உற்சாகத்துடன் செய்து முடித்தவர். தற்போது தருமபுரம் மத்திய கல்லூரியென நாமம் சூட்டப்பட்ட கல்லூரியின் சிற்றாலயம் இவரது முயற்சியினால் கட்டப்பட்டது. அவரது சொந்த உழைப்பின் பரிசாக அது அமைந்துள்ளது.

ஆசிரியர் பயிற்சிக்கென கலாசாலை சென்றதன் பின்னர்சொற்ப காலம் மட்டக் களப்பில் சேவையாற்றினார். அதன்பின் தான் தனது முத்திரையை விசுவமடுவில் பதித்தார். வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயத்தின் அதிபராக இவர் சேவையாற்றிய காலம் அப்பள்ளி புதுப்பொலிவுடன் உயரப்பறந்தது. அதனைத் தொடர்ந்து விசுவமடு பாடசாலையை ஊரார் உற்றார் உறவினர்கள் ஆகியோருடன் ஆயிரக்கணக்கான பிள்ளைகளை சரியான பாதையில் வழிநடத்தினார். பின்னர் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் அதிபர் பதவியை ஏற்று அப்பாடசாலையைச் சிறக்க வைத்தார். இம்மூன்று பாடசாலைகளும் முல்லைத்தீவின் வடபகுதியை அலங்கரிக்கும் பள்ளிகளாகும்.

போரினால் ஆவணங்கள். ஏடுகள் அழிந்த நிலையில் இப்போ இங்கே நான் செய்யும் பதிவே இவருடைய வரலாற்றை நிலைக்க வைக்கும் என்று எண்ணுகிறேன். மூன்று கல்லூரிகளிலும் இவர் செய்த பணிகளுக்கு இவரது மாணாக்கரே சாட்சியமாகும்.

இரண்டாயிரமாம் ஆண்டு முற்பகுதியில் முல்லைத்தீவிலே ஒரு மூத்த அதிபராக பதவிவகித்த போது. இவருக்கு கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரியாக நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பணிசெய்ய வாய்ப்பு கிடைத்தது. அவர் அனுபவம்மிக்க அதிபராக இருந்ததினால் கேட்ட தரவுகளை உடனடியாக வழங்கும் ஒரு கல்வி அதிகாரியாகத் திகழ்ந்தவர்.

இதைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரியாகப் பத்து ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றி இறுதி யுத்த காலத்தில் காயமுற்று உடல்நிலைப் பாதிப்படைந்திருந்தார்.

கல்வி உலகில் தனது உடல். பொருள்ஆகியவற்றைத் தாராளமாக அள்ளிக்கொடுத்தார். ஒரு கை செய்வதை மறு கை அறியாதவாறு ஒரு நவீன வள்ளலாகக் காணப்பட்டார். ஒரு அதிகாரிக்கான மிடுக்கான தோற்றத்துடன் எப்போதும் காணப்பட்டார். தனது உடைகளில் மிகுந்த அக்கறை கொண்டு நேர்த்தியான உடை அலங்காரம் செய்வார். பரமேசின் சேவை பரம திருப்தியை அளித்தது. இவரது வாழ்வும். இளைப்பாற்றுக் காலமும் தனது குடும்பத்தாருடன் மகிழ்வாக இருக்க வாழ்த்துகிறேன்.

**த.குருகுலராசா**
**மாகாண கல்வி, விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாணம்.**

### நிறை மனிதர்

மணிவிழா காணும் G.S பரமேஸ்வரன் (கரைதுறைப்பற்று கோட்டக்கல்விப் பணிப்பாளர்) ஒரு நிறை மனிதராவார். உடற் பலத்தை விட உளப் பலம் நூறு வீதம் உடைய கல்விமானாவர். நோயுற்ற வேளையிலும் அதை மதியாது கோட்டம், மாணவர்கள். பெறுபேறு என்றும் அனுதினமும் உழைத்த அம்மனிதனின் இறந்த காலம் மீட்கப்பட வேண்டிய காலமாகும். நிகழ்கால எதிர்கால சவால்களை உடைத்து நிர்வாகம் செய்யும் நிர்வாகிகள் அவரது நல்ல நிர்வாகப் பண்புகளைப் பின்பற்ற வேண்டும். யாவரும் வெற்றியில் நின்று தான் சாதனை செய்ய துடிப்பார்கள். ஆனால் G.S பரமேஸ்வரன் தோல்வியில் நின்று தான் சாதனை பதித்தமை வரலாற்றுத் தடங்களாகும். நான் படித்த கோட்டம், நான் படித்த பாடசாலைகளில் அதிபராக ஆசிரியராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக சேவை செய்த G.S பரமேஸ்வரன் எனது தந்தையும் அதிபருமான மு. சிவப்பிரகாசம் அவர்களுடன் இணைந்து நிறை சேவை வழங்கியமையையும் அறிவேன். அவ்வாறான சேவை நலன் கொண்ட G.S பரமேஸ்வரனின் சேவை மணிவிழாவுடன் ஓய்ந்தாலும் அவரது கற்பித்தல் நிர்வாக எச்சங்கள் எம் சமூகத்துடன் வாழும் என்று வாழ்த்துகின்றேன்.

**கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்**
**Dr. சி.சிவமோகன்**

### தடைகளும் , தடங்கல்களும் கடந்து பணியாற்றிய பண்பாளன்.

திரு.G.S பரமேஸ்வரன் அவர்கள் மட்டக்களப்பு கோட்டப் பாடசாலைகளில் ஒன்றான மட்/ பெரியபுல்லுமலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் 01.01.1985 தொடக்கம் 30.08.1985 வரை சேவை செய்த காலப்பகுதியிலிருந்து நன்கு எனக்கு தெரியும். இக்காலப்பகுதியில் நான் மட்டக்களப்பு கோட்டக் கல்வி அதிகாரியாக கடமையாற்றி பின் 1989 1990 ஆண்டு காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியபோது இவர் இம்மாவட்டத்தில் கடமையாற்றினார். இவரின் கல்விச்சேவையை தொடர் மதிப்பீடு செய்யக்கூடிய பல சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன.

இவரின் கற்பித்தல் திறமை. பாடசாலை முகாமைத்துவம் மாணவர்களின் நலனில் கூடிய கரிசனை. மிகக் கஷ்டமான காலங்களில் பாடசாலை அபிவிருத்தியில் காட்டிய அர்ப்பணிப்பு போன்றவை இவரில் என்னால் அவதானித்த பண்புகளாகும். இப்பண்புகளை கொண்ட G.S பரமேஸ்வரன் அவர்களுக்கு மணிவிழா எடுக்கப் படுவதை எண்ணி மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

முல்லை மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பல தடைகளும், தடங்கல்களும் ஏற்பட்ட காலகட்டத்தில் , இவரினால் தொடரப்பட்ட பணி பாராட்டப்படுவதுடன் அவரின் சேவை என்றும் விளைவு தரும் என்ற நம்பிகை எனக்குண்டு.

**S.S மனோகரன்**
**ஓய்வு பெற்ற மேலதிக**
**மாகாண கல்விப்பணிப்பாளர் மட்டக்களப்பு**

### நல்லதோர் கல்வியியலாளர்



கற்றதை. அனுபவத்தை கற்றல் புலத்துக்கு கற்பித்தல் ஊடாகவும் நிர்வாக உத்திகள் ஊடாகவும் இறுதி வரை கொண்டு சென்று சமூக நல்விழுமிய உயர்வுக்கு உழைப் பவர் தான் கல்வியியலாளர். அந்த இயல்பை உத்தியோக காலம்பூராக மாணவர்களுக்கும், பாடசாலைக்கும், கோட்டத் துக்கும் வழங்கி நிமிர்ந்து நிற்கின்ற G.S பரமேஸ்வரன் ஐயா அவர்களை வைரவிழா தொட்டு நிற்கும் இவ்வேளையில் நானும் தொடுகிறேன். இலங்கை தமிழ் ஆசிரியர்கள் சங்க வரலாற்றில் திரு பரமேஸ்வரன் ஆரம்ப கால உறுப்பினர் மட்டுமல்ல சங்கம் இடர்பட்ட வேளை களில் நல்லகருத்தும் வழிகாட்டலும் வழங்கிய கல்விமான். தன்நலம் நோக்காது பிறர்நலம் நோக்குபவர். ஆசிரியர்கள் உரிமைக்காக குரல் கொடுப்பவர். ஆசிரியர், அதிபர் உயர்வுக்காய் குரல் கொடுப்பவர். அவ்வாறான பெருந்தகையின் நிறை சேவைக்கு எமது சங்கமும் தலை வணங்கி பாராட்டுகிறது. அவர் உடல், உள ஆரோக்கியத்துடன் மேலும் ஐம்பதாண்டுகள் வாழவும் பிள்ளைகள் பட்டம் உயர்பதவி பெற்று நாட்டுக்கும் உலகுக்கும் பயன்தர வேண்டும்மென்றும் வேண்டுகிறேன்.

**இ.செல்வநாயகம்(அதிபர்)**
**இலங்கை ஆசிரியர் சங்கம்**
**மு/புதுக்குடியிருப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்



## மிதுனம்

*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் குறித்து (08.01.2016-25.07.2017) மிதுன ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி கீழே விவரிக்கப்படுகிறது)*

நீங்கள் எந்த விடயத்திலும் தீவிர யோசனைக்குப் பின் முடிவெடுப்பவர்களே! அப்படிப்பட்ட உங்களுக்கு 08.01.2016 முதல் 25.07.2017 வரை உள்ள காலகட்டத்தில் இந்த ராகுவும், கேதுவும் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

**ராகுவின் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்கு நான்காம் வீட்டில் அமர்ந்துக் கொண்டு நாலாவிதத்திலும் உங்களைச் சின்னாபின்னமாக்கிய ராகுபகவான், இப்போது ராசிக்கு தைரிய ஸ்தானமான 3 இல் வந்தமாவதால் இனிக் கம்பீரமாகப் பேசி தடைப்பட்ட காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். மனோபலம் கூடும். தன்னிச்சையாகச் செயற்படத் தொடங்குவீர்கள். வெற்றி பெற்ற மனிதர்களின் நட்பு கிடைக்கும். நிரந்தர வருமானத்துக்கான வழி வகை கிடைக்கும். முன் இறுக்கங்கள் நீங்கும். தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். சின்னச் சின்ன விவாதங்கள், வீண் சண்டைகள் எல்லா வற்றையும் ஒதுக்குவீர்கள். தாயாரின் நோய் குணமாகும். அவருடனான மோதல்கள் விலகும். தைரியமாக சில முடிவுகளெல்லாம் எடுப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வேற்று மதத்தவர்கள், வெளி நாட்டிலிருப்பவர்களால் திடீர் திருப்பம் உண்டாகும். பாதிப்பணம் கொடுத்து முடிக்கப்படாமல் இருந்த சொத்தை மீதி தொகை தந்து பத்திரப் பதிவு செய்வீர்கள். புதிதாக தொழில் தொடங்க வங்கிக் கடன் உதவியும் கிடைக்கும்.

**இராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:-**

உங்களின் சேவகாதிபதியான சூரியனின் உத்திரம் நட்சத்திரம் முதல் பாதத்தில் 08.01.2016 முதல் 10.03.2016 வரை ராகுபகவான் செல்வதால், இந்தக் கால கட்டத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சொத்துப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு கிடைக்கும். இளைய சகோதரங்களால் பயனடைவீர்கள். அரச காரியங்கள் சாதகமாக முடியும். ராகுபகவான் உங்கள் பூர்வ புண்யாதிபதியும்-விரையாதிபதியுமான சுக்ரனின் பூர நட்சத்திரத்தில் 11.03.2016 முதல் 15.11.2016 வரை செல்வதால் பணவரவு உண்டு. குழந்தைப் பாக்கியம் உண்டாகும். மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். மகளுக்குத் திருமணம் நிச்சயமாகும். பூர்வீக சொத்து கைக்குவரும். குடும்பத்தினருடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். ஏன்றாலும் சுபச் செலவுகள் அதிகமாகும். கேதுவின் மக நட்சத்திரத்தில் 16.11.2016 முதல் 25.7.2017 வரை ராகுபகவான் செல்வதால் இந்தக் காலகட்டத்தில் குடும்பத்தில் கூச்சல், குழப்பங்களை ஏற்படுத்தச் சிலர் முயற்சி செய்வார்கள். சிலரின் துரோகங்களை நினைத்து வருந்துவீர்கள். பழைய கசப்பான சம்பவங்களை அசைபோட்டுக் கொண்டிருக்காதீர்கள். நெஞ்சு எரிச்சல், கால் வீக்கம் வந்துசெல்லும்.

**கன்னிப் பெண்களே!**

உற்சாகமடைவீர்கள். நீங்கள் எதிர்பார்த்தபடி நல்ல வாழ்க்கைத்துணை அமையும். காதல் விவகாரத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி திருமணம் முடியும். பெற்றோர்கள் உங்களுடைய உணர்வுகளைப் புரிந்துக் கொள்வார்கள். வேலை கிடைக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பும் வரும்.

**மாணவ-மாணவிகளே!**

கடினமான பாடங்களில்கூட அதிக மதிப்பெண் பெறுவீர்கள். நல்ல மாணவர்களின் நட்புக் கிடைக்கும். அன்னிய மொழியும் கற்றுக் கொள்வீர்கள். வேற்றுமாநிலம் அல்லது வெளிநாட்டில் உயர்கல்வி பெறவும் நல்ல வாய்ப்பு வரும். சிலர் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்று பரிசு, பாராட்டுக்கள் பெறும் வாய்ப்புகள் உண்டாகும்.

**அரசியல்வாதிகளே!**

தேர்தலில் வெற்றி உண்டு. எதிர்க்கட்சிக்காரர்களை நகைச்சுவையாகவும், நாசூக்காகவும் தாக்கிப் பேசி பொது மக்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**கலைத்துறையினரே!**

பெரிய வாய்ப்புகள் தேடி வரும். ரசிகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உங்களுக்குப் பட்டி தொட்டியெங்கும் பாராட்டுக் கிடைக்கும். (தொடரும்)

---

ஊரவன்

# பயணம்...

நெடுந்தீவு ஒரு தனித்துவம் மிக்க கிராமம். தீவகம் தான். ஆனால் இதன் பெய ரும் புகழும் வரலாறும் என்றைக்கும் அழியாத வகையில் நீண்டு நிலைத்திருக்கும் வரலாற்றைக்கொண்டது.

இதனது வாழ்க்கை கடல் அன்னையின் மடியிற்றான் தங்கியுள்ளது. தொடர்ந்தும் அதன் அடியில்தான். அந்தக் கடல் தாண்டும்போது எது எம்மைத் தாங்கும் என்பதையும் அனைவரும் அறிவர்.



நெடுந்தீவையும், நெடுந்தீவின் பதிவையும் கொண்ட நான் கடந்த வாரம் எனது தாய்நிலத்துக்குச் சென்றேன். சுகமான பயணம் 'வடதாரகை II கொழும்பு' படகு புறப்பட்டது. குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு 10 நிமிடங்களின் பின்னர்தான் அந்தப் படகில் (கப்பலில்) காற்றோட்டல் வசதி அளிக்கப்பட்டது. சரி பார்ப்போம் என்று நினைத்துக்கொண்டு கிடைத்த செயற்கைக் காற்றை கொஞ்சம் சுவாசித்தோம். ஆனால் அது வும் அனைவரையும் தொட்டுச் செல்லவில்லை என்பது தெரிந்தது. எமது மக்களது வாழ்வு இயற்கையோடு இணைந்தது. அதனை மற்றவர்களுக்குக் காட்ட முடியாது என்பதால் கிடைத்த காற்றை வந்தவர்கள் அனைவருக்கும் கிடைக்க இடம்விட்டு அமர்ந்தோம். ஏனென்றால் எமது தீவுக்கு வருவோரை அன்புடனும், இன்முகத்துடனும் வரவேற்கவேண்டிய பண்பு எம்மவர் அனைவரிடமும் உள்ளதுடன் இந்தப் பண்பு எம்முன் புரையோடிப் போயுமுள்ளது.

கரைதொட 15 நிமிடம் இருக்கும்போதே செயற்கைக் காற்றும் நிறுத்தப்பட்டு விட்டது. இயந்திரக் காற்றாடிகள் நிறுத்தப்பட்ட 2 நிமிடங்களிலேயே நான் கண்ட காட்சி எனது மனதைப் பதைபதைக்க வைத்து விட்டது. படகில் இருந்த எம் ஊரவரைத் தவிர மற்றைய அனைவருமே உடல் வியர்க்க, மனம் தளர வாந்தி எடுக்கத் தொடங்கியிருந்தனர்.

அருகிலிருந்த நண்பர் ஒருவர் கூறினார், 'நெடுந்தீவுக்குச் செல்லும்போது எதனையுமே வெளியிலிருந்து கொண்டு செல்லக்கூடாது. அப்படி எடுத்துச் சென்றால் கரை தொடு முன்பே கடலவள் மடியில் கொட்டி விடவேண்டும்' என்று. எனக்குப் புரிந்தது. இத்தனைக்கும் மேலாக படகுப் பயணமும் இனிமைதருவதாக இல்லை. கைதிகள் போலத்தான் அடங்கியொடுங்கி இருக்க வேண்டியிருந்தது. படகுச் சேவைப் பணியாளர்கள் படையினர்தான். அவர்களை மீறி நாம் எதுவும் செய்ய முடியாது. அத்தோடு படகில் பலரகப்பட்ட பொருள்கள். நெடுந்தீவில் கடற்படை நடத்தும் ஆடை உற்பத்தி நிலையத்திற்கான மூலப் பொருள்கள்கூட அதில் அடக்கம். அத்தனை நிறையையும் இறக்கி வைத்தால் படகில் மேலும் சில பயணிகளையும் ஏற்றிக்கொள்ள முடியும். குறிகாட்டுவானில் இருந்து புறப்பட்டபோது சிலரைக் கரையிலேயே இடமின்றி விட்டுவிட்டு வந்தது அந்தப் பொருள்களைப் பார்க்கையில் மனதை உறுத்தியது.

படகில் 100 பயணிகள் அமர்ந்து செல்வதற்கு மட்டுமே அனுமதி. ஏற்கனவே அவ்வளவு பயணிகள் ஏற்றப்பட்டிருந்தார்கள். அவர்களுடன் கூடவே இந்தப் பொருள்களையும் படகால் சுமக்க முடியும் என்றால், அவற்றை இறக்கிவிட்டு ஏன் இன்னும் சில பயணிகளை ஏற்ற முடியாது என்பதே என் கேள்வி?

காலை 8 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து வடதாரகை புறப்பட்டது என்றால் நெடுந்தீவிலிருந்து திரும்புவது மாலை 4.30 மணிக்கு. அதனால் சுற்றுலாப் பயணிகள் எல்லோரும் இதனை விரும்புவார்கள். ஆனால் உள்ளூர் மக்களுக்கானதில்லையா இந்தப் படகுச்சேவை என்கிற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அத்துடன் படகு நேரக் கட்டுப்பாடும் இறுக்கமானது. ஏனெனில் படகுச் சேவையை நடத்துவது கடற்படையினர் தான். போக்குவரத்து அதிகார சபையிடம் படகை ஒப்படைப்பதற்கு மறுக்கிறார்கள்.

இவ்வாறுதான் படகு நெடுந்தீவில் இருந்து கடந்த மாத இறுதியிலும் புறப்பட்டது, புறப்பட்டு 10 நிமிடத்தில் ஒரு புலம்பெயர் நபர் 'என்னடா காற்றே இல்லை, வியர்வையில் குளிக்க வேண்டி உள்ளது?' என்றார். இவரைப்போல எத்தனையோ பேர் இந்த அவலத்தை அனுபவித்துவிட்டனர் என்று எண்ணி நான் மனதுக்குள் சிரித்துக்கொண்டேன். எவரிடம் போய்க் குறைபட்டுக்கொள்வது? இருப்பினும் சுற்றுலாப் பயணிகள் சென்று வர வேண்டுமாப் போல்தான் இந்தப் படகின் சேவை நடக்கிறதாம். ஒரு முறை படகில் ஏறினால் மறுமுறை ஏறாத வகை யில் சேவை. இருப்பினும் வரும் சுற்று லாப் பயணிகள் எதுவுமே கதைப்பதில்லை. 'யாம் பெற்ற துன்பம், பெறுக இவ் வையகம்'என்பதற்கு இணங்க.

படகுச் சேவை எப்படி இருப்பினும் எமது தீவுக்கு வருவோரை இன்முகத்துடன் வரவேற்று, உபசரித்து, உண்டி கொடுத்து அனுப்பி வைக்கவேண்டும். அதில் முகம் சுழிக்கக்கூடாது. இத்தனைக்கும் எம்மவர்க்கு படகில் இடம் உண்டா....? பேசக் கூடாது. இருப்பினம் அது எமது தீவு. வந்தாரை வாழவைக்கும் ஊர்.

தற்போது சிவில் நிர்வாகம்...? மக்களது தேவை மக்களாலேயே தீர்க்கப்பட வேண்டும். இருப்பினும் இன்று ஏன் இந்த வடதாரகை படகு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படவில்லை என்பதற்கு நல்லாட்சி அரசு ஏதாவது பதில் தந்தால் நன்றாயிருக்கும்.

கடற்பயணம் என்பது என்றுமே கடுமையானது. அதனை நாளாந்தம் அனுபவித்து அதில் கைதேர்ந்த எம்மவர்களே படகுச் சேவையை மேற்கொள்ள வேண்டும். கடலைப் படித்த எம்மூரவர்களே அதில் சேவை செய்ய வேண்டும். அதற்காக படகு கை யளிக்கப்படவேண்டும்.

ஒருமணிநேரப் படகுப்பயணம் சிலவேளை இரு மணிநேரம்கூட ஆகலாம். கடல் அன்னையின் சீற்றத்தால் அதனை நாம்தான் நன்கறிவோம். அதனால் நாமே எமது பயணத்தை தீர்மானிக்க வேண்டும் - இதற்கான வழி கிடைக்குமா!....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*அரியாலையூர்*
**மிஷாந்தி செல்வராஜா**

# வடக்கில் வீணடிக்கப்படும் மனித வளம்

இன்றைய கால கட்டத்தில் வடக்கில் மனித வளங்கள் வீணடிக்கப் படுகின்றன என்றால் அது பொய்யாகாது. இதனை எத்தனை பேர் ஏற்றுக்கொள்கிறீர்கள்?

இயற்கையாகக் கிடைக்கும் வளங்களை விரயம் செய்வது ஒருபுறம் வீணடிப்பு என்றால், ஒவ்வொரு மனிதர்களும் தத்தம் திறமைகளை வெளிக்கொணர முடியாமலும், வெளிக்காட்டாமலும் சோம்பேறித் தனமாய் காலங்களை வீணடிப்பதும் வள விரயம்தான்.

எமது நாட்டில் பட்டம் பெற்று வெளியேறிய பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட வீதியில் பொழுதைக் கழிக்கும் ஆண், பெண் இளசுகளின் எண்ணிக்கை அதிகம். அற்ப சந்தோசங்களுக்காக எதிர்கால வளத்தை உருவாக்காமல் இப்படி வெட்டியாகப் பொழுதைக் கழிப்பதன் மூலம் இவர்கள் மிகப் பெறுமதியான மனித வளத்தை வீணடிக்கிறார்கள்.

மனித வளம் வீணடிக்கப்படுவதால் நாட்டின் முன்னேற்றம் மந்தமடைகிறது. அந்நிய நாட்டு மோகத்தாலேயே, இங்கிருக்கும் காலத்தில் மனித வளத்தை வீணடிப்பவர்களாகவும் நாம் இருக்கிறோம்.

பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள் அரச வேலைவாய்ப்புக்காக ஏங்கியும் எதிர்பார்த்தும் வீதியில் இறங்கிப் போராட்டங்கள் நடத்தியுமே தமது வளத்தை வீணடிக்கிறார்கள். அரச வேலை கிடைக்கும் வரைக்கும் வேறு வேலை ஒன்றைச் செய்வோம் என்று அவர்கள் நினைப்பதில்லை. அல்லது கிடைக்கும் வேலையைச் செய்தபடியே அரச வேலையைத் தேடுவோம் என்றும் நினைப்பதில்லை. பதிலாக வீதியில் நின்று போராடிப் போராடியே மனித வளத்தை விரயமாக்கு கிறார்கள். அதுபோக, வீதியின் நடுவில் நின்றால் தான் அரச அலுவலகம் செல்லமுடியும் என்ற மனநிலை உருவாகு வதால் தாழ்வு மனப்பான்மை ஏற்படுத்தப்பட்டு தத்தம் ஆற்றலை, பெற்ற கல்வியறிவை வெளிப்படுத்த முடியாமல் வீணடிக்கிறார்கள்.

இல்லங்களில் வாழும் பெண்களில் பலர், திட்டமிட்டு வாழப் பழகிக் கொள்ளாமலும் பொழுதுபோக்குச் சாதனங் களுக்கு அடிமையாகியும் தமது நேரத்தையும் ஆற்றலையும் வீணடிக்கிறார்கள். வீட்டில் சிறு சிறு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டாலேயே இவர்களால் கணிசமான வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும். ஆனால் சும்மா இருந்தேமனித வளத்தை வீணடிப்பதற்கு நாம் பழகிக் கொண்டிருக்கிறோம். எமது உழைப் பாற்றலை, தனித்திறமைகளை முடக்கிக்கொண்டிருக்கிறோம்.

அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தில் இணையம், முகப்புத்தகம், கைத்தொலைபேசிப் பாவனை ஆகியவற்றில் தமது வளத்தை வீணடிக்கிறார்கள். ஒருசில அலுவலர்கள் பதவியேற்று வருடக்கணக்கில் கடமையேதும் இன்றி இருக்கிறார்கள்.

அப்படி வேலையற்று இருப்பதற்குப் பதில் ஏதாவது வேலை செய்யலாம் என்று அவர்களும் நினைப்பதில்லை, அவர்களை வேறு வேலைகளுக்குப் பயன்படுத்தலாமே என அவர்களின் உயர் அதிகாரிகளும் நினைப்பதில்லை.

ஆசிரியத் தொழில் என்பது இறைவனின் மறுஉருவம் என்றால் அது பொய்யாகாது. ஒரு வகுப்பில் 32 மாணவர்கள் ஆசிரியரை நம்பித்தான் கல்வி கற்கிறார்கள். மெல்லக் கற்கும் மாணவனுக்கும் விரைந்து கற்கும் மாணவனுக்கும் அவரவருக்கு ஏற்ப கல்வியைப் புகட்டும் நுட்பம் தெரிந்தவர் ஆசிரியர். மாணவர்களை வைத்தியர்களாக, தொழிலதிபர்களாக, கணக்காளர்களாக வளர்த்து விடுபவர்களும் ஆசிரியர்களே. அத்தகையவர்கள் "அவன் மொக்கு", "அவன் படிக்கமாட்டான்" என நினைத்து அப்படியே கவனிக்காமல், திறமையாகக் கல்வி கற்கும் மாண வர்களுக்குக் கற்பித்துக் கொண்டே போனால் மெல்லக் கற்கும் மாணவர்களது நிலை தான் என்னவாகும்? எண்ணிப் பாருங்கள்.

> நாமே எம்மையுணர்ந்து எமது மனிதவளத்தைப் பயன்பாட்டுக்குள் கொண்டு வந்தாலே போதும், எமது வாழ்க்கையும் நாடும் முன்னேறிவிடும். நாடு எமக்கு என்ன செய்தது எனக் கேள்வி கேட்பதை விட்டு, நாட்டுக்கு நாம் என்ன செய்தோம்? என்ன செய்ய வேண்டும்? எனக் கேட்கத் தொடங்கி விட்டோம் என்றால் வெற்றி நிச்சயம்.

மெல்லக் கற்கும் மாணவனை அப்படியே கவனிக்காமல் விட்டுவிட்டு, மீதிறனான மாணவனை ஊக்கப்படுத்தி அவனது பெறுபேறுகளை மட்டுமே தங்களது வெற்றியாக வும் பாடசாலையின் வெற்றியாகவும் காட்டும் காலம் தானே இப்போது! ஒவ்வொரு பாடசாலையிலும், அதிலும் குறிப்பாக புகழ்பெற்ற பெரிய பாடசாலைகளில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகாத அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைகளில் வெற்றி பெறாத மாண்வர்களின் தோல்விக்காக எந்தவொரு ஆசிரியராவது, பாடசாலையாவது இதுவரை பொறுப்பேற்றிருக்கிறதா? இல்லையே! ஆக, மெல்லக் கற்கும் மாண வர்களை அப்படியே கைகழுவி விடுவதன் மூலம் அவர்கள் இந்தச் சமூகத்திற்கு பயனுள்ள வகையில் ஆற்றக்கூடிய பணியை ஆசிரியர்கள் கண்டடையத் தவறுவதும் மனிதவள வீணடிப்புத்தானே? பாடசாலைக் கல்வியை முடித்ததும் என்ன செய்வது என்று தெரியாது காலத்தைக் கடத்தி வளத்தை வீணடிக்கின்றனர் அந்த மாணவர்கள்.

எனவே சிறுவர்க்ள் முதல் பெரியவர்கள் வரை ஒவ்வொருவரதும் திறமைகளை இனங்கண்டு, அவர்களையும் ஊக்குவித்து, ஒவ்வொரு மனிதர்களினதும் திறமைகளையும் சமூகத்திற்குப் பயனுள்ளதாக்க வேண்டும். மனித வளம் வீணடிக்கப்படாது பயன்படுத்தப்படுமானால் அதைப்போன்ற வளர்ச்சியை நாட்டில் வேறு எதனாலும் ஏற்படுத்த முடியாது. இவற்றை அரசுகள்தான் செய்ய வேண்டும் என்பதில்லை. நாமே எம்மை யுணர்ந்து எமது மனித வளத்தைப் பயன்பாட்டுக்குள் கொண்டு வந்தாலே போதும், எமது வாழ்க்கையும் நாடும் முன்னேறிவிடும். நாடு எமக்கு என்ன செய்தது எனக் கேள்வி கேட்பதை விட்டு, நாட்டுக்கு நாம் என்ன செய்தோம்? என்ன செய்ய வேண்டும்? எனக் கேட்கத் தொடங்கி விட்டோம் என்றால் வெற்றி நிச்சயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1824 - பிரித்தானியா பர்மாமீது உத்தியோகபூர்வமாக போர்ப் பிரகடனம் செய்தது.

1912 - இத்தாலிய துருக்கிய போர்; முதன்முதலாக போரொன்றில் துருக்கிப் படை வரிசையை பின்புறமாக தாக்குவதற்காக எயர் ஷிப்ஸ் இத்தாலிய படைகளால் பயன்படுத்தப்பட்டது.

1931 - பிரிட்டிஷ் வைஸ்ராய் கவர்னர் ஜெனரல் பிரெடரிக் லிண்டலிவூட்மற்றும்மோகனதாஸ்காந்தி (மகாத்மா காந்தி, அரசியற் கைதிகளை விடுவித்தல் மற்றும் வறுமைப்பட்ட மக்கள் இலவசமாக உப்பை பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.

1933 - றிச்ஸ்ரக் தேர்தலில் அடோல்ப் ஹிட்லரின் நாஸிக் கட்சி 43.09 வீத வாக்குகளைப்பெற்றது. இது பின்னர் இயலுமைச் சட்டத்தைகொண்டு வந்து சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுத்தது.

1940 - கரைன் படுகொலை; பொதுச் செயலாளர் யோசப் ஸ்டாலின் உட்பட சோவியத் உயர் அரசியல் பீட உறுப்பினர்கள் ஆறுபேர் சேர்ந்து 25, 700 போலந்து உளவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கும் கட்டளையில் ஒப்பமிட்டனர்.


1974 - சுயஸ் கால்வாய் மேற்குக் கரையிலிருந்து இஸ்ரேலிய படைகள் வாபஸ்.

1995 - கொழும்பில் தமிழருக்கு எதிராக படையினர் மீண்டும் கெடுபிடி.

2002 - கடந்த 11 ஆண்டுகளாக வவுனியாவில் நடைமுறையிலிருந்த "பாஸ்" முறை, முற்றாக நீக்கம் என அறிவிப்பு.

2008 - கிழக்கு தேர்தலை பகிஷ்கரிக்குமாறு தமிழரிடம் கூட்டமைப்பு கோரிக்கை.

## வர்ணம் தீட்டுவோம்... வாங்க...



## விடுகதைகளும் விடைகளும்



1) உச்சியிலே கிரீடம், உடம்பெல்லாம் கண் அது என்ன?
2) எப்போதும் கிடைக்காத மதி, எல்லோரும் விரும்பும் மதி அது என்ன?
3) இரவெல்லாம் பூக்காடு, பகலெல்லாம் வெறுங்காடு - அது என்ன?
4) உச்சிக் குடுமிக்காரன், கொள்ளிவச்சா வெடிப்பான் -அது என்ன?
5) பெட்டியைத் திறந்தால் கிருஷ்ணன் பிறப்பான் -அது என்ன?

**விடைகள்:**
1) அன்னாசிப்பழம்
2) நிம்மதி
3) வானம்
4) பட்டாசு
5) வேர்க்கடலை

# எறும்புகளே முன்னோடிகள்!

முகிற்கூட்டம் வானில் கருமையாய் திரண்டது. ஈரக்காற்றின் தாலாட்டில் குழந்தைகள் பாடிக் கொண்டிருந்தார்கள். எமது பசுமைப் பாட சாலையின் குழந்தைகள்தான் பாடுகிறார்கள்.

முட்டை கொண்டு மேலே
திட்டை ஏறினாலே
மட்டிலாத மழையும்
திட்டமாகப் பொழியும்

எதற்காக அவர்கள் இந்தப் பாட்டை பாடு கிறார்கள்? ஓ - எறும்புகள் வரிசையாகத் தங்கள் முட்டைகளைச் சுமந்துகொண்டு போகின்றன. அதைப் பார்த்துத்தானா இந்தப் பாடல்? மழை வரப்போவதை எமக்கு முதலில் அறிவிப்பது இந்த எறும்புகள்தான்.

வரிசையாகச் செல்லும் எறும்புகளிடம், நிலவன் என்கிற சிறுவன் கேட்கிறான்.

"வணக்கம் எறும்புகளே! இப்படி முட்டை களைத் தூக்கிச் செல்வது உங்களுக்குச் சிரமமாக இல்லையா?"வரிசையில் நகர்ந்து கொண்டிருந்த ஓர் எறும்பு பதில் சொன்னது."எங்களுக்கு எந்தச் சிரமமும் இல்லை. மனிதர்களால் தங்கள் நிறை யைவிட இரு மடங்கு நிறையைத்தான் சுமக்க முடியும். ஆனால், நாங்கள் எங் கள் எடையைவிட 50 மடங்கு நிறைவரை சுமப்போம்."

எறும்பின் பதிலைக் கேட்ட குழந்தைகள் ஆர்வத்தோடு ஒன்று கூடினர். எறும்பு தொடர்ந்து சொன்னது.

"அது மட்டுமல்ல. உங்கள் உயரத்தோடு எங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், நாங்கள் கட்டும் புற்று உங்கள் கட்டடங்களைவிட உயரமானவை."

"நம்பவே முடியவில்லை", வியந்தான் நிலவன்.

"இதையே நம்ப முடியவில்லை என்றால் இன்னொன்றும் சொல்கிறேன். உங்களைவிட நாங்கள்தான் விவசாயத்தில் முன்னோடிகள் என்பது தெரியுமா?"

"அப்படியா?" குழந்தைகள் திகைத்தனர்.

"இலைவெட்டி எறும்புகள் எனும் ஓர் எறும்பு வகைதான், முதல் உழவர்கள். அந்த எறும்புகள் தாம் கடித்து எடுத்துச் செல்லும் இலைகளை மக்கச்செய்து, அதில் காளான்களை முளைக்க வைக்கின்றன. பின்னர், அந்தக் காளான்களை உணவாக்கிக் கொள்கின்றன. அதைப் பார்த்தே நீங்கள் காளான் வளர்க்கக் கற்று கொண்டீர்கள். இதைப்போலவே தையல் தொழிலிலும் நாங்கள்தான் உங்களுக்கு முன்னோடிகள். "குழந் தைகளுக்குத் திகைப்புக் கூடிக்கொண்டே போனது.

"முசுறு என்கிற ஒரு வகை எறும்பு உள்ளது. அது மரங்களிலுள்ள இலைகளைத் தைத்துத்தான் தனது கூடுகளைக் கட்டும். அத னால்தான் சொல்கிறேன்."



"இன்னும் என்னென்ன வகையில் நீங்கள் எமக்கு முன்னோடிகள்அவற்றையும் சொல்லிவிடு எறும்பே" என் றான் நிலவன்.

சிரித்துக்கொண்ட எறும்பு சொன்னது, "தூய்மையிலும் நாங்களேமுன்னோடிகள்.உங் கள் வீடுகளைப் போலவே, எங்கள் புற்றில் கழிப்பிடத் துக்கென்று தனியே ஓரிடம் இருக்கும்."

"நீங்களும் எங்களைப் போலவே தூய்மையாக வாழ் கிறீர்கள்!" என்றனர் குழந் தைகள்.

"நீங்கள் எங்கே தூய்மை யாக வாழ்கிறீர்கள்? உங்கள் இடத்தைத் தூய்மையாக வைத்திருந்தால், நாங்கள் ஏன் சிந்திக் கிடக்கும் உண வுத்துணுக்குகளைப்பொறுக்க வருகிறோம்? ஆனால், உங் கள் வீட்டைத் துப்புரவாக்க வரும் எங்களை எறும்புக் கொல்லி மருந்து வைத்து நீங்கள் கொல்கிறீர்கள். இது என்ன நியாயம்?"என்று கோபப்பட்டது எறும்பு.

பதில் சொல்லத் தெரியாமல் குழந்தைகள் விழிக்க, எறும்பு புறப்பட்டுச் சென்றது.

நிலவனும் குழந்தைகளும் யோசித்தனர். மனித இனத்துக்கு என்னென்னவெல்லாம் கற்றுத் தந்தி ருக்கின்றன இந்த எறும்புகள். இந்த எறும்புகளையா நாம் மூன்றறிவு இனம் என்கிறோம்?

மூன்றறிவு மனிதருக்கா? இல்லை, முன்னோடி எறும்புகளுக்கா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை வைத்தீஸ்வரன் பெருந்திருவிழா இன்று ஆரம்பம்



■ இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான சிவ பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் குறை போக்கி நிறை வாழ்வு அருளும்நோக்கில் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரனாக எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்தலம் தான் யாழ்ப்பாணம் பெரிய சிவன் கோயில்.

இந்தச் சிவன் கோயிலின் வருடாந்த மஹோ ற்சவம் இன்று மு.ப 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இந்தக் கோயில், யாழ்ப்பாணத்தின் மத்தியிலே பெரியகடை, காங்கேசன்துறை வீதியிலே வானளாவ உயர்ந்த இராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களெனப் போற்றி வளர்த்தவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிரசங்கம் செய்த இந்தக் கோயில் சைவமக்களின் வழிபாட்டுக்குரிய சிறந்த திருத்தலமாகும். பங்குனி உத்தரத்தைத் தீர்த்த நாளாகக் கொண்டு நிகழ்கின்ற வருடாந்த மஹோற்சவமானது, இன்று முதல் 19 நாள்களுக்கு மிகக் கோலாகலமாக, அடியார்களுக்கு அருட்பெரு விழாக்களாக இடம்பெறவுள்ளன.

இது எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த வருடாந்த மஹோற்சவத் தேர்த் திருவிழாவின் சிறப்பைக் குறிப்பிடலாம். ஐந்து தேர்கள் அடியார்கள் புடைசூழ ஆலயத்தை வலம்வரும் காட்சி, அருமையானதும், அற்புத மானதுமாகும். முதலாவது தேரிலே மூத்த மக னார் ஸ்ரீவிநாயகப் பெருமான் அழகான அருட் பொலிவுடன் அற்புதக் காட்சி தருவார். அதற்கு அடுத்தாற்போல ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேதராக சுப்பிரமணியர் தேரிலே எழுந்தருளுவார். நடுவிலே நடு நாயகமாக எம்பெருமான் ஸ்ரீ வைத்தீஸ்வரர், சோமாஸ்கந்த மூர்த்தமாக எழுந்தருளி ஆனந்த கோலாகல அற்புதக் காட்சி அளிப்பார். நாலாவதாக அம்பிகை தையல் நாயகியின் தேர் வரும். ஐந்தாவது தேரிலே சண்டேஸ்வரர் எழுந் தருளுவார். இந்தத் தேர்த்திருவிழாவில் பஞ்ச மூர்த்திகள் பவனிவருகின்ற அதியற்புதக் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

இந்த மஹோற்சவ நிகழ்வுகளைக் காண்பதற்கு யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் இங்கு கூடுவர். எம்பெருமானின் அலங்காரம் காண்பதற்கென்றே தினமும் பக்தர்கள் கூடிவருவது பக்திபூர்வமான நிகழ்வாகும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்திலே விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் உலாவந்து அடியார்களுக்குக் காட்சி கொடுக்கும் அழகே தனி. இந்தக் கோயிலின் மகிமையும் மகத்துவமும் சொல்லில் அடங்காதவை.

இந்த வைத்தீஸ்வரன் கோயிலில் வருடாந்த மஹோற்சவத்தின் பத்தாம் நாள் மாலைத் திருவிழாவில் சிவபெருமானுக்குச் சந்திரசேகரப்பட்டம் சூட்டும் நிகழ்வும் சிறப்புற இடம்பெறுகிறது. அத்துடன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதவிதமான அழகிய அலங்காரத்தோடு பெருமான் வீதிவலம் வருங்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்த ஆலயத்துக்கு மூன்று திருவீதிகள் இருக்கின்றன. முதலாவது உள்வீதியிலே விநாயகர், சுப்பிரமணியர் மற்றும் ஐந்து சிவலிங்கங்களும் மகாலட்சுமி, சரஸ்வதி, நடராஜப்பெருமான், வைரவர், சூரிய சந்திரன், நவக்கிரகம் என்பவையும் இரண்டாவது வீதியிலே சித்தாமிர்த புஷ்பகரணி எனும் தீர்த்தக் கேணியும் உண்டு.

இன்று முதல் ஆரம்பமாகிக் கோலாகலமாக நடைபெறவுள்ள திருவிழாக்களில் அடியவர்கள் வந்து கலந்துகொண்டு வைத்தீஸ்வரப் பெருமானுடைய திவ்ய திருவருட் கடாட்சத்தைப் பெற்று வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களுடனும் வாழவேண்டுமென்று அன்போடு அழைக்கப்படுகின்றனர். எல்லாம்வல்ல ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரனின் திருவருள் எங்கும் பெருகட்டும், எம் பெருமான் ஸ்ரீ வைத்தீஸ்வரன் திருவடிபணிந்து இன்புறுவோம்!.

# ஒளியாக வாழ்வோம்

"உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள். இதனால் அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைந்தே செய்கிறார்கள் என்பது வெளியாகும்."(யோவா3:21)

நாம் ஒளியின் மக்கள். ஆயினும் எவ்வாறு ஒளியின் மக்களாக வாழ்ந்து காட்டுவது என்பது பலருக்குக் குழப்பமாக இருக்கும். உலகமயமாக்கல், பொருள்மயமாக்கல் என்று உலகம் போகும் போக்கு இருளை நோக்கிய பயணமாகவோ, இருளில் நிகழும் பயணமாகவோ அமையலாம். இந்த நிலையில் கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறு ஒளியில் வாழ்ந்து ஒளியின் மக்களாக சான்று பகர முடியும்?

இறைவனின் செயல்களை அறிந்தும் அவரில் நம்பிக்கை வைக்காதோர் இருளில் வாழ்கின்றனர். இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். அவரை அறிந்து நம்பிக்கை கொண்டு எமது வாழ்வை வளமாக்கும்போது நாம் ஒளியில் வாழ்வோம். மாறாக உலகத்தோடு நாம் வாழ்ந்தால் இருளின் மக்களாகவே இருந்து விடுவோம். எமது நெறிகேடான வாழ்வு உலகுக்குத் தெரிந்துவிடும் எனப் பயந்து நாம் ஒளிக்கு வருவதில்லை. தெய்வபயம் என்பது கடவுள் தண்டிப்பார் என்று பயம் கொள்வதல்ல. மாறாக, அவரில் அன்பு வைத்து, என்னை அன்பு செய்யும் ஆண்டவருக்கு எதிராக நான் எவ்வாறு பாவம் செய்ய முடியும் என்று பாவம் தவிர்த்து நல்லது செய்வதாகும்.




ஒளியைக்கண்டதும் பயப்படும் மனிதர்கள் பலர் உள்ளனர். இவர்கள் ஒளியை ஏற்று தம் வாழ்வைச் சீர்செய்யமாட்டார்கள். ஆண்டவரில் நாம் கொள்ளும் உண்மையான நம்பிக்கை எமக்கு வாழ்வு தருகின்றது. எவ்வாறு?

இயேசு உலகுக்குத் தந்தது நல்வாழ்வு. அதுவே அவர் தரும் ஒளி. இருள் நிறைந்த வாழ்விலிருந்து அவரில் நம்பிக்கை வைத்து அவரிடம் வருபவருக்கு வாழ்வு நிச்சயம். நற்செய்திகள் முழுவதிலும் இந்த உண்மையைக் காணலாம். அவரில் வாழ்வு பெற்றவர்கள் பலர். ஆனால் தமது சமயம், சட்டம், சம்பிரதாயம்,கலாசாரம் என்று குறுகிய வட்டாரத்தினுள் வாழ்ந்தவர்கள் செய்த தவறு இயேசுவை நம்பாதமை தான். அவருக்கு எதிராகவும் செயற்பட்டனர். இவர்கள் இருளின் ஆட்சிக்குள் தொடர்ந்து வாழ்ந்தனர். ஆகவே அவ்வாறான தொரு செயற்பாட்டுக்கு எதிராக எமது நல்ல ஆழம் மிக்க கருத்துக்களை முன்வைத்து அவர்களை இயேசுவின் ஒளியின் பாதையில் இட்டுச்செல்ல நாம் ஒளியாக வாழ்ந்து காட்டுவோம்.

அ.டினேஸ்

# மனிதாபிமானமற்ற செயல்

ஆறு வயதுச் சிறுவன் ஒருவனுக்கு எயிட்ஸ் நோய்த் தொற்று உள்ளது என்று பரவிய வதந்தியால் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு அவனை சேர்த்துக் கொள்வதற்குப் பாடசாலைகளின் நிர்வாகங்கள் மறுத்த -அதிர்ச்சி ஏற்படுத்தும் சம்பவம் குறித்த தகவல்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

ஐந்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், மாகாண முதலமைச்சரின் உத்தரவையடுத்து அந்தச் சிறுவன் இறுதியாக ஒரு பாடசாலையில் சேர்க்கப்பட்டான். அதனால் இப் பாடசாலையின் முன்னால் பாடசாலை மாணவர்களின் பெற்றோரால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதுடன், பெற்றோர் தமது பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு சென்றும் விட்டதால் அப்பாடசாலையின் வகுப்பறைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து அந்தப் பாடசாலையும் குறித்த சிறுவனுக்கு அனுமதி மறுத்துள்ளமை அனைவரையும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியிருக்கிறது.

இத்தனைக்கும் காரணம் இந்தச் சிறுவனின் தந்தையார் எயிட்ஸ் நோயால் இறந்துவிட்டார் என்பதும், சிறுவனுக்கும் எயிட்ஸ் நோய்க்கான எச்.ஐ.வி தொற்று இருப்பதாகவும் பரவிய வதந்திதான். இந்தச் சிறுவனுக்கு எச்.ஐ.வி தொற்று இல்லை என்று மருத்துவ சான்றிதழ் காண்பிக்கப்பட்டும் பாடசாலை அதிபர்கள் சிறுவனைத் தமது பாடசாலையில் அனுமதிக்க மறுத்தமை குறித்து கல்வி அமைச்சு விசாரணை நடத்துவது அவசியமாகும். இந்தச் சிறுவனை பாலர் முன்பள்ளியில் சேர்க்கும்போதே இந்தப் பிரச்சினை இருந்ததாகவும் எனினும் தரம் ஒன்றில் அனுமதி பெற முயன்றபோது தமது கிராமத்து சுற்றாடலில் உள்ள ஐந்து பாடசாலைகள் தமது மகனை அனுமதிக்க மறுத்துவிட்டன என்றும் சிறுவனின் தாயார் கூறுகிறார். இச்சிறுவனுக்கு அனுமதி வழங்க மறுத்த பாடசாலைகள் சில சிறுவனைத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் அல்லது சிறுவர் நன்நடத்தை அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி சிறுவனின் தாயாருக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றன. மிகவும் மனிதாபிமானமற்ற செயல் இது. தந்தைக்கு எச்.ஐ.வி தொற்று இருந்தமையால் பழி சுமக்கிறான் சிறுவன்.

இந்தச் சிறுவனுக்கு எச்.ஐ.வி தொற்று இல்லை என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அப்படித் தொற்று இருந்தாலும் கூட சிறுவனுக்குக் கல்வியை மறுக்க முடியாது. அவன் கல்வி கற்பதற்கான மாற்று ஏற்பாட்டைக் கல்வி அமைச்சு செய்து கொடுத்திருக்கவேண்டும். இந்தச்சம்பவம் தப்பபிப்பிராயத்தால் ஏற்பட்டது என்று கல்வி அதிகாரிகள் தற்பொழுது சாட்டுக் கூறலாம். உண் மையில் ஜனாதிபதியோ பிரதமரோ அல்லது கல்வி அமைச்சரோ நேரடியாகத் தலையிட்டிருக்கவேண்டிய விவகாரம் இது. கடைசியில் மாகாண முதலமைச்சரே தலையிட்டிருக்கிறார்.




மாணவர் அனுமதியில் பாடசாலை அதிபர்கள், தான் தோன்றித்தனமாக நடப்பது இது முதற் சம்பவம் அல்ல. விசேட தேவை உள்ள சிறுவர்கள் சில சந்தர்ப்பங்களில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளனர். பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானோருக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் கல்வி கற்கும் உரிமை உள்ளது. இதனைத் தடுக்கமுடியாது.

ஆறுவயதுச் சிறுவன் சந்தித்த கொடுமைக்கு பிரதான காரணம் சமூகத்தில் எயிட்ஸ் குறித்த விழிப்புணர்வு இல்லாமையேயாகும். இலங்கையில் முதலாவது எயிட்ஸ் நோயாளி கண்டுபிடிக்கப்பட்டு சில தசாப்தங்கள் கடந்துவிட்டன. எனினும் எயிட்ஸ் ஏன் ஏற்படுகிறது, எப்படிப் பரவுகிறது என்ற விழிப்புணர்வு பாடசாலை அதிபர்களுக்குக்கூட இல்லாதமை வேதனைதரும் விடயமாகும்.

இந்தியாவுடனும் மற்றைய நாடுகளுடனும் ஒப்பிடும்போது எச்.ஐ.வி தொற்று இங்கு குறைந்த அளவிலேயே உள்ளது. 2014ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம், வளர்ந்தோரில் 3,200 பேரும் சிறுவர்களில் நூறு பேரும் எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். இது இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 0.1 சதவீதம் ஆகும். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினால் மேலும் இதன் தொற்று விகிதத்தைக் குறைக்கமுடியும். இந்த ஆறு வயதுச் சிறுவனுக்கு நேர்ந்த சம்பவம் அனைவரையும் வெட்கித் தலைகுனிய வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஹ்மான் அதிரடி



விக்ரம் குமார் இயக்கத்தில் சூர்யா, சமந்தா உள்ளிட்ட பலர் நடித்து வரும் படம் "24". ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்து வரும் இந்தப் படத்தை, சூர்யா தனது 2டி நிறுவனம் மூலமாகத் தயாரித்து வருகிறார். ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் இந்தப் படத்தை வெளியிட இருக்கிறது.

படத்துக்காக மும்பை, போலந்து உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கிராபிக்ஸ் பணிகள் உள்ளிட்ட இறுதிக் கட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்றன. ஏப்ரல் மாதம் படத்தை வெளியிட படக்குழு முடிவு செய்திருக்கிறது. சூர்யா 3 வேடங்களில் நடித்திருப்பதால், படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

"ஒரு கருவில் உதித்தோம், ஒரு சில நொடி இடைவெளியில் ஜனித்தோம்" என்று வசனத்துடன் தொடங்குகிறது படத்தின் முன்னோட்டம். ஏ.ஆர்.ரஹ்மானின் அதிரடிப் பின்னணி இசையும், முன்னோட்டத்துக்கு பெரிய பலத்தைச் சேர்த்துள்ளது. ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாத முதல் வாரத்தில் படத்தை வெளியிடப் படக்குழு முடிவு செய்திருக்கிறது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 4 | | | | | |
| 4 | | | | 7 | 9 | 2 | | |
| 7 | 5 | | | 1 | | 4 | | |
| 2 | | 3 | | | | | | |
| | | | 8 | | 5 | | | |
| | | | | | | 7 | | 3 |
| | | 1 | | 4 | | | 8 | 5 |
| | | 5 | 6 | 9 | | | | 7 |
| | | | | | 3 | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 9 | 8 | 4 | 6 | 7 | 2 |
| 8 | 6 | 2 | 5 | 7 | 1 | 4 | 9 | 3 |
| 4 | 9 | 7 | 3 | 6 | 2 | 8 | 1 | 5 |
| 6 | 7 | 1 | 2 | 9 | 3 | 5 | 4 | 8 |
| 5 | 8 | 3 | 1 | 4 | 7 | 2 | 6 | 9 |
| 9 | 2 | 4 | 8 | 5 | 6 | 7 | 3 | 1 |
| 3 | 4 | 8 | 7 | 2 | 9 | 1 | 5 | 6 |
| 2 | 1 | 6 | 4 | 3 | 5 | 9 | 8 | 7 |
| 7 | 5 | 9 | 6 | 1 | 8 | 3 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நீண்ட நாள் மனக்கவலை விரைவில் தீரும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் பன்மடங்கு உயரும். உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**இடபம்:** நிதானமாகச் செயற்பட்டால், பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றவும். இஷ்ட தெய்வ வழிபாடு, மனதுக்கு அமைதி தரும்.

**மிதுனம்:** நற்செயலில் ஈடுபட்டு, பிறரால் பாராட்டப்படுவீர்கள். தொழில், வியாபார செழிப்பால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவார்கள். மாணவர்கள் தேர்வு நோக்கில் படிப்பர்.

**கடகம்:** செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். அரச வகையில் ஆதாயம் கிடைக்க வாய்ப்புண்டு. குடும்பத்துடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிங்கம்:** நிதானத்துடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்களுக்குப் பணத் தேவை அதிகரிக்கும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**கன்னி:** முக்கிய செயலைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். இலாபம் சுமார். பெண்கள், பெற்றோரின் ஆதரவைப் பெறுவர். ஒவ்வாத உணவு உண்பதைத் தவிர்க்கவும்.

**துலாம்:** புதிய முயற்சி முழு அளவில் வெற்றியைத் தரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் குடும்பத் தேவைகளை, தாராள செலவில் நிறைவேற்றுவர்.

**விருச்சிகம்:** எண்ணத்திலும், பேச்சிலும் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலன் குறித்துச் சிந்திப்பர். வாகனப் போக்குவரத்தில் கவனமாக இருக்கவும்.

**தனுசு:** சிறிய பணி கூட, சுமை போலத் தோன்றும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர். பிறருக்காகப் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**மகரம்:** பிறர் உங்களைக் குறை சொல்ல நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள், இரவலாகப் பணம் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் காட்டுவர்.

**கும்பம்:** மனதில் நல்லெண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் மேலதிக வருமானம் கிடைக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மீனம்:** தெய்வ அருளால் நன்மை உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள்.










சுற்றது B.E
சண்டையே அதிகமாகப் போட்ட போதிலும், சகோதரிக்குத் திருமணம் என்றவுடன், மணமகன் பற்றிய பதைபதைப்புடன் சுற்றும் சகோதரன் பாசம் பேரழகு....

Dinakaran @Dinakaran
ஆசையின் வேகத்தை விட, முயற்சியின் வேகம் அதிகமாக இருந்தால் மட்டுமே நீ வெற்றி பெறுவாய்....
ஆசை

தாமிரபரணி
கண்ணீர், புன்னகை இரண்டுமே போலியான இன்றைய நவீன யுகத்தில்... நல்ல மனிதர்களை அடையாளம் காண்பது எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | பரந்தன் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 500 | 700 | 500 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 200 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 450 | 600 | 700 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 600 | 800 | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 200 | 500 | 400 |
| விளை | 650 | 450 | 400 | 400 | 400 | 500 | 400 |
| முரல் | 250 | 350 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 450 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | – | 350 |
| திரளி | 250 | 300 | 200 | 200 | – | 150 | 350 |
| நகரை | 200 | 300 | – | 200 | – | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | 80 |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 200 | 300 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 300 | 120 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 250 | 350 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 120 | 50 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 300 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 350 | 200 | 350 | 200 |



## இது புதுசு

## இரட்டை வர்ணப் புடவை

இரட்டை வர்ணப் போடர் புடவை அறிமுகமாகியுள்ளது. புடவையின் மேல்போடர் வேறு வர்ணத்திலும், கீழ்போடர் வேறு வர்ணத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 2,600ரூபா முதல் 2,850 ரூபா வரையில் விற்பனை செய்யப் படுகிறது.

# சிக்கன் தக்காளி சோஸ்

## செய்முறை :

1. 4 கோப்பை தண்ணீரில் கோழி இறைச்சியை வேகவைக்கவும்.
2. 4 கோப்பை தண்ணீர் சுண்டி, ஒரு கோப்பையாக மாறியவுடன் இறைச்சியையும் மீதமுள்ள தண்ணீரையும் இறக்கி வைக்கவும்.
3. எண்ணெயைச் சூடாக்கி, அதில் அரைத்த முந்திரி,சீரகத்தூள், மிளகாய்தூள், உப்பு, மிளகாய் வற்றல் என்பவற்றைச் சேர்த்து நன்றாக வதக்கவும்.
4. வேகவைத்த கோழி இறைச்சியை (மீதமுள்ள தண்ணீருடன்) சேர்த்துக் குறைந்த தீயில் சமைக்கவும்.
5. அதில் தக்காளி சோஸைச் சேர்த்து 10 நிமிடம் சமைக்கவும்.
6. முட்டை மற்றும் வறுத்த முந்திரியை மேலே தூவி அழகுபடுத்திப் பரிமாறவும்.



## தேவையான பொருள்கள் :

கோழி இறைச்சி -1 கிலோ
தண்ணீர் -4 கப்
அரைத்த முந்திரி -150 கிராம்
தக்காளி சோஸ் -அரைக்கோப்பை
மிளகாய் வற்றல் -4
இஞ்சி, பூண்டு விழுது -2 தேக்கரண்டி
சீரகத் தூள் -2 தேக்கரண்டி
மிளகாய் தூள் -2 தேக்கரண்டி
எண்ணெய் -2 மேசைக்கரண்டி
வறுத்த முந்திரி -10
உப்பு தேவைக்கேற்ப
வேகவைத்த முட்டை- 2

# ருசிக்கவும் மணக்கவும்

- தோசைக்கு அரைக்கும் போது, ஒரு கரண்டி சீரகத்தை வறுத்து, பருப்புடன் சேர்த்து அரைக்க வேண்டும். இப்படிச்செய்வதால், வாசனையாக இருப்பதுடன் தோசை எளிதில் சமிபாடடையும்.
- வெங்காய பகோடா கமகம வென்று இருக்க வேண்டுமா? பகோடா செய்யும் போது, பாதி வெங்காயத்தையும், சிறிது இஞ்சியையும் மிக்சியில் விழுதாய் அரைத்து, அதை மாவில் கலந்து பகோடா செய்யுங்கள். பிறகென்ன, வாசனை ஊரையே தூக்கும்.
- ப்ரைட் ரைஸ் மற்றும் வெஜிடபிள் பிரியாணி செய்யும் போது, அதனுடன் வேகவைத்த சோளத்தையும் சிறிது சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் உணவு பார்ப்பதற்கு அழகாக இருப்பது மட்டுமன்றி, சுவையும் நன்றாக இருக்கும்.
- முள்ளங்கி, பீற்ரூட் போன்ற காய்களை வாங்கும்போது, அவற்றின் இலைகளோடு சேர்த்து வாங்க வேண்டும். அந்த இலைகளைப் பொடியாக நறுக்கி, பருப்புச் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட நன்றாக இருக்கும். சூப் தயாரித்தும் சாப்பிடலாம்.
- அரைத்து சாம்பார் செய்யும் போது, அரைக்க வேண்டிய சாமான்களுடன் கொஞ்சம் கசகசாவை வறுத்து அரைத்தால் சாம்பார் சுவையாக இருக்கும்.

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 25 | 40 | 40 | 40 | 20 | 60 | 20 | 30 |
| கத்தரி | 80 | 80 | 60–80 | 80 | 40 | 60 | 70 | 40 |
| கரட் | 100 | 140 | 100-150 | 140 | 80 | 160 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 30 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 100 | 60 | 70 | 80 | 120 | 60 | 40 | 100 |
| பாகல் | 100 | 80 | 100 | 100 | 100 | 140 | 70 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 60 | 60 | 140 | 50 | 60 |
| பெ.வெங்காயம் | 70 | 70 | 80 | 80 | 70 | 100 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 50–80 | 80 | 70 | 100 | 70 | 70 |
| பூசணி | 70 | 50 | 50 | 50 | 40 | 120 | 40 | 60 |
| தக்காளி | 30 | 40 | 25 | 30 | 30 | 30 | 30 | 45 |
| வாழைக்காய் | 60 | 20 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 20 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 120 | 100 | 120 | 120 | 200 | 110 | 160 |
| புடோல் | 60 | 60 | 50 | 50 | 60 | 40 | 30 | 60 |
| கோவா | 50 | 60 | 50 | 60 | 50 | 80 | 35 | 45 |
| வெண்டி | 100 | 80 | 70 | 60 | 100 | 80 | 65 | 80 |
| போஞ்சி | 100 | 120 | 80 | 120 | 80 | 160 | 30 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 80 | 120 | 120 | 160 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 70 | 80 | 70 | 100–120 |
| தேசிக்காய் | 60 | 60 | 60 | 50 | 60 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 140 | 120 | 200 | 110 | 130 |
| இராசவள்ளி | 150 | 130 | 150 | 140 | 140 | 150 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 200 | 300 | 400 | 200 | 250 | 250 |
| பனங்கிழங்கு | 05 | 02 | 05 | 02 | 05 | – | 02.50 | – |

## நாளை

மாசி-23
ஞாயிற்றுக்கிழமை 06.03.2016
திதி: துவாதசி பி.ப.01.21 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.இ.02.03 வரை
ராகுகாலம்: 04.55-06.25 வரை
சுபநேரம்: 09.25-10.55 வரை
பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவருக்கான கைக்கடிகாரங்களை அறிமுகம் செய்துள்ள மொபிடெல்




தேசிய கையடக்க தொலைபேசிச் சேவை வழங்குனரான எஸ்.எல்.ரி. மொபிடெல் தொழிநுட்பத்தின் அடுத்தகட்டத்திற்கான நகர்வாக சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சம்ப் கைக் கடிகாரங் களை அறிமுகம் செய்துள்ளது. இந்தக் கைக்கடிகாரமானது அதி நவீன தொழிநுட்ப அம்சங் களை கொண்டுள்ளதுடன், பிள்ளை இருக்குமிடத்தைப் பெற்றோர் இலகுவாக அறிந்துகொள்ளவதற் கேதுவான வசதிகளையும் கொண்டுள்ளது.

தகவல் தொழிநுட்பம் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதி தொடர்பான அமைச்சின் நோக் கத்தை நிறைவேற்றும் பொருட்டு பிள்ளைகள் இருக்கும் இடத்தைப் பெற்றோர்கள் எப்பொழுதும் அறிந் திருப்பதற்கு உதவியாக இந்தக் கைக்கடிகாரம் தயாரிக் கப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறையில் தமது புதிய தொழில்நுட்ப அபிவிருத்திகளைக் கொண்டு தமது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த சேவையை வழங்குவதற்குமொபிடெல்தம்மைஅர்ப்பணித்துள்ளது. இப் புதிய கண்டுபிடிப்பின் மூலம் எதிர்கால சந்ததி யினரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தமது பங்களிப்பை வழங்குவதில் எஸ்.எல்.ரி மொபிடெல் நிறுவனம் பெருமையடைகின்றது.

நீர் உட்புகாதவாறு விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கைக்கடிகாரம் ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது. இதனால் பிள்ளை இருக்குமிடத்தைப் பெற்றோர் அறியமுடிவதுடன் இதில் காணப்படும் தொடர்பாடல் வசதி மூலம் பிள்ளைக்கு அழைப்பை ஏற்படுத்தி அவர்களின் செயற்பாடுகள் குறித்து அறிந்து கொள்ளவும் முடியும்.

இக் கைக்கடிகாரத்தில் இருக்கும் ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தின் மூலம் அறிந்து கொள் வதற்கு தேவையான அப்ஸ் மூலம் தர விறக் கம் செய்துகொள்ளமுடியும். இக் கைக்கடிகாரத் தில் அமைந்துள்ள விசேட தொழில்நுட்பத் தின் உதவியுடன் பிள் ளையின் இருப்பிடத் தைக் கண்டுபிடிக்க இயல் வதுடன், பொத்தானை அழுத்துவதன் மூலம் பிள்ளை ஆபத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் பெற் றோருக்கு அறிவிக்க முடியும். இந்த வசதி மூலம் பெற் றோர் தமக்கு தேவையான 10 தொலைபேசி இலக் கங்களை உள்ளடக்க முடிவதுடன் அதன் மூலம் அழைப்பை மேற்கொள்ளவும், அந்த 10 இலக்கங் களுக்கு தகவல்களை அனுப்பவும் முடியும். அத்துடன் இதில் காணப்படும் இலக்கத்தினை அழுத்து வதன் மூலம் பிள்ளை பாதுகாப்பாக இருக்கின்றது என்ற தகவலினை பெற்றோர் அறிந்து கொள்ளமுடியும். மேலும் இந்த வசதி மூலம் பிள்ளை நாள் முழுவதும் செய்த செயற்பாடுகளை அறிந்து கொள்ளமுடியும்.

நாடு முழுவதுமுள்ள எஸ்.எல்.ரி. மொபிடெல் கிளை களில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் அதற்காகத் தயாரிக் கப் பட்ட விசேட பெக்கேஜ் உடன் ரூ 2500 ஐச் செலுத்தி இக் கைக்கடிகாரத்தைக் கொள்வனவு செய்யமுடியும். (த)

# சம்பத் நலத் திட்டங்களில் ஒன்றான சூழல் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு



சமூகப் பொறுப்புவாய்ந்த நிறுவனம் என்னும் பெயர் பெற்ற சம்பத் வங்கியானது, அதன் சமூக நலத் திட்டங்களில் ஒன்றான சூழல் பாதுகாப்பு மற் றும் பராமரிப்பு என்ற திட்டத்திற்கு அமைய தர்ம பால மாவத்தையில் அமைந்துள்ள தனது சுப்பர் கிளையில் முதல் சூரிய மின்சக்தி முறைமையை நிறுவியுள்ளது. இந்த சூரிய மின்சக்தி அமைப்பு முறையானது கடந்த 2015 டிசெம்பர் 3ஆம் திகதி கொழும்பு சுப்பர் கிளை வளாகத்தில் வைபவ ரீதி யாக திறந்து வைக்கப்பட்டது.

இது பற்றி கருத்து தெரிவித்த சம்பத் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி, நந்த பெர்னாண்டோ, சம்பத் வங்கியானது நீடித்து நிலைக்கக்கூடிய பல செயற்பாடுகளை தனது வியாபார நடவடிக்கைகளில் முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் சூழல் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கான முன்னெடுப்புக் களில் தனது முதலீட்டை செய்து வருகின்றது. இதன்படி தனது முதல் சூரிய மின்சக்தி முறையை நிறுவியதன் மூலம் சுற்றுச் சூழலுக்கு பாதகமற்ற வகையில் சக்தி வளங்களைப் பயன்படுத்தும் முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து வருகின்றது- என்றார்.

மேலும் இதுபற்றி அவர் கூறும்போது, இந்த முன் னெடுப்பு வெற்றிகரமாக அமைய தனது சேவைகளை வழங்கிய ஜென்சோ பவர் டெக்னொலஜிஸ் நிறுவனத் தின் நிபுணர் குழுவுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கு நிறுவப்பட்டுள்ள இதன் செயற் பாடுகளின் அடிப்படையில், அடுத்த வருடத்துக்குள் எமது ஏனைய கிளைகளிலும் சூரிய மின்சக்தி முறையை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். என்றார்.

சம்பத் வங்கியின் சூரிய மின்சக்தி முறையின் மூலம் மணிக்கு 50 மெகாவோட் வரையிலான மின் சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். எனவே வங்கியினால் பகல் நேரத் தில் பயன்படுத்தப்படும் மின் சாரத் தில் மூன்றில் இரண்டு பங்கை இதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்ப துடன் இந்த சூரிய மின்சத்தி முறையானது சம்பத் வங் கியின் ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் மிக வசதியான புத்துணர்வுமிக்க வங்கிச் சூழலை உரு வாக்கிக் கொடுக்கும். மேலும் இதன் மூலம் பாவனைக் குத் தேவையான மின்சாரம் நிலையாகக் கிடைக்கும். இதற்கு மேலதிகமாக இந்த சூரிய மின்சக்திப் பாவனை மூலம் சூழலுக்குப் பாதகமான காபன் கழிவுகள் வெளி யேற்றப் படுவதை வருடாந்தம் 30 மெட்ரிக் தொன் அளவு குறைத் துக்கொள்ளவும் முடியும். இந்த நடவடிக்கை யானது 200 மரங்களை நடுவதற்கு சமமான செயற்பாடாகும். இந்த சூழலுக்குச் சாதகமான நன்மையானது வங்கி யின் சூழலை பாதுகாத்து பராமரிக்கும் செயற் பாட்டிற்கு உதவியாக இருக்கும். மேலும் இது சூழற்றொகுதியில் பாதிப்புகளைக் குறைத்து, காலநிலை மாற்றங்கள், சுகாதாரம், வாழ்க்கைத் தரம், பொருளாதார வளர்ச்சி, சுற்றுச் சூழலின் பேண்தகைமை ஆகியவற்றில் சாதக மான விளைவுகளை ஏற்படுத்தும்.

உலகில் உற்பத்தி செய்யப்படும் காற்று மற்றும் நீர் மின்சாரத்துடன் சேர்த்து, சூரிய சக்தி மூலம் பெறப்படும் மின்சாரமானது சுத்தமான பசுமையான மின்சார உற் பத்தியாகக் கருதப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி திட்ட அமைப்பின் கூற்றுப்படி, நிலை யற்ற மின் உற்பத்தி முறைகளும் அதன் பாவனைகளும் மனித சுகாதாரத்துக்கும் வாழ்க்கைத் தரத்துக்கும் மட்டு மல்லாது சூழற்றொகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்தி, கால நிலை மாற்றத்தையும் உண்டு பண்ணுகின்றது. எனவே பேண்தகைமைக்கொண்ட மின்சார உற்பத்திமூலம் வறுமை நிலை குறையவும், சமூக பொருளாதார வளர்ச்சி ஏற்படவும், சூழல் வழிகள் பிறக்கின்றன. (த)

**வணிகம்**

# நுட்பம்



## அதிநவீன ஜெட் விமானத்தை உருவாக்கும் முயற்சியில் நாசா

அமெரிக்காவை தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா அதி நவீன பயணிகள் ஜெட் விமானம் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

2020ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு விடப்படவுள்ள இந்த ஜெட் விமானமானது ஒலியை விடவும் 4.5 மடங்கு வேகம் உடையதாக இருப்பதுடன், தீங்கு விளைவிக்கும் இரைச்சலை முற்றாக நீக்கும் தொழில்நுட்பத்தை உள்ளடக்கி இந்த விமானம் தயாரிக்கப்படவுள்ளது.

அதாவது மணிக்கு 1,234 கிலோமீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடிய இந்த விமானத்தின் மூலம் லண்டனிலிருந்து நியூயோர்க்கிற்கு 3.5 மணி நேரத்தில் சென்றடைய முடியும் என்பது குறிப் பிடத்தக்கது. (த)



## உடலினுள் உள்ள பாகங்களை திரையில் காட்டும் அப்ளிகேசன்

ஸ்மார்ட் கைபேசிகள் அறிமுகமாகிய பின்னர் அவை பல்வேறு துறையிலும் தமது ஆக்கிர மிப்பைச் செலுத்தி வருகின்றன.

இவற்றிற்கு கல்வித் துறையும் விதிவிலக்கு அல்ல.

இதன் ஒரு அங்கமாக தற்போது VirtualidTee எனும் அப்பிளிக்கேசன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அப்பிளிக்கேசன் ஆனது ஒருவரைப் படம் பிடிக்கும்போது அவரைத் திரையில் காட்டுவதுடன் அவரின் உடல் பாகங்களையும் காட்டக்கூடிய வாறு அமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு மாயை(Virtual) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக் கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக் கும் இந்த அப்பிளிக்கேசனை iOS, Android சாதனங்களில் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின்

எதிர்வரும் 12 ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளது. அதற்கு முன்னதாக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் குறித்த வீட்டை நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். வீடு மிகவும் அழகாக இருக்கின்றது என்று தெரிவித்த அமைச்சர் சுவாமிநாதன், வீட்டு உரிமையாளர்களிடம் இந்த வீட்டை எனக்குத் தருவீர்களா என்று புன்முறுவலுடன் கேட்டார். அதன் பின்னர் வீட்டின் ஒவ்வொரு பகுதிகளையும் சென்று பார்வையிட்டார். இதன்போது, சிங்கப்பூரில் ஆரம்பத்தில் மக்கள் குடிசை வீடுகளில் இருந்தனர். தற்போது இதே போன்ற வீடுகளில் இருக்கின்றனர். பழையவற்றைப் பேசிக் கொண்டிருக்காமல் இவ்வாறான புதிய வீடுகளை ஏற்றுக் கொள்ளத்தக்கவர்களாக மாற வேண்டும் என்றும் அமைச்சர் சுவாமிநாதன் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். இதன்போது பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், பலாலி விமான நிலையத்தைப் பெருப்பிக்கின்றோம். மக்களின் காணிகளை எடுக்கமாட்டோம். பிராந்திய விமான நிலையமாகவே அதனைப் பெருப்பிக்கின்றோம். யாழ்ப்பாணத்திலும் நிறைய கோயில்கள் இருக்கின்றன. இந்தியாவிலும் நிறையக் கோயில்கள் இருக்கின்றன. இலகுவாக இந்தியாவுக்குச் சென்று வருவதற்கு ஏற்றாற் போலவே, பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்புச் செய்கின்றோம்.

இது சர்வதேச விமான நிலையமாக அமைக்கப்படாது. மக்களின் காணிகளை மீளக் கொடுக்கவேண்டும் என்பதே அரசின் கொள்கையாக இருக்கின்றது. அப்படியிருக்கையில் எவ்வாறு காணிகளை எடுப்போம் – என்றார்.

ஊடகங்களுடனான சந்திப்பின் பின்னர் அமைச்சர் சுவாமிநாதனை, பிரதேச மக்கள் சுற்றி வளைத்து எல்லோரும் மனுக் கொடுத்தனர். சுமார் நூறு பேர் வரையில், இதே போன்ற வீடுதான் எங்களுக்கு வேண்டும் என்று எழுத்தில் கொடுத்தனர். இதன் போதும் அமைச்சர் சுவாமிநாதன், இங்குள்ள பத்திரிகைகள் இதற்கு எதிராக எழுதுகின்றார்களே என்று அவர்களிடம் கூறினார். (த–வ–5)

## யாழ். ஊடகங்கள்

கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வீடு இன்னமும் முழுமை பெறவில்லை. மூன்று தினங்களுக்குள் இதனைப் பூர்த்தி செய்து விடுவார்கள். அதன் பின்னர் மக்கள் இந்த வீட்டைப் பார்க்கட்டும். எத்தனையோ பத்திரிகைகள் இந்த வீட்டைப்பற்றி எதிராக எழுதியுள்ளார்கள். ஊடகவியலாளர்களைப் பார்த்து நீங்கள்தான் இந்த வீடு தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளை வைக்கின்றீர்கள்.

நீங்களே இந்த வீட்டைப் பாருங்கள். உங்கள் மனதுக்கு இதனை ஏற்றுக் கொள்ளப் போகின்றீர்களா? இல்லையா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப் படும் போது எதிர்ப்பு இல்லாமல் நடக் காது. எல்லாவற்றி லும் குறை கூறிக் கொண்டிருந்தால் முன்னேற்றம் காண முடியாது. நாங்களும் தமிழர்கள்தான். தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படமாட்டோம் – என்றார். (த–வ–5)

## 14 கைதி

உள்ளபோதிலும் இது தொடர்பில் அரசு தரப்பு பாராமுகமாகவே இருக்கின்றமை தமக்கு கடும் வேதனையைத் தருகின்றது என்றும் அவர்கள் கண்ணீருடன் கூறினர்.

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரமசகாயம் உதயகுமார், சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், நடேஸ் குகநாதன், மு.சிவநாதன், மா.நீதிநாதன், க.வேதநாயகம், ந.தர்மராஜா, சு.ஞானசீலன், தயாபரன், தி.மனோகரன், யோசப் செபஸ்தியான், சுப்பிரமணியன் கபிலன், இராசதுரை திருவருள் மற்றும் இரவீந்திரன் மதனி ஆகிய 14 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 23ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம் பித்தனர்.

நேற்று 11ஆவது நாளாகவும் இவர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்ந்தது. இந்நிலையில், 14 பேரினதும் உடல்நிலை ஆபத்தான நிலையில் உள்ளது என்று சிறைச்சாலை அதிகாரிகளும், உண்ணாவிரதக் கைதிகளின் உறவுகளும் தெரிவித்தனர். தமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வொன்று கிட்டாத வரையில் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர் என்று சிறைச்சாலை அதிகாரிகளும், உண்ணாவிரதக் கைதிகளின் உறவினர்களும் மேலும் கூறினர். அவர்களில் பலர் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சைபெறுவதை மறுத்துவிட்டு மீண்டும் சிறைக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (த–வ–சி)

## கண்ணீர் அஞ்சலி



கைதடியைப் பிறப்பிடமாகவும்
கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட
**திருமதி பொன்னம்பலம் வள்ளிப்பிள்ளை**

பல்லோர் போற்றும் வண்ணம் சீரோடும் சிறப்போடும் பெயரோடும் புகழோடும். ஊர் போற்ற வாழ்ந்து சென்ற உத்தமியே துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**“செல்வதி”**
**கைதடி கிழக்கு.கைதடி.**

K.S சிவசுப்பிரமணியம் குடும்பம் (கனடா)
K.S கணபதிப்பிள்ளை குடும்பம் ( கைதடி)

(69811)(12.18.19)

## மரண அறிவித்தல்



செல்வி சின்னத்தம்பி புவிதவதி

இல.68, செட்டித்தெரு நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி புனிதவதி நேற்று (04.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - புஸ்பராசமணி தம்பதியரின் அன்பு மகளும், நாகபூசணி, லோகநாயகி, செல்வி பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மன்மதராஜனின் அன்பு மைத்துனியும், டனுஷின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**68,செட்டித்தெரு,**
**நல்லூர்.**

தகவல்:
**இ.மன்மதராஜன் (மைத்துனர்)**
**குடும்பத்தினர்.**

(69833) (13.18.17)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**கதிரன் மாணிக்கம்**



தோற்றம்
04.06.1927

மறைவு
25.02.2014

எம் குடும்ப பாசவிளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளேயில்லையம்மா

(69822)
(14,18)

**751, கண்டி வீதி,**
**அரியாலை.**

**குடும்பத்தினர்.**

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அம்பலவாணர் பரமநாதன்**

[ உதவி பொறியியலாளர் - தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை யாழ்ப்பாணம். ]



பிறப்பு
03.03.1958

இறப்பு
20.02.2009

திதி: அபரபட்ச ஏகாதசி
(05.03.2016)

*அப்பா!*


ஏழாண்டுகள் ஆனது நீங்கள் எம்மைப் பிரிந்து......
எம் ஏற்றத்திற்காய் உழைத்தீர்கள்ஏகன் திருப்பாதம் அடைந்தீர்கள்.....
எங்கள் உயர்வு காண எங்களோடு இல்லை இன்று நீங்கள்......
என்றாலும் எப்போதும் எம்மோடு இருங்கள்.

**" திருவதிகை"**
**வேளவை, அளவெட்டி.**

**அன்புடன்**
**பிள்ளைகள்**

(69778) (12.13.18.19)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



**குட்டியன் ஜெயராசா**
(சின்னத்தம்பி)
(ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)

தோற்றம்
12.03.1964

மறைவு
03.02.2008

திதி: 05.03.2016

கண்ணும் இமையும் போல் நாம் அன்று வாழ்ந்திருந்தோம்
என் கண்ணாளா! அந்த நினைவுகளோடு என்றும்
நான் வாழ்கிறேன் உனக்காக.....

**“பவளவனம்”**
**நவிண்டில்.**

J.றஞ்சினி (மனைவி)

(69778) (12.13.18.19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் **இரத்தினம்மா கேசவலிங்கம்**

(தனது புன்சிரிப்பால் எல்லோரது அன்பைப் பெற்று மகிழ்வித்த பவி)



அன்னை மடியில்
06.11.1952

இறைவன் அடியில்
04.02.2016

கடந்த 04.02.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி இரத்தினம்மா கேசவலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (05.03.2016) சனிக்கிழமை நடைபெறும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.


மேலும் அன்னாரது இறப்புச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி முகநூல் மூலம் தொடர்பு கொண்டு துக்கம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் நேரடியாக வந்து உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

(69815)
(14,18)

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவு வணக்க அஞ்சலி



மந்துவில் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம்
ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் - **பொன்னையா லோகேஸ்வரன்**
[ அம்பலவாணர் ]
அவர்களது 1ம் ஆண்டு நினைவு வணக்க அஞ்சலி

ஆண்டுகள் ஒன்றைத் தாண்டியே சென்றது - ஆனாலும்
தங்கள் நினைவுகள் எம்மனதிலும் நீங்காமல் உள்ளது.
எம் குடும்பத்தின் குளவிளக்கே....
எம் வாழ்வின் வழிகாட்டியே - எமக்கு
கலங்கரை விளக்கமாய் இருந்து
வாழ்ந்து சென்று விட்டாய்.
ஆண்டு பல ஓடி மறைந்தாலும் - உம் நினைவுகள்
எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும்.

என்றும் உம்மை மறவாத
அன்பு மனைவி , பிள்ளைகள்
மருமக்கள் , பேரப்பிள்ளைகள்.

077 4366 423
011 2364 074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜவி கமலா பத்மசுந்தரி பரமோதயன்

(முன்னாள் ஆசிரியை - சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜவி கமலா பத்மசுந்தரி பரமோதயன் 23.02.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் Dr.கந்தப்பு பரமோதயன்(முன்னாள் ஆசிரியர் சென்ஜோன்ஸ் கல்லூரி- யாழ்ப்பாணம், முன்னாள் அதிபர் கூட்டுறவு பாடசாலை - யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பேள்சுப்பிரமணியம், ரூபி, பூவதி, விமலா, சுசிலா மற்றும் Dr.காந்தி - நவரட்ண சிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தி, அஜந்தா, பிரிந்தா, ரபீந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.ராஜாப் பிள்ளை அகிலன், இசபெல்லா சௌலா, Dr.பீற்றர் மைக்கலன், அலீஸ்சா கப்பிட்டனியோ ஆகியோரின் அன்பு மாமியாரும் அர்ஜீணன், சஞ்ஜீவன், கஜா, யுவான், அன்ரெக், பிரியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.03.2016) சனிக்கிழமை மு.ப 10 மணியளவில் பெடிங்க்டன் தோட்டம் வலிங்க்டனில்(SURREY SM6 OHU) உள்ள வெலிங்டன் மெதடிஸ்ட் தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் மிச்கெம் வீதி சேமக்காலையில் (LONDON CR9 3AT) நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30, Northwood Road,
Carshalton Beeches,
Surrey SM5 3JA.

தகவல் மருமகன்
Dr.ராஜாப்பிள்ளை அகிலன்.

**UK Ph: +44 208 647 7732**

### திருமதி வள்ளிப்பிள்ளை பொன்னம்பலம்



தோற்றம்: 17.02.1940
மறைவு: 02.03.2016

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ள வத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை பொன்னம்பலம் 02.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னத் தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சந்திர சேகரம் மற்றும் தங்கமுத்து தம்பதிகளின் பாசமிகு மருமக ளும், பொன்னம்பலத்தின் (உரிமையாளர் - weligama stores, 139.4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு-11) அன்பு மனை வியும், சுமதி (ஆஸ்திரேலியா), வசந்தி (நியூசிலாந்து), நந்தினி (கொழும்பு), சுகந்தன் (உரிமையாளர் - வசந்தா வைன் ஸ்ரோர்ஸ், கைதடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவ சண்முகராஜா (இயந்திர பொறியியலாளர் - ஆஸ்தி ரேலியா), மோகன்ராஜ் (சிவில் பொறியியலாளர் - நியூசி லாந்து), சத்தியமூர்த்தி (தர்ஷிகா ஜுவலேஸ்- செட்டியார் தெரு, கொழும்பு 11), ருத்திராதேவி (கைதடி) ஆகியோரின் அன்பு மாமியாரும், அனோஸ் (மருத்துவர் - பிரின்ஸ் அலெசான்ட்ரா வைத்தியசாலை, ஆஸ்திரேலியா), டில்சான் (வையட்டோ பல்கலைக்கழகம்), ரனுஸ்கா (மொனாஷ் பல்கலைக்கழகம் - ஆஸ்திரேலியா), நிலோஸ் (ஜேம்ஸ் குக் பல்கலைக்கழகம் - ஆஸ்திரேலியா), பவிஸ்கா (சிட்னி பல்கலைக்கழகம் - ஆஸ்திரேலியா), சோபினி (ஒட்டாகோ பல்கலைக்கழகம் - நியூசிலாந்து), நிதுஜா (பெல்வோயர் சர்வதேச கல்லூரி - கொழும்பு 04) ஆகியோரின் அம்மம்மாவும், கந்தையா, காலஞ்சென்ற வர்களான செல்வம், சுப்பிரமணியம், செல்லத்துரை மற்றும் சண்முகரத்தினம் ஆகியோரின் சகோதரியும், K.S.கணபதிப்பிள்ளை, K.S சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரின் இல் லத்தில் இல.23, Dr. ஈ.ஏ.கூரே மாவத்தை, வெள்ளவத்தை யில் வைக்கப்பட்டு 06.03.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடை பெற்று தகனக் கிரியைகளுக்காக பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.23 Dr.E.A Coory
mawatta,
Wellawatta.

(சி/29757)
(11,18,19)

தகவல்: கணவர்
K.S.பொன்னம்பலம்
குடும்பத்தினர்.

**0112 501 550, 077 600 2867, 077 787 1474, 077 784 4920**

## மரண அறிவித்தல்கள்

### குணசிங்கம் புஸ்பராசா



பண்டத்தரிப்பு சாந்தை பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் புஸ்பராசா 25.02.2016 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணசிங்கம் செல்வரட்ணம் தம்பதிகளின் புதல்வனும் புத்தூர் கிழக்கு புத்தூரை சேர்ந்த ஜெயந்தினியின் அன்புக் கணவரும் பிரகாஸ், வேணுராஜ் (புத்தூர்) பிரவணன், அபீசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்ப னாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். அன்றைய தினம் புத்தூர் கிழக்கு புத்தூரில் உள்ள அவரது இல்லத்திலும் ஆத்ம சாந்தி பிரார்த்தனை நடைபெறும். இந்த அறிவித்தலை உற் றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் சி. தயாபரன் ( மச்சான் )
தனியார் பஸ் உரிமையாளர்
புத்தூர் கிழக்கு புத்தூர்.

### திருமதி மேரிராணி கிறிஸ்தோப்பர்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிராணி கிறிஸ்தோப்பர் 03.03.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் யோசவ் கிறிஸ் தோப்பரின் மனைவியும் றொகான், நேசன், நாதன் (நோர்வே), செல் வினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் யூலி (ஜேர் மன்) காலஞ்சென்றவர்களான அன்ரன் தவசிங்கம், கனீஸ்ரா, ஆனந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் துளசி, ராணி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சயந்தன் , தாமரை,அஜய், கௌரி, அனோஜன், கனோஸின், கிறிஸ்டி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுகனியா, லிங்கா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

33/21, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(69454)(12.18.20)

**021 221 9625, 077 624 4514**

தோற்றம் 08 . 12 . 1930



மறைவு 04 . 03 . 2016

### கணபதி கதிரவேலு

(ஓய்வுபெற்ற துறலியலாளர்-இலங்கை புகையிரதத் திணைக்களம்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மன்னார், யாழ்ப் பாணம் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கதிரவேலு நேற்று (04.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான கணபதி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு- கண்மணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், மனோகரன் (மன்னார்), யோகேஸ்வரி (பிரான்ஸ்), கருணாதேவி (ஆசிரியை-சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்), லோகநாதன் (வைத்தியர் -கனடா), உதயசுந்தரி (UK) ஆகியோரின் அன்புத் தந்தை யும், புஸ்பராணி (மன்னார்), செல்வரட்ணம் (பிரான்ஸ்), சிவ தாசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ் இந்துக் கல்லூரி), லோயலா மதுரநாயகி (வைத்தியர் - கனடா), வரகுணன் (UK) ஆகியோ ரின் பாசமிகு மாமனும்,குகராஜ், சாரங்கன், தனுஷா, லக்ஸ்மன், சங்கவி, நிபுஷா, வர்ஷா, லோஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தனு ஆட்"
33/5, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 5058

## தொடர்

தலைதூக்க ஆரம்பித்துள்ளன. கடந்த 72 மணித்தியாலங்களுக்குள் மூன்று பயங்கரத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் இருவர் பலியாகியுள்ளதுடன், படுகாயமடைந்த நிலையில் ஒருவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

சினிமாப் பாணியில் தொடர்ச்சியாக அரங்கேறும் படுகொலைகளாலும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களாலும் தென்னிலங்கை படுகொலைக் களமாக மாறிவருகிறதோ என்ற அச்சநிலை உருவாகியுள்ளது. இந்தநிலையில், பொலிஸாரும் தேடுதல் வேட்டையை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், புளூமெண்டல் சம்பவத்துடன் தெற்கில் மீண்டும் தனது கைவரிசையைக் காட்ட பாதாளக்குழுக்கள் ஆரம்பித்துள்ளன என்று கூறப்படுகின்றது. குறிப்பாக தென் மாகாணத்தில் கடந்துள்ள 70 நாள்களுக்குள் சிலர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு இலக்காகி சிலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தநிலையில், தற்போது கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளிலும் பாதாளக் குழுக்களின் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த புதனன்று பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான தெமட்டகொட சமிந்த நீதிமன்றத்துக்கு அழைத்துவந்த பின்னர், வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு கொண்டுசெல்லப்படும் போது, நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தார். கார் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுதக்குழுவினரே சமிந்தவை இலக்குவைத்து சரமாரியாகச் சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். இவர் முக்கிய பாதாளக்குழு உறுப்பினராகக் கருதப்படுகின்றார். 'குடு சமிந்த' என்ற பெயரும் இவருக்கு இருக்கின்றது.

தெமட்டகொட சமந்தா திரையரங்கிற்கு அருகில் வைத்தே கடந்த புதன்கிழமை மாலை 4.15 மணியளவில் சினிமாப் பாணியில் சிறைச்சாலை பஸ் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இந்தப் பதற்றம் தணிவதற்கு முன்னரே வெலிக்கடை ஒபேசேகரபுர பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மற்றுமொரு பாதாளக் குழு உறுப்பினர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

முகத்தை மறைத்தவாறு தலைக்கவசம் அணிந்த இரண்டு பேரால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த குப்புறுபிட்டிய ஹர் என அழைக்கப்படும் 32 வயதுடைய பாதாளக்குழு உறுப்பினரை இலக்குவைத்தே சூடு நடத்தப்பட்டுள்ளது. இதுவும் பாதாளக் குழுக்களிடையே ஏற்பட்ட முறுகலால் இடம்பெற்ற உயிர்ப்பலியாகும்.

இந்த நிலையில், நேற்றும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நீர்கொழும்பு, கொச்சிக்கடைப் பகுதியில் வைத்து நலந்த சம்பிக்க (வயது - 41) என்ற நபர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகளே இவர் மீது சூடு நடத்திக் கொலை செய்துள்ளனர்.

வணிகம் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் கொச்சிக்கடைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (த-வ-சி)

## மே 16 ஆம் திகதி

234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாகத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில், தமிழகத்தில் திராவிடக் கட்சிகள் கூட்டணி தொடர்பான பேச்சுக்களில் மும்முரமாக இறங்கியுள்ளன. அத்துடன், ஈழத் தமிழர் சார்பு விடயத்திலும் மத்தியில் ஆட்சி செய்யும் பாரதீய ஜனதாக் கட்சி உள்ளிட்ட தமிழகக் கட்சிகள் தமது அறிவிப்புகளை வெளியிடும் என இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(த-வ)

## மரண அறிவித்தல்

### பேரம்பலம் சிவலிங்கம்

காரைநகர் களபூமி பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், வவுனியா வைரவப்புளியங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட பேரம்பலம் சிவலிங்கம் 04.03.2016 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம்-சின்னக்குட்டி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவயோகத்தின் அன்புக் கணவரும், சிவனேஸ்வரி (ஆசிரியர், வவுனியா / இறம்பைக்குளம்) சூரியகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தகப்பனும், ரவிசங்கர், நாகரூபி, தயாளினி (காரைநகர் இந்துக் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, பரமேஸ்வரி, சுப்ர மணியம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹர்ணிகா, குகராஜ், நிருஷிகா, எனுஷாந், கபிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(69841)(10,17)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியக் கொடி

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் புதிதாக அமைக்கப்படவுள்ள ஆண் மாணவர் விடுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கடந்த காலப் போர் நடைபெற்றவேளை பெற்றோரை இழந்த பொருளாதார ரீதியில் பாதிப்புற்ற வடக்கு - கிழக்கு - மலையக, தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் சர்வதேச பழைய மாணவர் ஒன்றியத்தினால் 80 மில்லியன் ரூபா செலவில் ஆண்கள் விடுதி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன் ஆரம்பத்தில் இலங்கையின் தேசியக்கொடியை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து பாடசாலைக்கொடியை, பாடசாலை அதிபரும், வலயக் கொடியை வலயக் கல்விப் பணிப்பாளரும் ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வு, கல்லூரிஅதிபர்நஜெயகுமாரன் தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், கல்லூரியின் முன்னாள் அதிபர்களான க.அருந்தவபாலன், மு.நாகேந்திரராஜா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-5-9)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
**இரத்தினம் ரவிச்சந்திரன்**
அவர்களின் அன்புச் சகோதரன்

**இரத்தினம் லோகநாதன்**

அவர்கள் இங்கிலாந்தில் இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்** (69830) (11,17,18)
**யா/பெரியபுலம் ம.வி.**

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் வள்ளிப்பிள்ளை பொன்னம்பலம்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விசுவநாதன் குடும்பம்
அருள்தாஸ் குடும்பம் (லண்டன்)
சிவரூபன் குடும்பம் (கனடா)
சிவசுமித்திரன் குடும்பம் (லண்டன்)
றஜிந்திரா குடும்பம் (லண்டன்)

**சுமித்திரன் ஸ்ரோர்ஸ்**
**கைதடி மத்தி,**
**கைதடி.**

(C.29621) (10.17)

## மரண அறிவித்தல்



**வேலுப்பிள்ளை ஜெயசீலன்**

(கரவெட்டித்திடல், நாகேஸ்வரா வித்தியாலயம் ஆசிரியர் B.Sc)

முரசுமோட்டை பழைய கமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜெயசீலன் நேற்று (04.03.2016) காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஜெயச்செல்வியின் (ஆசிரியை-நாகேந்திரபுரம் வித்தியாலயம்) அன்புக் கணவரும், சுப்பிரமணியம்-இராசேஸ்வரி தம்பதியரின் மருமகனும், கௌதமி, அபிநயா, அச்சுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பார்வதிப்பிள்ளை பரமேஸ்வரி, புவனேஸ்வரி, சத்தியசீலன், குணசீலன், யோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பதுமநிதி, சிவராஜா, கணேசராஜா, சியாமளா, செல்வராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் முரசுமோட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 040 9979, 076 6167 853

(64270)(10,17)

தகவல்:
**சகோதரர் வே.குணசீலன்**
**மற்றும் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**திரு. கந்தையா புண்ணியமூர்த்தி**
**(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)**



பிறப்பு
17.10.1927

இறப்பு
03.03.2016

மாதகலைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வவுனியா கற்குழியைத் தற்கால வசிப்பிடங்களாகவும் கொண்ட திரு. கந்தையா புண்ணியமூர்த்தி 03.03.2016 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற அம்பலவாணர்-செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், தர்மராஜன் (பொறியியலாளர், கனடா), ஆனந்தராஜன் (கணக்காளர், மவுன் பி(B)றீஸ் ஹொட்டல், கொழும்பு), இந்திராணி (வவுனியா), ஜெயராஜன் (மென்பொருள் பொறியியலாளர், லண்டன்), ரவிராஜன் (பேராசிரியர், பௌதிகவியற்றுறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாக்கியம், தவமணி, துரைசிங்கம், காலஞ்சென்ற இராமசாமி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாசுகி (கனடா), தயாளினி (ஆசிரியர், சென் ஆன்ஸ், கொட்டகேனா), ஸ்ரீ கணேஷ் (சிரேஷ்ட உதவிமுகாமையாளர், ஸ்ரீ லங்கா ரெலிக்கொம், வவுனியா), ஞானகுமாரி (லண்டன்), வாசுகி (ஆசிரியர், யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜானி, சரண்யா, ஜாதவன் (மூன்றாம் வருட மாணவன், SLIIT), ஜாவன்னியா, பிரசாந்தினி (செய்முறைகாட்டுனர், விலங்கியற்றுறை, யாழ். பல்கலைக் கழகம்), தர்சிகா (மூன்றாம் வருட விஞ்ஞானபீட மாணவி, யாழ். பல்கலைக் கழகம்), கீர்த்தனா, சாய்ஸ், ஆகாஷ், சர்வேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும், நற்குணசிங்கம், பரமேஸ்வரி, ஜெயலட்சுமி, தனலட்சுமி, நாகராஜா, மகேந்திரராஜா, தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சற்குணசிங்கம் மற்றும் ஆறுமுகம், மாலதி, தேவி, லதா ஆகியோரின் சகலருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் 92, கற்குழி, வவுனியா இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இறம்பைக்குளம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ கணேஷ் : 071 236 1591,
024 222 2529
ஆனந்தராஜன் : 071 184 0657
ரவிராஜன் : 071 856 1715

தகவல் :
**குடும்பத்தினர்**

(C/29616) (10.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தோல்விகளால் பாதிப்பில்லை உறுதியாக கூறுகிறார் மலிங்க

இலங்கை அணியின் தொடர் தோல்விகள் அணியின் செயற்பாட்டை எந்தவிதத்திலும் பாதிக்காது என்று ரி-20 அணித்தலைவர் மலிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ரி-20 அணியின் தலைவர் மலிங்க காயத்தால் தொடர்ந்து அவதிப்பட்டு வருகிறார். இருப்பினும் ஆசியக்கிண்ணத் தொடரில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு எதிரான ஆட்டத்தில் களமிறங்கி சிறப்பாக செயற்பட்டார். ஆனால் அதன் பின்னர் நடந்த இந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் அவர் பங்கேற்கவில்லை. இதனால் அந்த 2 ஆட்டங்களிலுமே தோல்வியடைந்த இலங்கை தொடரை விட்டு வெளியேறியது. இந்த நிலையில் தோல்வி தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே மலிங்க இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

மலிங்க மேலும் தெரிவிக்கையில் :- இலங்கை அணியில் அனுபவமற்ற வீரர்கள் இருக்கின்றனர். ஆசியக் கிண்ணத் தொடர் போன்ற பெரிய தொடர்களுக்கு அனுபவம் என்பது முக்கியமானது. ஆனால் அதேசமயம் எங்களிடம் திறமையான இளம் வீரர்கள் உள்ளனர். இன்னும் சில வருடங்களில் வலுவான



ஒரு அணி அமையும். 2012ஆம் ஆண்டு ஆசியக்கிண்ணத் தொடரில் நாங்கள் தோற்று வெளியேறினோம். ஆனால் 2014 ஆம் ஆண்டு நடந்த ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் அதே இடத்தில் கிண்ணம் வென்று அசத்தினோம். கடந்த சில ஆண்டுகளாகவே நாங்கள் சிறந்த நிலையில் இருக்கிறோம். இந்தத் தோல்விகள் அணியின் செயற்பாட்டை பாதிக்காது. ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் கண்டிப்பாக அசத்துவோம். என்றார். (ம)

## கிளிநொச்சி வலய சதுரங்கத் தொடர்

கிளிநொச்சி, மார்ச் 5

கிளிநொச்சி கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கத் தொடர் இன்று சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

15 வயதுக்கு உட்பட்ட இருபால் அணிகள், 19 வயதுக்கு உட்பட்ட இருபால் அணிகள் என மொத்தம் நான்கு பிரிவுகளாக தொடர் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய நான்கு கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன. (ம-405)

## வலிகாமம் எறிபந்தாட்டம்

வலிகாமம், மார்ச் 5

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான இருபாலாருக்குமான எறிபந்தாட்டத் தொடர்கள் இன்று சனிக்கிழமை காலை 8.30மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ம-422)

## நல்லூர் மெய்வன்மை

யாழ்ப்பாணம், மார்ச் 5

நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 9, 10, 11 ஆம் திகதிகளில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (ம-422)

## சிவநகர், உருத்திரபுரம் ம.வி., கிளி. இந்து கரைச்சி கோட்ட கால்பந்தில் சம்பியன்



யாழ்ப்பாணம், மார்ச் 5

கரைச்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் 15வயதுப்பிரிவில் சிவநகர் அ.த.க.பாடசாலை அணியும், 17வயதுப்பிரிவில் உருத்திரபுரம் மகா வித்தியாலய அணியும், 19வயதுப்பிரிவில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணியும் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளன.

உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற 15 வயதுப்பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் சிவநகர் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து புதுமுறிப்பு விக்னேஸ்வரா அணி மோதிக் கொண்டது. இதில் சிவநகர் அ.த.க. பாடசாலை அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

உருத்திரபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 17 வயதுப்பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலை தகர்ப்பு உதைகள் வரை நீடித்துச் சென்றது. இதில் உருத்திரபுரம் மகா வித்தியாலய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. தொடர்ந்து இடம்பெற்ற 19 வயதுப்பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-23)

## புனித லூசியா, புனித சவேரியார் அணிகள் கிண்ணம் வென்றன மன்னார் கால்பந்தில்

மன்னார் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட தொடரில் 15வயது, 19வயதுப் பிரிவுகளில் பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலய அணிகளும், 17வயதுப்பிரிவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அணியும் சம்பியனாகின.

தாழ்வுபாடு ஆயர் இராயப்பு ஜோசெப் மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இறுதியாட்டங்கள் நடைபெற்றன. முதலாவதாக இடம்பெற்ற 15 வயதுப்பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அணியை எதிர்த்து புனித லூசியா மகா வித்தியாலய அணி மோதியது. இதில் புனித லூசியா மகா வித்தியாலய அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அணியை எதிர்த்து புனித லூசியா மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அணியை எதிர்த்து பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)



போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ, தனது மகன் கால்பந்து பயிற்சி எடுக்கும் படமொன்றை 'கால்பந்தின் எதிர்காலம்' என்று குறிப்பிட்டு தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். (ம)

## சகிப் அல் கசனுக்கு எச்சரிக்கை அபராதம் விதிக்கவும் வாய்ப்பு

ஆசியக்கிண்ணத் தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில், ஒளிரும் ஸ்டெம்பை சேதப்படுத்த முனைந்தமைக்காக பங்களாதேஷ் வீரர் சகிப் அல்கசனுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது ஐ.சி.சி.

நடைபெற்று வரும் ஆசியக்கிண்ணத் தொடரில் ஒளிரும் ஸ்டெம்ஸ் மற்றும் பெயில்ஸ் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்த 6 ஸ்டெம்ஸ், மற்றும் 4 பெயில்ஸ்களும் இந்திய மதிப்பில் 50 இலட்சம் பெறுமதியுடையவை. வீரர்கள் இதை எந்த விதத்திலும் தொடக்கூடாது என்று ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவுறுத்தியுள்ளது. இந்நிலையில் ஆசியக்கிண்ண தொடரில் கடந்த புதன்கிழமை பங்களாதேஷ் - பாகிஸ்தான் அணிகள் மோதிய ஆட்டத்தில் ஆமிரின் பந்துவீச்சை எதிர்கொண்ட சகிப் அல் கசன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். இதனால் விரக்தியில் துடுப்பாட்ட மட்டையால் ஸ்டெம்பை தாக்கினார். இருப்பினும் உடனடியாக நடுவரிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுச் சென்றார். என்றாலும் குற்றம் குற்றமே. சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்திய விசாரணையில் அவர் தனது தவறை ஒப்புக் கொண்டதால் அவருக்கு பெரும் எச்சரிக்கை விடுத்துள்ளது ஐ.சி.சி. இருப்பினும் சகிப் அல் கசனுக்கு கட்டணத்தில் இருந்து 50 சதவீதம் அபராதம் விதிக்க வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 5

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில், சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூபைட் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் ஏ அணி மோதவுள்ளது.

**கழுகுகள் வி.கழகத் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாஸ் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று சனிக்கிழமைபிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து வவுனியா யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**வைகறை வி.கழகத் தொடர்**

புது மடம் வைகறை விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் இன்று இரவு 7 மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி அணி மோதவுள்ளது. (ம-23-108)



# கிண்ணம் வென்றது சென்.பற்றிக்ஸ் யாழ். கோட்ட கால்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். கல்விக்கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் சென்.பற்றிக்ஸ் அணி கிண்ணம் வென்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இறுதியாட்டம் இடம்பெற்றது. சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இரு அணிகளும் தாராளமான வாய்ப்புக்களை வீணடிக்க கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைமைதான். பெரிதான மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணம் தீர்மானமாக வேண்டிய நிலைமை. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி மோதிக் கொண்டது. இரு அணிகளாலும் கோல் கணக்குகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் இந்த ஆட்டமும் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. சமநிலைத் தவிர்ப்பில் யாழ். மத்திய கல்லூரி 5:3 என்ற கோல் கணக்கில் மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23-422)

# போராடி வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், மார்ச் 5

தாஸ் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் விண்மீன் அணி வெற்றிபெற்றுள்ளது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாஸ் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து மெரிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதிக்கொண்டது. இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலைத் தகர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. இதில் பலாலி விண்மீன் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# மன்னார் கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

(ம-23)

# தொண்டமானாறு வீரகத்தி ம.வித்தியிடம் வடமராட்சி வலய கரப்பந்தாட்டக் கிண்ணம்

கரணவாய், மார்ச் 5

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி அ.மி கல்லூரியை வீழ்த்தி நடப்பு வருடத்தின் வலயச் சம்பியனாகியது தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம்.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பல வருடங்களாக வலயச் சம்பியனான உடுப்பிட்டி அ.மி கல்லூரியும் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை பலத்த போராட்டத்தின் பின் 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் தனதாக்கியது. இரண்டாவது செற்றை எப்படியாவது வென்று சமனிலைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி. ஏனெனில் இந்த செற்றிலும் வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் வெற்றிபெற்றால் கிண்ணம் அந்த அணியிடம் சென்றுவிடும். பெரும் போராட்ட குணத்தை வெளிப்படுத்தி இழுபறிகளுக்கு மத்தி



யில் 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சமனிலைப்படுத்தியது அமெரிக்க மிசன். இறுதி செற்றில் கிண்ணம் தீர்மானமாகும் நிலைமை. வீரகத்தி மகாவித்தியாலய அணி 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்ற 2:1 என்ற செற் கணக்கில் நடப்பு வருட வலயச் சம்பியனாகியது வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம். (ம-108)

# சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, நெளுக்குளம் கலைமகள் வித்தி. கிண்ணம் வென்றன







வவுனியா, மார்ச் 5

வவுனியா தெற்கு கல்விவலய பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் 15, 17 வயதுப் பிரிவுகளில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணிகளும், 19வயதுப்பிரிவில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியும் கிண்ணங்களைச் சுவீகரித்துள்ளன.

**15 வயதுப்பிரிவு**

சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இறுதியாட்டங்கள் நடைபெற்றன. 15 வயதினருக்கான ஆட்டத்தில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணி மோதியது. இதில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணி 10:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனாகியது. 3ஆம் இடத்தை பூநகரி மகாவித்தியாலய அணி பெற்றது.

**17 வயதுப்பிரிவு**

17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வவுனியா இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி அணி 14:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனாகியது. 3 ஆம் இடத்தை அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம் பெற்றது.

**19 வயதுப்பிரிவு**

19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியை எதிர்த்து சைவப் பிரகாச மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணி 23:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிண்ணம் வென்றது.

(ம-422-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானிடமும் வீழ்ந்தது இலங்கை
# பந்துவீச்சு எடுபடாமல் போனமையால்

ஆசியக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றி பெற்றது பாகிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. நேற்றைய ஆட்டத்தில் மத்தியூஸிற்கு ஓய்வு கொடுக்கப்பட்டுடிக்வெல களமிறக்கப் பட்டிருந்தார். ஆரம்ப வீரர்களாக சந்திமல் மற்றும் டில்சான். ஆரம்பத்தில் பவுண்டரிகளுக்கு பஞ்சமே நிலவியது. டில்சான் 8 ஓட்டங்களில் இருந்த வேளையில் மிகமிக இலகுவான பிடியெடுப்பைத் தவறவிட்டார் இர்பான். வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்தி மிரட்ட ஆரம்பித்தது சந்திமல், டில்சான் இணை. இலக்குச்சரிவில்லாமல் 50 ஓட்டங்களுக்கு அப்பால் வரையும் தாக்குப்பிடித்தது இலங்கை. அவ்வப்பொழுது சிக்சர்களும் இருந்தன. ஆமிரின் பந்தும் நேற்று எடுபடவில்லை.

இலங்கை அணி 110 ஓட்டங்களை எடுத்திருந்த வேளையில் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சந்திமல். செகான் ஜெயசூரியவை வெளியேற்றினார் மலிக். தான் வீசிய 18ஆவது பந்துப்பரிமாற்றத்தில் கப்புக் கெதரவை 2 ஓட்டங்களுடனும் சாணகவை ஓட்டமெதனையும் பெறவிடாதும் வெளியேற்றினார் இர்பான். 64 ஓட்டங்களுடன் டில்சான் இருந்த வேளையில் மற்றுமொரு வாய்ப்பை கோட்டை விட்டார் இர்பான். முடிவில் இலங்கை 150-4.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக இர்பான் 2 இலக்குகளையும், மலிக், ரியாஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது பாகிஸ்தான். ஆரம்ப வீரர்களாக கபீஸ் மற்றும் சர்ஜீல் கான். பந்துகளுக்கு ஏற்ப சராசரியும் சீராக நகர்ந்து கொண்டிருந்தது. அணியின் ஓட்டம் 23ஆக இருந்த வேளையில் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கபீஸ். கபீஸ் ஆட்டமிழந்ததுதான் தாமதம் அதிரடியை ஆரம்பித்தார் சர்ஜீல். திசர பெரேராவின் பந்துகளுக்கு நேற்று தாராளமாகக் கவனிக்கப்பட்டது. தொடர்ச்சியாக மூன்று பவுண்டரிகளையும் ஒரு சிக்சரையும் விளாசித் தள்ளினார் சர்ஜீல். அகமட்டும் சராசரியை சீராகப் பேணிக்கொண்டிருந்தார். 31 ஓட்டங்களுடன் டில்சானின் சுழலில் சிக்கினார் சர்ஜீல். சர்ஜீலின் சராசரியைக் கையிலெடுத்து ஆட்டத்தின் போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார் அகமட் செசாட். செசாட்டை வெளியேற்றினார் சிறிவர்தன. மலிக், அக்மல் இணைய வெற்றி வீதம் பாகிஸ்தானுக்கு 90ஆகவும் இலங்கைக்கு 10ஆகவும் காட்டப்பட்டது. பெரேராவின் அபார பிடியெடுப்பால் அரைச்சதத்தை 2 ஓட்டங்களால் தவறவிட்டார் உமர் அக்மல். இருப்பினும் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் மலிக்.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக ஜெயசூரிய, டில்சான், சிறிவர்தன, குலசேகர நால்வரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். உமர் அக்மல் ஆட்டநாயகனானார். (ம)



போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
கிராமசேவகர் மற்றும் சமுர்த்தி
பிரதி சனி
12.30 → 5.00 மணி
சமுர்த்தி
பிரதி சனி
2.00 → 5.00 மணி
சட்டக்கல்லூரி நுழைவு
பிரதி ஞாயிறு
2.00 → 5.00 மணி
சுங்கத்திணைக்கள உத்தியோகத்தர்
பிரதி ஞாயிறு
1.00 → 5.00 மணி
SLAS SLEAS
பிரதி ஞாயிறு
9.00 → 4.00 மணி
சகல பரீட்சைகளுக்கும் 2ஆம் பிரிவு கிழமை நாள்களில்
பி.ப 5.00 → 6.30 மணிவரை நடைபெறுகின்றன
T.P: 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

## இமையாணன் மத்தியின் துடுப்பாட்டத்தொடர் இன்று

கரணவாய், மார்ச் 5

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மென்பந்து துடுப்பாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன. தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் குறித்த நேரத்திற்கு மைதானத்திற்கு வருகை தருவதன் மூலம் தொடரில் பங்குபற்றலாம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர். (ம-108)

மாபிள்ஸ்
ரெறாசோ
(Terrazzo)
மாபிள் பதித்தல்,
கிறனைற் (Granite)
சமையலறைத் தட்டுகள்,
கல்வெட்டுகள்,
நில வேலைகள்
நவீன முறையில்
செய்து தரப்படும்.

Since 1952
தொல்புரம்.
தொடர்புக்கு :
021 225 0186,
077 355 3372,
077 630 6733

## இல்லமெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று குறித்த பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் என்.மகேந்திரராஜ் தலைமையில் நடைபெறும் குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

## கிருஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் அரையிறுதிகள்

கரணவாய், மார்ச் 5

கரவெட்டி கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கரணவாய் கொலின்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

முதலில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும், தொடர்ந்து இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் செவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)





## வென்றது
### மன்செஸ்டர் யுனைற்ரெட்




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் மன்செஸ்டர் யுனைற்ரெட் அணி வெற்றிபெற்றுள்ளது.

மன்செஸ்டர் யுனைற்ரெட்:, வட்போர்ட் அணிகளுக்கிடையிலான இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் கோல்கள் எவையும் பதியப்படவில்லை. ஆட்டத்தின் 83 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியின் ஜுவான் முதல் கோலையும் ஒரே கோலையும் பதிவுசெய்ய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைற்ரெட் வெற்றிபெற்றது.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியில் வேலை வாய்ப்புக்களை பெறுவதற்கு வங்கியியல் கற்கைநெறிகள்
IABF & DABF
Medium: Tamil & English
Minimum qualification: G.C.E.O/L
6 Passes including 5 credits
பட்டயக்கணக்காளர் ஆவதற்கு
Chartered Accountancy
Executive Level, Business level
Medium :- Tamil & English
Minimum qualification :- G.C.E.
A/L 3 Passes
Further Details: Jaffna College
Undergraduate Dept.
464,Hospital Road,
Jaffna.
Contact TP NO 021 222 3382,
021 222 9149

## நல்லூர் கோட்ட பாடசாலைகளின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 5

நல்லூர் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது, 17வயது, 19வயது பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளன.

15வயதுப்பிரிவினருக்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியைஎதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

17 வயதுப்பிரிவினருக்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியலாய அணி மோதவுள்ளது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

19 வயதுப்பிரிவினருக்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. (ம-23)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org